KALKI
1.6.2006 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் களிக்க...






"வைகோவால் அ.தி.மு.க. வலிமை பெற்றது!"



இமயத்தை மிஞ்ச
மலைகள் இல்லை...
சாரதா'ஸ் புடவையை
மிஞ்ச எதுவும் இல்லை..!
SS-119
SK-303
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங், 827, மவுண்ட்ரோடு (தேவிதியேட்டர் எதிரில்
சென்னை-2, போன்:28521177.



புதுப்பேட்டை

ரௌடிகளோட இருட்டு உலகத்தை ஆழ அகல உழுது ஆராய்ச்சி செய்ற இன்னொரு வழக்கமான தமிழ்ப்படம். இயக்குநரோட டச்தான் இதன் முகத்தை வேறுபடுத்திக் காட்டுது.

ஒரு படத்துக்குத் தப்பான ஹீரோவைத் தேர்வு செஞ்சுட்டு ஆயிரம் ஜாலம் செஞ்சாலும் கதை நிக்காது. புதுப்பேட்டை இதுக்கொரு நல்ல உதாரணம். தனுஷ் ஆயிரம் மெனக்கெட்டாலும் கேரக்டருக்கு ஏற்ற உடல்வாகு இல்லாதது பெருங்குறை. அதே போலத்தான் சோனியா அகர்வாலை வலுக்கட்டாயமா காட்சிகளுக்கிடையே நுழைச்சதும்.

பாலகுமாரனின் குறைவான வசனங்களும் கோலாபாஸ்கரின் 'வெடுக்' எடிட்டிங்கும் அர்விந்த் கிருஷ்ணாவின் அண்டர்கிரவுண்ட் வாழ்க்கையைக் கண் முன்னே நிறுத்தும் ஒளிப்பதிவும் காட்சிகளுக்குப் புதுப் பரிமாணம். முக பாவங்களும் இசையுமே படத்தில் பல பக்க வசனங்களைப் பேசி விடுகின்றன. யுவனோட இசை, மிரட்டல். பின்னணி இசை புது அனுபவம். ஆனாலும் சில இடங்கள்ல மேற்கத்திய படங்களோட சாயல்ல இசை அமைந்திருப்பது குறைதான்.


ஒரு ரௌடிக்கு இப்படியும் இல்வாழ்க்கை அமையும்ங்கிறதை இரு நாயகிகளான சிநேகாவும் சோனியாவும் வெளிப்படுத்தியிருக்காங்க. சிநேகா அழகுல மயங்கி தனுஷ் 'பெரிய தல'யைப் போட்டுத் தள்ளுவதும் அதன்பிறகு சீனியர் மோஸ்ட் ரௌடியா வளர்ந்து அரசியல்ல நுழைஞ்சு எதிர்கட்சிக்கு உதவுறதும் கலக்கல் மேளா. நம்மதான் ஜில்லா ரௌடிங்கிற தனுஷோட நினைப்பு அரசியல் கட்சி பொதுக்குழுவுல டார் டாரா கிழியும்போது தனுஷுக்கு ஏற்படற அதே அதிர்வு ஒரு ரசிகனுக்கும் ஏற்படறது இயக்குநரோட வெற்றி.

இப்படிக் கதையை நூல் பிடிச்சா மாதிரி கொண்டு போற செல்வராகவன், இடைவேளைக்குப் பிறகு தடம் புரண்டுட்டாரு. தனுஷ் இரு கட்சிகளுக்கிடையேயும் தள்ளாடுற நிலைமைதான் படத்துக்கும். சோனியா அகர்வால் மனநல காப்பகத்துல இருக்காங்கன்னு கடைசியில ஸ்லைடு போடறது உச்சகட்ட காமெடி.

ரீலுக்கு ரீல் ரத்தம் கொப்பளிச்சு நடுங்க வைக்கிற இந்தப் படத்துக்கு தணிக்கைக் குழு யூ/ஏ சான்றிதழ் (மட்டும்) கொடுத்திருப்பது ஆட்சேபத்துக்குரியது.

செல்வராகவன் தமிழ்சினிமாவை வெளிநாட்டுப் படங்கள் வரிசைக்கு நகர்த்த ஆசைப்படுவது வாஸ்தவம்தான். அதுக்காக 'மேக்கிங்'கில் மட்டும் மெனக்கெட்டா போதாது.

\- லஜ்ஜாவதி



கேப்டன் வழி தனி வழி!

"அட என்னாப்பா இது... இந்தம்மா சி.எம்மா இருந்தா மந்திரிய மாத்துது... சும்மா இருந்தா எதிர்கட்சித் தலைவரை மாத்துது..."

இந்த டயலாக்கை உதிர்த்தது கோட்டைக்கு வந்திருந்த ஒரு உடன்பிறப்புதான். கோட்டை இப்போ அப்படியே தலைகீழா மாறிடிச்சுப்பு. அம்மா ஆட்சியில இருக்கறப்போ அம்புட்டு ஈஸியா கோட்டைக்குள்ள யாரையும் விட்டுட மாட்டாங்க. ஆனா இப்போ ரொம்ப கெடுபிடி பண்றதில்ல.



முன்னால ரத்தத்தின் ரத்தங்கள்தான் கோட்டை பூரா கரைவேட்டி சகிதம் நீக்கமற நிறைஞ்சிருப்பாங்க. ஆனா இப்போ உடன் பிறப்புங்க தலைதான் எங்க பார்த்தாலும் தெரியுது. எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்கா கதர்ச்சட்டைகளும் அங்கங்க கண்ணுல படுது.

முன்பைவிட மந்திரிங்க எண்ணிக்கை இப்போ அதிகரிச்சுடுச்சில்ல. அதனால மந்திரிங்களோட கார்களை நிழல்ல நிறுத்தணுங்கறதுக்காக எக்ஸ்ட்ரா ஷாமியானால்லாம் போட்டு வச்சிருந்தாங்க. அதே போல மந்திரிங்க ரூம்களோட எண்ணிக்கையும் கூடியிருக்கு. போன ஆட்சியில சும்மா இருந்த ரூம்களை எல்லாம் தூசுதட்டித் தந்திருக்காங்க.

தலைமைச் செயலக ஊழியர்கள் ரெண்டு மூணு பேர் கிட்ட பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். அவங்கல்லாம் ரொம்ப சந்தோஷமா இருக்காங்கப்பு.


"'பகை முடிக்கும் பணி முடிப்போம்'னு சக ஊழியர்களுக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பியே அரசு ஊழியர் வோட்டுகளை இந்தக் கூட்டணிக்குக் கொண்டு வந்து கலைஞரை முதல்வராக்கி இருக்கோம். அதனால எங்களுக்கு நல்லது நடக்கும்னு நம்பிக்கை இருக்கு" என்று சொல்லிவிட்டு, 'அவர் கிட்ட பேசினா பெரிய விஷயம் ஏதும் சொல்வாரு'ன்னு இன்னொருத்தரைக் கைகாட்ட, அவர்கிட்ட போயி, "ஏன் சார்... சபைக் காவலர்கள் நிறைய பேரை மாத்திட்டாங்க"ன்னு கேட்டேன்.

"பொதுவா ஆட்சி மாறினா ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளை மாத்துவாங்க. இப்போ அந்த கேடருக்கு சபை மார்ஷல்களையும் மாத்திட்டாங்க போல"ன்னு நக்கல் விட்டுட்டு, மேட்டருக்கு வந்தாரு. "சார்... அம்மா ஆட்சியில கலாட்டா நடக்கறப்போல்லாம் மார்ஷல்கள் என்ணுன்னா எண்ணெய்யா இருப்பாங்க. ஆனா கலாட்டா நடந்த அன்னிக்கு கொஞ்சம் ஏனோதானோன்னு நடந்துக்கிட்டாங்க. அதனாலதான் தூக்கிப்புட்டாங்க. இன்னும் ஏகப்

ஒற்றன்

பட்ட பேரை தூக்கப் போறாங்க''ன்னு சொல் லிட்டு நகர்ந்தாரு.

நான் கோட்டை விசிட் போன அன்னிக்குத் தான் சஸ்பெண்ட் ஆன எம்.எல்.ஏக்களை கோட் டைக்குள்ள விடாம தடுத்து, ஏகப்பட்ட கலாட்டா ஆயிடிச்சு. சம்பவம் நடந்தப்போ ஒவ் வொரு எம்.எல்.ஏ முகத்தையும் பார்க்கணுமே... அடேயப்பா... தங்களோட உரிமையை நிலை நாட்டறதுக்காக படாதபாடு பட்டுட்டாங்க. முன் னாள் மந்திரி சண்முகம் ஆவேசமா பேசனதை அன்னிக்குத்தான் பார்த்தேன். அவர் பேசன பேச்சுல போலீஸ்காரங்க கொஞ்சம் ஆடித்தான் போய்ட்டாங்க. பிரச் னைல்லாம் முடிஞ்சு எல் லாரும் ஓபிஎஸ் கூட நடந்து போனாங்க. அப்போ ஒரு எம்.எல்.ஏ பேசனது என் காதுல விழுந்துச்சுப்பு...



• பாண்டுரங்கன்

"ஏம்பா... நம்ம பாண்டு ரங்கன் ஜெயிச்சப்போ பச்ச புள்ளையாட்டம் அழுதாரு. இன்னிக்கு என்னன்னா ஏ.சிகிட்ட மல்லுக்கு நிக்க றாரு. எனக்கே ஆச்சர்யமா போயிடிச்சு''ன்னு சொல்ல, பக்கத்துல இருந்தவங்கல்லாம் சிரிச்சுக்கிட்டே நடந்தாங்க.

பொதுவா சபைக்குள்ள போறவங்க, வர்றவங்க செக்யூரிட்டி காரணத்துக்காக மெட்டல் டிடெக்டர் கேட் வழியா வருவாங்க. ஆனா பெரும்பாலான வங்க அலுப்பு பட்டுக்கிட்டு அப்படி வரமாட் டாங்க. ஆனா நம்ம கேப்டன் அந்த வழியாவே வந்து, திரும்ப அதே வழியாவே கிளம்பினாருப்பு."

"அண்ணாச்சி... அம்மா இனிமே ரெகுலரா சபைக்கு வரப்போறாங்க... அதனால அம்மா வர்றப் போல்லாம் நாம கரெக்டா கோட்டைக்கு வந்துட ணும்... வர்றப்போ கரைவேட்டி கட்டிக்கிட்டு வராத... அப் படியே வாசல்லயே கட்டங் கட்டி அனுப்பிடுவா னுங்க... அதனால சாதா வேட்டியே கட் டிக்கிட்டு வா''ன்னு ஒரு ரத்தம் எச்சரிக்கை கொடுக்க, "சர்தான் தல நீ சொல்றது''ன்னு தலையாட் டிட்டுக் கிளம்பினாங்க ரெண்டு பேரும்.



கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

பேட்டி என்றதுமே ''ஆளை விடுங்க, ஏதாவது சர்ச்சையில் மாட்டிவிடப் போறீங்க'' என்று நழுவப் பார்த்தார் கிருஷ்ணசாமி. நமது அன்பு வேண்டுகோளுக்கு இணங்கி மனம்திறந்து பேசினார்.

காங்கிரஸ் முன்னெப் போதையும் விட இப்போது பலமாக இருக்கிறது. இந்த நிலையில் காமராஜர் ஆட்சி அமைய வேண்டும் என்ற காங்கிரஸாரின் விருப் பத்தை நிறைவேற்ற என்ன செய்யப் போகிறீர்கள்?

''கட்சி, மக்களிடையே செல்வாக்கு பெற்றால் அதிகாரம் தானாகவே வந்து சேரும். எனவே என் முழுக் கவனமும் இப்போது கட்சி வளர்ச்சியில்தான் இருக்கிறது. அடிமட்ட அளவில் கிராம கமிட்டி, பூத் கமிட்டி போடுவதற்கான நடவடிக்கைகள் துவங்கியிருக்கின்றன. வட்டார கமிட்டி தலைவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கி, சுதந்திரமாக கட்சி வளர்ச்சிக்குப் பாடுபடச் சொல்லுவோம். வரும் உள்ளாட்சித் தேர்தலில் தமிழகம் முழுவதும் பரவலான அளவில், எல்லா மட்டங்களிலும் கட்சி போட்டியிடும் அளவுக்கு, கட்சியின் செல்வாக்கை உயர்த்துவோம். தமிழக காங்கிரஸில் உள்ள அனைத்துத் தலைவர்களும் இந்த முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பைத் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.''



''ஜெ.வுக்குப்

அதிகாரத்தில் இருந்தால் கட்சியின் இமேஜ் வளருமே... தமிழக அரசின் அதிகாரத்தில் காங்கிரஸ் பங்கு பெறுவது எப்போது?

''அமைச்சரவையில் சேருவது, அதிகாரத்தில் பங்கு பெறுவது ஆகியவை பற்றியெல்லாம் கட்சி மேலிடம்தான் முடிவு செய்யும். தமிழக காங்கிரஸ் தொண்டர்களின், பிரமுகர்களின் உணர்வுகளை மேலிடத் தலைவர் வீரப்ப மொய்லி நன்கு அறிவார். தமிழக காங்கிரஸ் தலைவர்கள் அன்னை சோனியாவிடமும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவர் எடுக்கும் முடிவே இறுதி முடிவு.''

தேர்தலுக்கு முன்பு கூட்டணி அமைக்கும்போது 'சீட்டுகளை வேண்டு

பக்குவம் வேண்டும்!”

மானாலும் அதிகமாக வாங்கிக் கொள்ளுங்கள், அதிகாரத்தில் பங்கு கேட்கக் கூடாது' என்று தி.மு.க. உங்களுக்கு நிபந்தனை விதித்தது என்கிறார்களே!

"நல்ல கற்பனை. தி.மு.கவுடனான எங்கள் உறவு, பரஸ்பர நட்பு மற்றும் தோழமை உணர்வுடன் கூடியது. 'ஜெயலலிதாவை ஆட்சியை விட்டு அகற்ற வேண்டும்' என்ற முனைப்போடு அமைந்த கூட்டு. நீங்கள் சொல்வது போன்ற நிபந்தனைக்கு இடமே இல்லை."

காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்று தீர்மானம் போட்டார்களே?

"தமிழக மக்கள், தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வரவேண்டும் என்று வாக்களித்திருக்கிறார்கள். மக்களுடைய ஆசையும், எதிர்பார்ப்பும் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் ஜனநாயக முற்போக்கு அணியில் உள்ள கட்சிகள் அரசில் சேர வேண்டும்; அமைச்சரவையில் பங்கு பெறவேண்டும். அப்போதுதான் அரசு நிலைத்த தன்மையுடன் நீடிக்கும்'- இதுதான் எங்கள் எம்.எல்.ஏக்கள் நிறைவேற்றிய தீர்மானம்.

'தி.மு.க. கொடுத்த வாக்குறுதிகள் சில நிறைவேற்ற முடியாதவை; எனவேதான் காங்கிரஸ் மேலிடம் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ளத் தயங்குகிறது' என்ற ஒரு பேச்சும் இருக்கிறதே!

"தேர்தல் பிரசாரத்தின்போது நிதி அமைச்சர் சிதம்பரம், தி.மு.க. சொல்லியிருக்கிற வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றக் கூடியவைதான் என்று பேசியிருக்கிறார். மக்கள், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு வோட்டுப் போட்டிருப்பதால் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், கூட்டணிக்கட்சி என்ற முறையில் எங்களுக்கும் பொறுப்பிருக்கிறது. 'தில்லியில் இருப்பதுபோல, தமிழகத்திலும், ஒரு குறைந்தபட்ச செயல் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்' என்று கூட எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் போட்டுள்ளனர். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் கிலோ அரிசி இரண்டு ரூபாய், விவசாயிகள் கடன் தள்ளுபடி, சத்துணவில் இரண்டு முட்டை என்று ஆணைகள் போட்டு நன்றாகவே துவங்கியிருக்கிறார் கலைஞர்."

'காட்டுமிராண்டிகள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்' என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறாரே!

"அ.தி.மு.கவினர் என்ன புத்தர்களா? ஜெயலலிதா நாகரிகமாகப் பேசுவதற்கு கற்றுக் கொள்ளட்டும். ஒரு முன்னாள் முதலமைச்சருக்குப் பக்குவம் வேண்டும்."

திடீர்த் திருப்பங்கள் அரசியலில் சகஜம். அந்த வகையில் ஜெயலலிதாவோடு காங்கிரஸ் மீண்டும் நெருக்கமாவதற்கு வாய்ப்பு உண்டா?

"தமிழ்நாட்டில் 2004-ம் வருடம் பாராளுமன்ற தேர்தலையொட்டி அமைந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் காங்கிரஸ் முக்கிய அங்கம் வகிக்கிறது. பாராளுமன்ற தேர்தலில் பலத்த அடிவாங்கிய அ.தி.மு.கவை சட்டமன்ற தேர்தலில் ஆட்சியிலிருந்தே விரட்டி விட்டோம். இனி கடந்த ஐந்து வருடங்களாக முடங்கியிருந்த தமிழகத்தைத் தலைநிமிர்த்த வேண்டும். அந்தப் பணியில் நாங்கள் முழு மூச்சுடன் ஈடுபடுவோம். ஏற்கெனவே சொன்னது போல எங்கள் அணி தோழமை உணர்வோடு, நட்பின் அடிப்படையில் தொடர்ந்து செயல்படும். வேறு சிந்தனைக்கே இடமில்லை."

- ப்ரியன்

படங்கள் : **ராஜன்**

‘சண்முகர்’ டிகிரி!



1989-ம் ஆண்டு திருச்செந்தூரில் நடைபெற்ற ஆவணிப் பெருவிழாவில், மஹா பெரியவர் சார்பாக நான் கலந்து கொண்டேன். சண்முகர் சன்னதியில் அர்ச்சனை செய்து, பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு அடுத்தநாள் காஞ்சிபுரம் திரும்பினேன். சங்கர மடத்தில் மஹா பெரியவரைச் சந்தித்த போது, "தரிசனம் கிடைத்ததா?" என்று கேட்டார். ''தங்கள் அனுக்கிரஹத்தினால் சிறப்பான தரிசனம் கிடைத்தது'' என்று கூறி பிரசாதங்களை பெரியவர்முன் சமர்ப்பித்தேன்.

திருச்செந்தூர் ஆலய வழக்கப்படி பிரசாதங்களை ஒரு தாழம்பூ பெட்டியில் தந்திருந்தார்கள். பெரியவர் மூடியை எடுத்து வைத்துவிட்டு, பன்னீர் இலை விபூதிக் கட்டிலிருந்து ஒவ்வொரு இலையாகப் பிரித்து விபூதியை எடுத்து அணிந்து கொண்டார். பின்பு சண்முகருக்கு சாத்திய பச்சைப்பட்டினை எடுத்து போர்த்திக் கொண்டும், ருத்ராட்ச மாலையை அணிந்து கொண்டும் எழுந்து நின்று எதனையோ சுற்றும் முற்றும் தேட ஆரம்பித்தார்.

அவரைச் சுற்றியிருந்த அனைவரும் பெரியவர் எதனைத் தேடுகிறார் என்று பிடிபடாமல் நின்று கொண்டிருந்தனர். மஹா பெரியவர் கீழேயிருந்த தாழம்பூ பெட்டி மூடியை எடுத்துக் கொண்டு, பச்சைப் பட்டினை சிரசுவரை போர்த்தி தனது சிரசின்மேல் மூடியை அணிந்து கொண்டார்! பின்பு அதன் மீது சிறிய தலையணையும் வைத்துக்கொண்டார். ‘என்ன அலங்காரம் இது?’ என்று புரியாமல் அனைவரும் வைத்த கண் வாங்காது பெரியவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

மஹா பெரியவர், தன்னுடைய அலங்காரம் எப்படியிருக்கிறது என்று ஜாடையில் கேட்டார். மணியம் சுவாமிநாதன், ''தங்களுடைய அலங்காரம் என்னவென்று புரியவில்லை. தாங்களே விளக்க வேண்டும்'' என்று கோரினார். பெரியவரும் '' ‘சண்முகர் டிகிரி’ பெற்றதற்கான பட்டமளிப்பு விழா டிரெஸ்'' என விளக்கிச் சொன்னார். பக்தர்கள் உணர்ச்சி மேலீட்டால் ஜெய கோஷமிட்டனர். ''இதே அலங்காரத்தில் படமெடுத்துக் கொள்கிறோம்'' என்ற மணியம் சுவாமிநாதனின் வேண்டுகோளையும் ஏற்றுக் கொண்டார். இதுதான் மேற்காணும் புகைப்படத்தின் கதை.

- அ. சீனிவாசன்

ஸ்ரீ மஹாபெரியவர் ஜெயந்தி 10.6.06

அரிவாள்மனையுடன் வந்தவன்!

22

'தி சர்க்கஸ்' படத்துக்காக ஒரு முறையும், 'தி லைம் லைட்' படத்துக்கு இசையமைத்ததற்காக ஒரு முறையும், 'வாழ்நாள் சாதனையாளருக்காக' ஒருமுறையும் என மூன்றுமுறை 'ஆஸ்கர்' விருது பெற்ற ஒரே நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின்.

- சார்லி சாப்ளின் கதை

சிங்கமுத்துக்குப் பதில் தங்கமுத்து ஒத்திகைக்கு வந்தான். 'பேய்வீடு' கலகலப்பானது. அந்தப் பேய் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஒருவேளை எங்கள் நடிப்பைப் பார்த்து அது தூக்குப் போட்டுச் செத்திருக்கலாம்.

நாடகத்தன்று முதல் நாள் யாருமே தூங்கவில்லை. மணி தெருவையே நாடக அரங்கமாக்கினான்.

பள்ளிக்கூட பெஞ்சுகள் பார்வையாளர்களின் பெஞ்சுகளாயின.

பள்ளிக்கூடமணி, சினிமாமணியால் நாடக மணி ஆயிற்று (என்ன மணி மணியாய் எழுதுகிறேன் பாருங்கள்).

முதல் நாள் ஒலிபெருக்கி கட்டப்பட்டு அதில் மணி முழங்கிக் கொண்டிருந்தான். "தாய்மார்களே, பெரியோர்களே, அண்ணன்களே, தங்கைகளே, தங்கங்களே, சிங்கங்களே நீங்கள் இதுவரை கண்டும் கேட்டுமிருக்காத நாடகக்கதை, புத்தம் புது நடிகர்கள், மனத்தை மயக்கும் வசனங்கள், நாளை இதே நேரத்தில்... இதே இடத்தில் மறந்து விடாதீர்கள், மறந்தும் வீட்டில் இருந்து விடாதீர்கள்..." போர் முரசு கேட்ட வீர மறவர்கள் போல நாங்கள் தயாரானோம்.

மேடை தயார். மைக் செட் தயார். எல்லா வீட்டுப் பையன்களும் நடிப்பதால் அத்தனை வீட்டு ஆண்கள், பெண்



கள், குழந்தைகள், எனப் பார்வையாளர் களும் தயார்!

நாங்கள் தயாரா? முத்துராக்கு பல்வேறு வகையான ஒப்பனைப் பொருட் களைக் கொண்டு வந்து ஒவ்வொரு நடிகனையும் ஒன்பது வண்ணங்களில் ஜொலிக்க வைத்துக் கொண்டிருந்தார். மொத்தமே ஏழு வண்ணங்கள்தானே? என்று கேட்கிறீர்களா?

ஓடியாடும் அவரின் கால்வண்ணம் எட்டு...

ஒப்பனை செய்யும் கைவண்ணம் ஒன்பது...

விளக்குகள் அணைக்கப்பட்டு, திரை மேலேறியது. விசில் சத்தம் காதைப் பிளக்க நாடகம் தொடங்கியது.

திரை விலகுவதற்கு முன்பாக எங்க ளோடு நடித்த 'டிங்கு' என்பவன் நாட கத்துக்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த் துப் பயந்து, "இத்தனை பேருக்கு மத்தியில் நான் நடிக்க முடியாது" என்று தகராறு செய்தான்.

நான் உடனே அவனைப் பார்த்து, "நேத்து ரிகர்சலில் நீ தானடா வெளுத்து வாங்கினாய். நீ தொடர்ந்து நடித்து நடிகனாகி ஜனாதிபதி விருது வாங்கலாம்" என்றேன். ஆனால் அவனோ, "நேத்து ரிகர்சலில் நாம மட்டும்தான் இருந்தோம். இத்தனை பேருக்கு முன்னால் நடிக்க வேண்டுமென்று நீ சொன்னாயா?"- என்றான். இதற்குள் சினிமா மணி எங்கி ருந்தோ ஒரு கூலிங்கிளாசைக் கொண்டு வந்து அவன் கண்களில் மாட்டி விட் டான்.



கு.ஞானசம்பந்தன்

''போடா மேடைக்கு. இந்தக் கண்ணாடியால உனக்குக் கண்ணும் தெரியாது. கீழ இருக்கிறவனுக்கு நீ யாருன்னும் தெரியாது'' என்று மேடைக்குள் தள்ளி விட்டான்.

அதுவரை டிங்குவை அப்படி ஒரு தோற்றத்தில் பார்க்காத எங்களூர் சனங்கள் அபாரமாகக் கைதட்டினார்கள்.

''பாலும் பழமும் சிவாஜி மாதிரியே இருக்கான்டா'' என்று கீழிருந்து ஒருவன் கத்தினான். (பாலும் பழமும் படத்தில் சிவாஜி கணேசனுக்குப் பாதிப் படத்துக்கு மேல் பார்வை தெரியாது).

கீழிருந்து கைதட்டும் ஆரவாரம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அதில் கடைசிவரை விடாமல் கைதட்டிக் கொண்டிருந்தவர்கள் டிங்குவின் அப்பாவும், அம்மாவும்தான்.

நாடகத்தின் நடுவில் ரௌடிகளில் ஒருவனான 'சுக்கு' என்கின்ற சுப்பிரமணி கத்தியோடு வந்து எங்களை மிரட்ட வேண்டும் என்பது காட்சி. அந்தக் கத்தியை நாங்கள் தயார் செய்யவில்லை. நாங்கள் உள்ளே திரும்பிப் பார்த்து சொந்த வசனம் பேசிக் கொண்டிருந்தோம்.

சுக்கு மேடையின் பின்புறமாக இறங்கி 'கத்தி! கத்தி!' என்று வீடுவீடாகக் கத்தி, யார் வீட்டிலோ அரிவாள்மனையை வாங்கிக்கொண்டு மேடையின் முன்புறமாக ஏறி, திடீரென்று எங்கள் மத்தியில் குதித்து 'டாய்' என்றொரு சத்தம் கொடுத்தான்.

நாங்கள் உண்மையிலேயே மிரண்டு போய் நிற்க, அந்த அற்புதமான நடிப்பைக் கண்டு கீழிருந்த கூட்டம் ஆரவாரமாய் ரசித்துக் கைதட்டியது.

நாடகத்தின் நடுவே ஒருவன் முக்கியமான ஒரு செய்தியை என் காதில் சொல்ல வேண்டும். 'கவலைப்படாதே! நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று நான் சொல்ல வேண்டும்.

ரகசியம் சொல்ல வந்தவனுக்கு அந்த ரகசியம் மறந்துபோய் என் காதருகே வந்து, 'உங்க அப்பா கோபத்தோடு கூட்டத்தில் நிக்கறார்டா' என்று சொல்ல, நான் கவலைப்பட்டுத் திகிலோடு திகைத்து நிற்க, சினிமாமணி விசில் கொடுத்து விளக்கை அணைத்து திரையை இறக்கினான்.

அடுத்தடுத்த காட்சிகள் விரைந்து சென்றன. ஒரு வழியாக நாடகம் முடிந்து கடைசிக் காட்சி நடந்து முடிந்தவுடன், மைக்கில் சினிமாமணி ''எல்லோரும் அப்படியே அமருங்கள்! நாடக நடிகர்களை உங்களுக்கு அறிமுகம் செய்யப் போகிறோம். பெரியவர்களுக்கு மரியாதை செய்யப் போகிறோம்'' என்று சொன்னான். கூட்டத்திலிருந்த என் தந்தையை அன்போடு வரவழைத்து அவருக்குப் பெரிய மாலையும் போட்டு, நடித்த நடிகர்களை எல்லாம் அறிமுகம் செய்து முடித்தவுடன், முத்துராக்கு வந்து பெரிய பூசணிக்காயில் கற்பூரம் வைத்து 'படீர்' என்று உடைத்து எங்களுக்கு திருஷ்டி கழித்தார். திருஷ்டியும் கழிந்தது. என் தந்தையாரின் அன்றைய கோபத்திலிருந்து நானும் தப்பித்தேன்.

எல்லோருமாய்ச் சேர்ந்து, 'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித்திரு நாடு' என்று பாரதியின் பாடலை உணர்வோடு பாடினோம்.

மறுநாளில் இருந்து ஊரில் எங்களுக்குத் தனி மரியாதைதான். வீடு வீடாக எங்களை விருந்துக்குக் கூப்பிட்டார்கள். நடு ரோட்டில் என்னைப் பார்த்த ஒரு கிழவனார், "நீ தான் அந்த நாடகத்துல பழூனாமே!" என்று ஆர்வமாய்க் கேட்டார்.

அன்று மாலை மணி வீட்டு மொட்டை மாடியில் எங்களுக்கு ஒரு சிறு விருந்தும், பாராட்டுக் கூட்டமும் நடந்தது. அதாவது, விருந்து மணி கொடுத்தான், நாங்கள் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டோம்.

நாடகத்தில் வசனத்தை மறந்தது. குழப்படி வந்து சக்கு அரிவாள்மனையோடு வந்தது. என்று நாங்கள் பேசிச் சிரிக்கும்போது முத்துராக்கு ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைத் தொடங்கினார்.

"தம்பி, எப்பவுமே நாடகத்தைக் காட்டிலும், ஒத்திகையில் நடக்கிற சம்பவமும் மேடையில எதிர்பாராம ஏற்படுகிற குழப்பமும் புதுசா நாடகம் போடுற நமக்கு மட்டுமில்ல பெரிய பெரிய நடிகர்களுக்கும் ஏற்படும்.

ஒருமுறை டி.கே.சண்முகம் அண்ணாச்சி நாடகக் குழுவுல இருந்து 'காலவரிஷி'னு புராண நாடகம் போட்டாங்க. மேடையில சடாமுடியோடு ஒரு ரிஷி உட்கார்ந்திருக்காரு. அவருக்கு முன்னாடி அவருடைய சிஷ்யர்கள் ரெண்டு பேர் (என்.எஸ்.கிருஷ்ணன், சுந்தரம் ஐயர்) கைகட்டிக்கொண்டு பவ்யமாக நிற்கிறார்கள். இவர்களுக்கு மண்டு, கமண்டு என்று பெயர்.

முனிவர் இரண்டு கைகளையும் உட்கார்ந்தபடியே முன்னே நீட்டி, ஏதோ யாசகம் பெறுவது போல கண்ணை மூடிக் கொண்டு மந்திரம் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்.

அப்போது காட்சிப்படி, ஆகாயத்தில் போன கந்தர்வர்கள் வெற்றிலைத் தாம்பூலத்தை அவர் கையில் துப்பிவிடுகிறார்கள். அவர் கோபம் கொண்டு சபிக்கிறார்.

இதில் என்ன ஆயிற்று தெரியுமா?" முத்துராக்கு ஒரு நிமிஷம் சஸ்பென்ஸ் விட்டுத் தொடர்ந்தார்.

(ரீல் சுற்றும்)

படம் : புதூர் சரவணன்



* உடையும்...

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33

? அம்மன் கோயிலுக்கும் செல்கிறார்; தி.க வீரமணியையும் சந்திக்கிறார். புரியாத புதிராக இருக்கிறாரே உமாபாரதி?

! அம்மன் கோயில் விஜயம் பக்தி அரசியல்; வீரமணி சந்திப்பு அரசியல் பக்தி.



* ... ஒப்பனையும்

● வி. ஷியாம், கும்பகோணம் ☐

? தயாநிதி மாறன் ஒரு மாதமாக தமிழக தேர்தலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அந்த மாத ஊதியத்தை நடுவண் அரசு அவருக்கு வழங்குவது நியாயமா?

! சம்பளம் அவருக்குச் சல்லிக்காசு!

பதிவான வோட்டுகளில் 8.38 சதவிகிதம் தே.மு.தி.க பெற்றுள்ளதைக் கவனியுங்கள். காலம் காலமாக வேரூன்றிய காங்கிரஸ் பெற்றதும் 8.38 சதம்தான் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள் தனித்துப் போட்டியிடாமல் புதியதொரு கூட்டணி அமைத்தால் தமிழகத்தின் சரித்திரம் மாறும் - சிந்தியுங்கள்!

● க.நா. ராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? சோனியாவும் ப்ரியங்காவும் உடை - ஒப்பனை அணிகலன்களில் எளிமையைக் கடைப்பிடிக்க குறிப்பாக ஏதாவது காரணம் உண்டா?

! காரணம் என்னவென்பது அவர்களுக்குத்தான் தெரியும். எளிமையான உடை - அலங்காரம் மூலம் வெளிப்படும் அவர்கள் ரசனை உயர்வானது என்பது நமக்குத் தெரியும்.

● அ. கஹைல் ரஹ்மான், திருச்சி - 21★

? 'திருட்டுப்பயலே' படம் பார்த்து, மனைவியை மன்னித்து, அவரது கணவர் ஏற்றுக்கொண்டாராமே?

'திருட்டுப்பயலே' பார்த்து

கிடைத்த பப்ளிஸிடி, மத்தியில் பேரம் பேசுவதற்கான செல்வாக்கு - இவையெல்லாம் அளவிட முடியாத மதிப்புடையன. தர்ம நியாயத்தை இந்தக் காலத்தில் யார் பார்க்கிறார்கள்? மனசாட்சியை மூட்டை கட்டி வைத்துவிட்டுத்தானே அரசியலுக்கே வருகிறார்கள்!

● ஏ.என்.பி. சாமி, சின்னபடூர்

? 233ல் போட்டி, ஒரே தொகுதியில் வெற்றி; நூறுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் டெபாசிட் போச்சு... இது ஒரு வெற்றியா? எல்லா பத்திரிகைகளும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு செய்தி போடணுமா?

! அறிமுகத் தேர்தலிலேயே மொத்தம்

* பக்தியும் அரசியலும்



! நாளைக்கே ஒரு 'முரட்டுப் பயலே' படம் பார்த்து மனைவியை மறுபடியும் புறக்கணித்தால் என்ன செய்வது? மன மாற்றம் ஆத்ம சோதனை அடிப்படையில் நடந்தால் சரி. உணர்ச்சிவசப்பட்டு எடுக்கும் முடிவுகள் எத்தனை நாள் நீடிக்கும்?

● எல். இரவி, செ.புதூர்

? சமீப காலமாக இலங்கை தமிழ் அகதிகள் தமிழகத்துக்கு வருவது அதிகரித்து வருகிறதே...?

! விடுதலைப்புலிகளும் இலங்கை

☐ ரூ. 100 பரிசு பெறுபவர்
வி. ஷியாம்,
1/121, சாரதாம்பிகை நகர்,
கும்பகோணம் 612 001

அரசும் மோதிக்கொள்ளும்போது இங்கு அகதிகள் வருகை தொடரத்தான் செய்யும். விடுதலைப்புலிகளுக்கு ஐரோப்பிய நாடுகள், பொருளாதார தடைகள் விதித்திருப்பதன் பயனாகவாவது இந்தக் கண்ணீர்க் கதைக்கு ஒரு முடிவு வருமா, பார்க்கலாம்.

● சிவ. இராமலிங்கம், தூத்துக்குடி

? ''என் கணவர் சட்டசபைக்குப் போவது நூறு பேர் போவதற்குச் சமம்'' என்று திருமதி விஜயகாந்த் கூறியுள்ளாரே?

! விஜயகாந்தின் கன்னிப்பேச்சை, சட்டசபையில் கவனத்துடன் கேட்டவர்கள், திருமதி விஜயகாந்தின் கருத்தை ஏற்பார்கள். அடுத்த தேர்தலுக்கு முன் நூறு தடவையாவது, சட்டமன்றத்தில் இதுபோல் ஆக்கபூர்வமாகப் பேசினால், நிச்சயம் நூறு பேருக்குச் சமம்தான்.

● ஆர்.எம்.ச.மலை, குடியாத்தம்

? ஆலயங்களில் முக்கிய பிரமுகர்களுக்குப் பட்டு - பரிவட்டம் கட்டும் முறையை தமிழக அரசு தடை

திருந்த முடியுமா...?

செய்திருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயமா சார்...?

! மக்களை மட்டுமே மகேசனாக எண்ணும் திராவிட கழகங்கள், முதலில் அரசியல் மேடையிலும் தலைவர்கள் இல்லங்களிலும் பொன்னாடை போர்த்தும் பழக்கத்தை தடை செய்து சட்டம் கொண்டு வரட்டுமே! சமத்துவம் கோயில்களில் மட்டும்தானா...? நல்ல மரபுகளை மீறுவது சட்டத்தை மீறுவது போன்றது தான்.

* ரூ 50 பரிசு பெறுபவர்
அ. சுஹைல் ரஹ்மான்
10, அரவிந்தர் தெரு,
கே.கே.நகர்,
திருச்சி 620 021

● க. வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி

? அ.தி.மு.க ஆட்சிக்கு வந்தால் தி.மு.க ஆட்சியின் திட்டங்களைக் கைவிடுவதும் தி.மு.க ஆட்சிக்கு வந்தால் அ.தி.மு.க ஆட்சியின் திட்டங்களைக் கைவிடுவதும் எதைக் காட்டுகிறது?

! கட்சி வேறு, ஆட்சி வேறு என்பதைப் புரிந்து கொள்ளாததை உணர்த்துகிறது. 'ஈகோ' இருக்கிறதே தவிர, மக்கள் நலனில் இருவருக்கும் அக்கறை இல்லை என்பதைக் காட்டுகிறது.

● அ. அப்துல்காதர்,
விளாத்திகுளம்

? ஊட்டி மலர் கண்காட்சியில் 'ஜெயலலிதா' என்று பெயர் சூட்டிய ரோஜா செடியை எடுத்துவிட்டதாகப் புகார் எழுந்துள்ளது பற்றி...?

! பூக்களின் வாசனையைக்கூட அரசியல் துர்நாற்றமாக மாற்ற நமது அரசியல்வாதிகளால்தான் முடியும்!

● கே.எஸ்.கோவர்த்தனன்,
சென்னை - 42

? தமிழக அரசு சகட்டுமேனிக்கு ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை மாற்றியுள்ளதே. இதனால் என்ன மாற்றம் ஏற்படப் போகிறது?

! ஆளுங்கட்சி விரும்புகிற இடத்தில் விரும்பும் நபர்கள் பொறுப்பில் இருப்பார்கள் என்கிற மாற்றம்தான்! ○



* சம்பளமும் செல்வாக்கும்



* வெற்றியும் வாய்ப்பும்



* ஒன்றும் நூறும்!



கல்கி



2006 ஜூன் 11
விய வைகாசி 28
மலர் : 64
இதழ் : 45


தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்.


சட்டசபையில் ஜெயலலிதா!

ஜெயலலிதா சட்டசபைக்கு வருகை தந்ததன் மூலம் ஆரோக்கியமான ஜனநாயக மரபுகள் மிக கௌரவமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. தமது கட்சி எம்.எல்.ஏக்கள் அனைவரும் அவை நீக்கம் செய்யப்பட்டதால் அவர் சட்டசபை கூட்டத் தொடரில் பங்கேற்க முடிவெடுத்தது வரவேற்கத்தக்கதே. அவ்வாறு அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிராவிடினும் ஜெயலலிதா சட்டமன்றத்துக்கு வந்திருக்கலாம் என்பது வேறு விஷயம். ஆனால், இப்படி ஒரு முகாந்திரம் கருதி அவர் சட்டசபைக்கு வந்ததற்கே இன்று தமிழகம் மகிழ்ந்துபோயிருக்கிறது.

இரு முக்கிய கட்சித் தலைவர்கள் நேருக்கு நேர் சந்தித்திருக்கிறார்கள் - மிக நீண்ட காலம் கழித்து! சபாநாயகர் ஆவுடையப்பன், எதிர்கட்சியினர் பேசுவதற்குப் போதுமான அவகாசத்தை ஒதுக்க வேண்டும் என்று கருணாநிதி அவரை வரவேற்றுப் பேசும்போதே கேட்டுக் கொண்டார். அதற்கேற்ப, ஜெயலலிதாவுக்கு, ஆளுனர் உரைமீதான விவாதத்தில் உரையாற்ற நேரம் ஒதுக்கப்பட்டது. ஜெயலலிதாவும் ஒரு சீரிய எதிர்கட்சித் தலைவராகச் செயல்பட்டு, குறிப்புகளையும் தயாரித்து எடுத்து வந்து, நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் வாக்குறுதி குறித்தும் விவசாய கூட்டுறவு கடன் ரத்து திட்டம் குறித்தும், அழுத்தமான, நியாயமான கேள்விகளை, புள்ளி விவரங்களின் துணையோடு எழுப்பியிருக்கிறார்!

''பொதுவாக, இவ்விவாதத்தின்போது எதிர்கட்சித் தலைவருக்கு முக்கால் மணி நேரம் முதல் ஒரு மணி நேரம்





வரை ஒதுக்குவது வழக்கம். ஆனால், எனக்கு அரை மணி நேரம்தான் ஒதுக்கப்பட்டது'' என்று அ.தி.மு.க. தலைவர் குறைபட்டுக் கொண்டாலும், இந்த விவாதத்தில் அவர் பேச எடுத்துக்கொண்ட நேரம் 42 நிமிடங்கள்! இதனை அவைத் தலைவர் அனுமதித்தும் இருக்கிறார்; அதிகம் குறுக்கிடாமல், உறுப்பினர்கள் அவர் உரையை முழுதும் கேட்டிருக்கிறார்கள்; உரிய கட்டத்தில் பதில்களும் அவருக்கு அளிக்கப் பட்டுள்ளன.

இதுபோன்ற ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான நிகழ்வுகளைத்தான் தமிழக சட்டசபையில் நாம் மேலும் மேலும் காண விரும்புகிறோமே தவிர, முதல் நாளே அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுப்பியது போன்ற ரகளையையும் வன்முறையையும் அல்ல!

தமது கட்சி எம்.எல்.ஏக்களுக்கு ஜெயலலிதா பாடம் நடத்தி வன்முறை, பழித்துப் பேசுதல் போன்றவற்றைத் தவிர்க்கச் செய்ய வேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்பு தீர்மானம், கேள்வி நேரம் போன்றவற்றை எப்படியெல்லாம் பயன் படுத்தலாம் என முன்கூட்டியே எதிர்கட்சி உறுப்பினர்கள் கலந்துபேசி, ஒரு திட்டம் வகுத்து, அதன்படி அவையில் இயங்க வேண்டும்.

எதிர்கட்சி என்பது வெறுமே எதிர்ப்பதற்கு அல்ல; நல்ல யோசனைகள் கூறி ஆளுங்கட்சியின் சிறந்த செயல்பாடுக்கு உதவுவதற்கும் ஆளுங்கட்சி தவறிழைக் கும்போது தட்டிக் கேட்பதற்கும் ஏற்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது, தி.மு.க.வுக்கு இப்படிப்பட்ட எதிர்கட்சியாக இயங்க சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அப்போதைய சபாநாயகர் இத்தகைய ஆரோக்கிய போக்குகளுக்கு இடமளிக்கவே இல்லை.

இன்று, ஆவுடையப்பன் அவைத் தலைமையில், அ.தி.மு.க.வுக்கு அர்த்தமுள்ள எதிர்கட்சியாக இயங்க வாய்ப்பு நிறைய உண்டு. அப்படி நடந்து கொள்வதற்குப் பதில், வீண் கூச்சல், கலாட்டா, வன்முறை என்று இறங்கிவிட்டு, அதற்குரிய தண்டனை பெறும்போது, ''ஜனநாயகப் படுகொலை'' என்று கூக்குரல் எழுப்பினால், அந்த நாடகத்தை மக்கள் நம்ப மாட்டார்கள். மக்களிடையே செல்வாக்கைத் திரும்பப் பெறும் அரிய வாய்ப்பையும் அ.தி.மு.க. தலைவர் இழந்து விடுவார். ○



அன்றைக்கு கொல்லம் ஆசிரமத்தில் தரிசனம் முடிவதற்கு இரவு இரண்டு மணி ஆகிவிட்டது. அன்று பகல் முழுவதும் கடலை ஒட்டிய கழிமுகப் பகுதியில் வேறு ஒரு இடத்திலிருந்து மணலைக் கொண்டு வந்து கொட்டி, மூடுகிற பணியில் ஆசிரமவாசிகளும் பக்தர்களும் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் விதமாக அம்மாவும் அன்று காலையில் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்தேன். அப்புறம் பக்தர்களுக்கு மதியம் வரை தரிசனம். பிறகு கொஞ்ச நேரம் ஓய்வு. அதன்பின் மாலை ஐந்து மணிக்கு அம்மா தரிசனம் அளிக்க வந்து விட்டேன். ஏராளமான பக்தர்கள் இருந்ததால் தரிசனம் இரவு இரண்டு மணி வரை நீடித்தது.

ஆசிரமவாசிகளும், பக்தர்களும் இன்னும் சிரமதானம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்ததும் நேரே அங்கு போனேன். ஏராளமான மணல் மூட்டைகள் வந்து இறங்கி இருந்தன. அம்மாவும் அவர்களுடன் சேர்ந்து மணலைச் சுமந்தேன். மற்றவர்கள் உற்சாகத்துடன் மணலைச் சுமக்க

ஆத்மாவின் பிரகாசம்!

மாதா அமிர்தானந்தமயி

ஆரம்பித்தாலும், அம்மாவை முதல் முறையாகச் சந்திக்க வந்திருந்த ஜெர்மன் நாட்டு பக்தர் மார்க்குக்குப் பொறுக்கவில்லை. அம்மாவின் கைகளிலிருந்த மணல் மூட்டைகளை வாங்க பலமுறை முயற்சித்தார். அம்மா அதற்கு அனுமதிக்கவில்லை.

இடையில் கிடைத்த கொஞ்சம் இடைவெளியில் அம்மா, மார்க்கை அருகில் அழைத்தேன். "மகனே! உன்னைப் பார்த்தது முதல் அம்மா ஒரு வார்த்தை கூட பேசவில்லையே என்று வருத்தமா?" என்று கேட்க, "அம்மா பேசவில்லையே என்று எனக்கு வருத்தம் கிடையாது. அம்மாவும், குழந்தைகளும் இப்படிக் கஷ்டப்படுவதைத்தான் எனக்குத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அம்மா அருள்புரிந்தால், என் சொத்து முழுவதையும் தந்து விடுகிறேன். அம்மா இப்படி இரவும் பகலும் கஷ்டப்படாமல் ஓய்வு எடுத்துக்கொண்டு, பக்தர்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருந்தால் போதும்" என்று சொன்னதைக் கேட்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அம்மா சொன்னேன் : "மகனே! இது ஆசிரமம். சுகவாச நிலையமில்லை. தியாகம் செய்யத் தயாராக உள்ளவர்களுக்குத்தான் இங்கே இடமுண்டு. ஆசிரமவாசி என்றால், ஆன்மிக இலட்சியத்துக்காக முயற்சி செய்பவன் என்று பொருள். ஆன்மிகத்தை விரும்புகிறவர்களுக்கு இந்த இடம் சொர்க்கமாகும். இங்குள்ள குழந்தைகள் பல காலமாக இப்படிக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதனை ஒரு கஷ்டமாக நினைப்பதில்லை. அவர்கள் இங்கு வந்தபோதே, அம்மா அவர்களிடம், 'நீங்கள் மெழுகு வத்தி போல் ஆகவேண்டும்' என்று சொல்லி இருக்கிறேன். மெழுகுவத்தி தான் உருகி, பிறருக்கு ஒளி தருகிறது. அதுபோல, நம்முடைய தியாகம், உலகுக்கு ஒளி வழங்க வேண்டும். அது நமது ஆத்மாவின் பிரகாசமாகும்."

எல்லோருக்கும், நாற்காலியில் அமர்ந்து செய்யும் வேலைதான் விருப்பமாக இருக்கிறது. உடலால் உழைக்க யாருக்கும் இஷ்டமில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு நாம் உதாரணமாக இருக்க வேண்டாமா? 'சமத்வம் யோக உச்யதே' என்றல்லவா பகவான் கூறி இருக்கிறார்? எந்த வேலையையும், இறைவனுக்குச் செய்யும் பூஜையாகக் கருதிச் செய்ய வேண்டும். இன்று அம்மா, உடலால் உழைப்பதைக் கண்டால், நாளைக்கு அவர்கள் எந்த வேலையையும் செய்வதற்குத் தயங்க மாட்டார்கள். ஆத்மா ஒன்றுதான் நிலையானது. ஆத்மாவை அறிய வேண்டுமானால், தியாகம் அத்தியாவசியமானது. தியாகம் செய்வதற்குத் தயாராக இருப்பவர்கள், வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையையும் அனுகூலமாக மாற்ற முடியும்.

ஒருவரால் இருபத்து நான்கு மணி நேரமும் இறைவழிபாட்டிலும், தியானத்திலுமே ஈடுபட முடியுமா? அவற்றுக்கான நேரம் போக, பாக்கியுள்ள நேரத்தில் நல்ல செயல்களைச் செய்ய

அன்பெனும் மழையிலே-9

வேண்டும். அது தகாத சிந்தனைகளைக் குறைக்க உதவும்.

நல்ல தார் ரோடு இருக்கிறது. விளக்குகளும் போட்டிருக்கிறார்கள். நம் கையில் கார் இருக்கிறது. அதற்காக நம் இஷ்டம் போல காரை ஓட்டிச் சென்றால், கார் எங்காவது மோதி, விபத்துக்குள்ளாகி மரணமடைய வேண்டியதுதான். சாலைகளில் பயணம் செய்கிறபோது, நாம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் சில உண்டு. அவற்றை நாம் கடைப்பிடித்தே தீர வேண்டும்.

அதுபோலவே, புலன் இன்பங்களெல்லாம் இறைவன் படைத்தவைதான். எனினும், அவை அனைத்திற்கும் ஒரு நியமம் உண்டு. அதன்படி வாழ வேண்டும். இல்லாது போனால், துன்பம் அனுபவிக்க நேரிடும். ஆகவே, உடலுக்குத் தேவையானதை மட்டும் சாப்பிடுங்கள்; அவசியமான அளவுக்கு உறங்குங்கள். பாக்கியுள்ள நேரங்களில், நற்செயல் புரியுங்கள். வாழ்க்கையில் ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காதீர்கள். உங்கள் வாழ்க்கை பிறருக்கு எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது என்பதில் கவனமாக இருங்கள்.

சாக்லெட் இனிப்பானதுதான். அது குழந்தை முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ரொம்பப் பிடிக்கும். அதற்காக அதை அளவுக்கு அதிகமாகச் சாப்பிடக் கூடாதில்லையா? மீறி சாப்பிட்டால், வயிற்றுவலியால் அவதிப்பட வேண்டியதுதான். எனவே சுகத்துக்குப் பின்னால் துக்கம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

(அன்பு பெருகும்)

அம்மா

சுதாமணியின் பக்தி சாதாரண மனிதர்களைப் போன்றதில்லை. அவர் தன்னை மறந்து தியானம் செய்வார். சில சமயங்களில் தேம்பித் தேம்பி அழுவார். மற்றொரு சமயம், சின்னக் குழந்தையைப் போல கைகளால் தாளமிட்டவாறு சிரிப்பார். தரையில் விழுந்து உருளுவார். காற்றைக் கூட 'கண்ணா!' என்றழைத்து அணைப்பார். சுதாமணியின் இத்தகைய உயர்நிலை பக்தியைப் பார்த்த அவரது குடும்பத்தினரும், ஊர்க்காரர்களும் அவருக்கு மனநோய் என்று முடிவு கட்டினார்கள். அப்போதும், சுதாமணியின் நோயைக் குணப்படுத்த அவர்கள் எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. அவரை அடக்கி வைக்க துன்புறுத்தல் நடந்தது.



இத்தகைய நடவடிக்கைகளால் மனம் நொந்த சுதாமணி கடலில் குதித்து உயிரை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்தார். உயிரை விடுவதற்கு கடலை நோக்கி ஓடினார். தண்ணீரை நெருங்கிய போது அவரை ஏதோ ஒன்று தடுத்தது. கடற்கரை மணலில் விழுந்து நினைவு இழந்தார். வெகுநேரம் கழித்து அவரை வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.

சுதாமணியைப் பைத்தியம் என்று சொன்னவர்கள் இருந்தாலும், அவர் மீது அன்பு காட்டி, அவருக்காக இரக்கம் காட்டியவர்களும் ஊரில் இருந்தார்கள்.

- மௌலி

முகம் சுளிக்க 72 தசைகள் – சிரிக்கவோ 14 தசைகள்
சிரிப்பு ஒரு டானிக்; கவலையைத் தணிக்கும் வலி நிவாரணி

தேவன்

துப்பறியும் சாம்பு	I & II	155.00
ஜஸ்டிஸ் ஜகந்நாதன்	I & II	140.00
மிஸ்டர் வேதாந்தம்	I & II	170.00
ஸ்ரீமான் சுதர்சனம்		65.00
ராஜத்தின் மனோரதம்		50.00
மிஸ் ஜானகி		75.00
சீனுப்பயல்		55.00
விச்சுவுக்குக் கடிதங்கள்		42.00
ஏன் இந்த அசட்டுத்தனம்		55.00
போக்கிரி மாமா		65.00
அப்பளக் கச்சேரி		50.00
ஐந்து நாடுகளில் 60 நாள் (3 பாகங்கள்)		260.00

எஸ்.வி.வி.

உல்லாச வேளை	65.00
சௌந்தரம்மாள்	65.00
கோபாலன் ICS	55.00
ரமணியின் தாயார்	40.00
ஹாஸ்யக் கதைகள்	40.00
செல்லாத ரூபாய்	32.00
சம்பத்து	63.00
வசந்தன்	40.00
புது மாட்டுப் பெண்	21.00
பொம்மி	23.00
சபாஷ்! பார்வதி!	25.00
வாழ்க்கையே வாழ்க்கை	45.00

சோ

கூவம் நதிக்கரையினிலே	II	45.00
கூவம் நதிக்கரையினிலே	III	27.00
எங்கே பிராமணன்?		100.00
முகமது பின் துக்ளக்		25.00
யாருக்கும் வெட்கமில்லை		35.00
இந்தியா எங்கே போகிறது?		12.00
துக்ளக் கேள்வி – பதில்	II	45.00
உண்மையே உன் விலை என்ன?		42.00
சாத்திரம் சொன்னதில்லை		30.00
சம்பவாமி யுகே! யுகே!		30.00
வெறுக்கத்தக்கதா பிராமணீயம்		30.00

ஜி.எஸ். பாலகிருஷ்ணன்

சிரிங்க சார்!	40.00
வசந்த சொப்பனங்கள்	32.00
பல்சுவைக் கதைகள்	60.00
சபாஷ்! சந்துரு!	30.00
சிரிப்பு – ஏன்? எதற்கு? எப்படி?	30.00
புடலங்காய் புரொபசர்	60.00

எஸ்.வி.கே.

பலே! பலே! கதைகள்	90.00
சபாஷ்! கதைகள்	90.00
பேஷ்! பேஷ்! கதைகள்	90.00

'துக்ளக்' சத்யா

நையாண்டிக் கட்டுரைகள்	40.00
அரசியலில் நகைச்சுவை	32.00
மாடசாமியின் மனசாட்சி	100.00
அரசியல் கலையை அறிந்து கொள்வோம்	45.00
நாடு தழுவிய நகைச்சுவை	50.00

எஸ்.வி. சேகர் in

கண்ணாமூச்சி
திரும்பி வந்த மனைவி
கிரேஸி தீவ்ஸ் இன் பாலவாக்கம்
ஒரு சொந்த வீடு வாடகை வீடாகிறது
ஒன் மோர் எக்ஸார்சிஸ்ட்
மகாபாரதத்தில் மங்காத்தா
காதுல பூ
காட்டுல மழை
யாமிருக்க பயமேன்
ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி
வால் பையன்
எல்லாமே தமாஷ்தான்
எல்லோரும் வாங்க
அதிர்ஷ்டக்காரன்
சின்ன மாப்ளே பெரிய மாப்ளே
பெரிய தம்பி
எப்பவும் நீ ராஜா
தத்துப் பிள்ளை
அல்வா
பெரியப்பா
குழந்தசாமி
மனைவிகள் ஜாக்கிரதை
சிரிப்பு உங்கள் சாய்ஸ்
இனிமே நாங்கதான்
எஸ்.வி. சேகர் பதில்கள் I & II
ஜுட்ஸ் ஜாலி I & II
நாட்டு நடப்பு I & II
7 மாதங்கள் 7 நாடுகள்

தனிப் பிரதி ஒன்றின் விலை ரூ.45.00

Dr. V. சொக்கலிங்கம்

நகைச்சுவையும் உடல் நலமும்	25.00

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
பழைய 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : 24 64 13 14
e-mail : srinivasan@alliancebook.com
visit us at : www.alliancebook.com

செல் 1: ஹாய் யாமினி

செல் 2: ஹாய் கிஷோர் என்ன பண்றே?

செல் 1: வண்டியை ஸ்டார்ட் பண்ணப் போறேன். நீ?

செல் 2: பஸ்ல ரெண்டாவது படிக்கட்ல ஏறப் போறேன்.

செல் 1: இன்னிக்குக் கட்டாயம் ஆபீஸ் போக ணுமா?

செல் 2: ஆமாம்பா. இல்லேனா அந்த எலி மூஞ்சு பாஸ் திட்டுவார்.

செல் 1: எனக்குப் போரடிக்குதுடா செல்லம்.

செல் 2: எனக்கும். சாப்டாச்சா?

செல் 1: ஆச்சு. நீ?

செல் 2: நானும். என்ன சாப்டே?

செல் 1: இட்லி, மொளா காப்பொடி. நீ?

செல் 2: தோசை. ஒரு நிமிஷம் இரு. ஆங்... ஒரு சீட் காலியாயிருக்கு.

செல் 1: என் வண்டி ஸ்டார்ட் ஆயிடுச்சு. இப்போ என்ன பண்ணிட்டிருக்கே?

செல் 2: ஜன்னல் வழியா வேடிக்கை பார்க்கறேன். நீ என்ன செய்யறே?

செல் 1: நான் சிக்னல்ல மாட்டிக்கிட்டேன். சரியான வெயில்.

செல் 2: ஆமாம்பா. தாங்க முடியலே.

செல் 1: ஏய்... பட்டூஸ், ஒரு பாட்டுப் பாடேன். கூலா இருக்கும்.

ப்ளீஸ்,



செல் 2: என்ன விளையாடறியா?

செல் 1: இல்லை சீரியஸ்.

செல் 2: என்ன இது காலங்கார்த் தாலே! நான் மாட்டேன்பா... எனக்குத் தெரி

கலகல...

சிரிடா செல்வம்!

யாது.

செல் 1: ப்ளீஸ்டா செல்லம்.

செல் 2: போடா, பாட்டு வேணுமாம் பாட்டு.

செல் 1: ம்... என்ன செய்ய? நான் குடுத்து வைச்சது அவ்வளவுதான்.

செல் 2: ஐயய்யோ!

செல் 1: என்ன ஆச்சு?

செல் 2: மறந்துபோய் உன்கிட்டப் பேசிட்டிருக்கேன்.

செல் 1: ஏன்? அதுக்கு என்ன?

செல் 2: உன்கூட பேசக் கூடாதுன்னு நினைச்சிட்டிருந்தேன்.

செல் 1: ஏண்டா? நான் என்ன தப்பு பண்ணேன்?

செல் 2: யோசிச்சுப் பாரு. உனக்கே தெரியும்.

செல் 1: தெரியலியே. நேத்து குட் நைட் சொன்னேன். நீ பதிலே அனுப்பலே.

செல் 2: ஸாரி யாமினி. வெரி வெரி ஸாரி, மறந்து போய்த் தூங்கிட்டேன்.

செல் 1: என்னது???

செல் 2: ஹே, ஐ மீன் ரிப்ளை பண்ண மறந்துட்டேன். ஏய், ப்ளீஸ் சிரிடா செல்லம். அப்புறம் எனக்கு வேலையே ஓடாது. இப்படியெல்லாம் கோச்சுக்கலாமா? என் அம்முக்குட்டிக்கு ஒரு கிஃப்ட் வாங்கித் தரலாம்னு நினைச்சிட்டிருந்தேனே.

செல் 1: அதை ஏன் என்கிட்டே சொல்றே?

செல் 2: நான் உன்கிட்டே சொல்லலே. என் அம்முக்குட்டி கிட்டதான் சொன்னேன்.

செல் 1: சகிக்கலே ஹாஹாஹாஹா... என்ன கிஃப்ட்?

செல் 2: அது சர்ப்ரைஸ்

செல் 1: சாக்லெட்டா?

செல் 2: அவளே ஒரு சாக்லெட். அவளுக்கு எதுக்கு சாக்லெட்?

செல் 1: சிரிப்பு வரலே. ஹாஹாஹாஹா.

செல் 2: கோபம் வந்தாக்கூட அழகாதான் இருக்கே.

செல் 1: ஆமாம். இவரு பக்கத்துல இருந்து அப்படியே பார்க்கிறாரு. அழகாம் அழகு.

செல் 2: நிலா அழகுன்னு பக்கத்துல போய்ப் பார்த்தா சொல்றோம்? யாமினி யாமினி யாமினி யாமினி..

செல் 1: என்ன? என்ன? என்ன? என்ன?

செல் 2: ச்ச்ச்ச்ச்சும்மா...

செல் 1: என்ன ச்சும்மா?

செல் 2: சரி எங்கே இருக்கே சொல்லு?

செல் 1: ஆபீஸ்க்கு வந்துட்டேன்.

செல் 2: எஸ்.எம்.எஸ். அனுப்பிட்டே வண்டி ஓட்டினியா?

செல் 1 : இல்லை இல்லை வண்டியை நிறுத்தி நிறுத்தி டைப் பண்ணேன். மொத்தம் 21 தடவை நிறுத்தினேன்.

செல் 2: சரி சரி. டெஸ்க்குக்குப் போன உடனே சொல்லு.

(2 நிமிடங்கள், 30 விநாடிகளுக்குப் பிறகு)

செல் 1: ஹாய் யாமினி:

செல் 2: ஹாய் கிஷோர்: என்ன பண்றே?

(தொடர்கிறது)

- மருதன்

'வோட் ஆஃப்' தேங்க்ஸ்!



"என்ன மிஸ்டர், முந்தின இண்டர்வியூவில இதே வேலைக்கு அப்ளிகேஷன் போட்டு... தேர்வாகாமல் திரும்பினீங்களே. மறந்துட்டீங்களா?"

"நீங்ககூட பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்னு சொன்னீங்களே. ஞாபகம் இல்லையா?"


- பெ. கலாசாமி



"தேர்தல்ல ஜெயிச்ச நம்ம எம்எல்ஏ 'தர்மம் வென்றது'னு போஸ்டர் அடிச்சு ஒட்டி இருக்காரு!"

"வாக்காளர்களுக்கு வாங்கிக் கொடுத்த பிரியாணி, பணம் இதையெல்லாம் சூசகமாச் சொல்றார்னு நினைக்கிறேன்."

- பாளை பாலு



"நீங்க எடுத்திருக்கிற படம் சூப்பரா வந்துருக்காமே...எதை வச்சு அப்படியொரு படம் பண்ணினீங்க...?"

"வீடு...வாசல், சொத்து...சுகம், தோப்பு... துறவு எல்லாத்தையும் அடகு வச்சுத்தான்...!"

- கே.ஜி.எஸ்



"ஹோட்டல் மீட்டிங்ல தலைவரை, 'வோட் ஆஃப் தேங்க்ஸ்' நிகழ்ச்சியிலே பேசச் சொன்னதைத் தப்பாப் புரிஞ்சிக்கிட்டாரா.. எப்படி?"

"பின்னே... 'எனக்கு வோட்டு போட்ட நல்ல உள்ளங்களுக்கு நன்றி'ன்னு இவ்லே பேசிட்டார்"

- நரேந்திரன்

தபால் மூலம்

ஓவிய ஆசிரியர் பயிற்சி

வரும் நவம்பரில் தமிழ்நாடு அரசுத் தொழில் நுட்பத் தேர்வு Free hand Drawing - Higher Grade தேர்வு எழுதி நீங்களும் ஓவிய ஆசிரியர் ஆகலாம். SSLC, +2 ஆண்கள், பெண்கள்.

உங்கள் முகவரியை ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள். அல்லது தொலைபேசியில் தெரிவியுங்கள். இலவச விவரப்புத்தகம் உங்கள் வீடு தேடி வரும். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

AJANTHA SCHOOL OF ARTS

(Govt. Regd. 1075/80 M.S./R.D)

6, Muthu Nagar, Poonamallee, Chennai - 600 056.

Phone : 044 - 26490363,

Cell : 9381050477, 9940390708



சிவாய நம :

ஸ்ரீ ஸர்வாங்கஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வரஸ்வாமி திருக்கோயில்

(ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501)

திருவாரூர் மாவட்டம். போன் : 04366-273900

லக்ஷதீபப் பெருவிழா

10.06.2006 முதல் **14.06.2006** வரை

அன்புடையீர்!

அடியவர்கள்பால் கொண்ட கருணையால் கயிலை துறந்து கருவிலிக் குடிகொண்டு அருள்பாலித்து வருகிற **இறைவனுக்கும், இறைவிக்கும் ராஜகோபுரங்கள் மற்றும் ஸ்ரீ சுப்ரமண்யர், கஜலக்ஷ்மி முதலிய ஸந்நிதிகள் திருப்பணி** வைகாசி மாதம் 31-ஆம் நாள் (14.06.2006) புதன் கிழமை அன்று அதிகாலையில் 5 மணியிலிருந்து 6.30க்குள் துவங்கப்பட இருக்கிறது. இது தொடர்பாக **10.06.2006** சனிக்கிழமை அனுஷ நட்சத்திரமும், பௌர்ணமி திதியும் கூடிய நன்னாளில் துவங்கி **14.06.2006** புதன் கிழமை முடிய ஐந்து தினங்கள் திருக்கோயில் வளாகத்தில் **லக்ஷதீபம்** ஏற்றி வழிபாடு நடக்கிறது. இன்று நாட்டில் நிலவி வரும் அமைதியின்மை, இயற்கையின் சீற்றங்கள் போன்ற பல தீமைகளிலிருந்து மக்களைக் காக்கும் பொருட்டு **லக்ஷதீபப்** பெருவிழா நடைபெறுகிறது. இறைவனுக்குரிய வழிபாடுகளில் தீபம் ஏற்றி வழிபடுதல் முக்கியமானதும், முதன்மையானதும் ஆகும்.

தனி நபரால் நடத்தப்பட முடியாத **லக்ஷதீபம்** போன்ற பெருவிழாக்களை பலர் இணைந்து நடத்தும்போது, லக்ஷதீபம் ஏற்றுவதன் பயனை ஒவ்வொருவரும் அடைவர். **10.06.2006** முதல் **14.06.2006** வரையில் தினசரி மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி முடிய **லக்ஷதீப வழிபாடு** திருக்கோயில் வளாகத்தில் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் இயன்ற நாட்களில் கலந்து கொண்டு இறையருளுக்குப் பாத்திரர்களாகும்படிக் கேட்டுக் கொள்கிறோம். என்றும் இறைபணியில்,

Dr.V.கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்

பொன்.சிவசங்கரன் M.A.
நிர்வாக அதிகாரி

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
மற்றும் **கிராமவாசிகள்**

பி.கு. : 100 தீபங்கள் ஏற்ற ஆகும் செலவு (அன்னதானம் உட்பட) ரூபாய் 100/-



உடன்பிறவா ஒற்றுமை!



• சுகி. சிவம்

இரட்டையர்கள் பெரும்பாலும் ஒருவரைப் போலவே மற்றவர்கள் உருவ ஒற்றுமையுடன் காணப்படுவதுண்டு. ஆனால், இப்படி இரட்டையராகவும் இல்லாது, வெவ்வேறு குடும்பங்களில் பிறந்து தொடர்பே இல்லாத இருவர் உருவ ஒற்றுமையுடன் காணப்பட்டால்... தி.மு.க தலைவர் கருணாநிதி ஜாடையில் உள்ள ரங்கநாதனும், கிட்டத்தட்ட சுகி.சிவம் போல் தோற்றமுள்ள இராம.கவிமணியும், தங்கள் அனுபவங்களைப் பேசுகின்றனர்.

இராம.கவிமணி:

“**நா**ன் வாடகைக்கு இருக்கும் வீட்டு உரிமையாளர் மகன் ஒருநாள் என்னிடம் வந்து 'நீங்க சுகி. சிவத்துக்கு உறவினரா?' என்று கேட்டார். 'ஏன் அப்படிக் கேட்குறீங்க?' என்றேன். 'அவர் அப்படியே உங்களைப் போன்றே இருக்கிறார்' என்றார். நானும் விடாமல், 'ஆம். அவர் என்னோட பெரியம்மா மகன்' என்று விளையாட்டாகக் கூறினேன்.

அதாவது பரவாயில்லை. ஒருமுறை சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் சிரித்துக் கொண்டே 'நான் இந்த நாள் இனியநாள் நிகழ்ச்சியைத் தவறாமப் பார்ப்பேன். உங்களோட ஆட்டோ கிராப் வேணும்' என்றார். திகைப்பிலிருந்து மீண்டு, 'நான் சுகிசிவம் இல்லை' என்று விளக்குவதற்குள் திணறிப் போய் விட்டேன்'' என்கிறார் இராம.கவிமணி.

தோற்றத்தில் மட்டுமில்லை, எழுத்துத் திறமையிலும் - சுகி. சிவத்தைப் போலில்லாவிட்டாலும் ஓரளவு எழுதுவதுண்டு. 'பேசும் ஆவிகள்', 'ஆவிகள் உலகம்' போன்ற மாத இதழ்களில், ஆவிகள் கூறிய

நகல்



* ரங்கநாதன்

அருள்மொழி என்ற தலைப்பில் அவரவர் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவங்களைத் தொகுத்துத் தொடராக எழுதியுள்ளேன். ஒருவிதத்தில் சுகி. சிவத்தை என் மானசீகச் சகோதரராகவே ஏற்றுக்கொண்டிருக்கிறேன்'' என்று முத்தாய்ப்பாகக் கூறும் இராம. கவிமணி வாழப்பாடி அருகிலுள்ள பேளூரைச் சேர்ந்தவர். அதோடு மட்டுமின்றி பேளூர் கரடிப்பட்டியில் வசிக்கும் இவருடைய தந்தை வெ.ராமசாமி கடந்த நாற்பதாண்டு காலமாக கல்கியின் தீவிர வாசகர்.

ரங்கநாதன்:

"என்னோட சொந்த ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள அமரகுந்தி கிராமம். வேலை தேடி குமாரபாளையத்துக்கு வந்தேன். அங்க 'கலைநிலா' நடனக் குழுவோட அறிமுகம் கிடைச்சது. எனது முகம், தலைமுடி இயல்பாகவே கலைஞருடையதுபோல் இருந்ததால், அக் குழு நிகழ்ச்சிக்கு கலைஞரைப் போல வேடமிட்டேன். கொஞ்ச நாளுக்கப்புறம், குழுவோட நண்பர்கள்ல ஒருத்தர் தங்கச்சி திருமணத்துல கலைஞர் வேஷத்துல மணப்பெண்ணை மணவறை வரை அழைச்சுக்கிட்டு வந்தேன். மெல்ல மெல்ல சேலம் பகுதி முழுவதும் பிரபலமாயிட்டேன். நண்பர் சலீம் பாட்சா ஏற்பாட்டில் திருவள்ளுவர் தினத்துல, கழக உடன்பிறப்புகளோட போய், திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கிற அளவுக்கு எனக்கு இடம் கிடைச்சுது.


பிறகு, வேலைக்காக சேலத்துல குடியேற வேண்டியதாயிடுச்சு. பல்வேறு நடனக் குழுக்கள்ல கலைஞர் வேஷம் போட்டேன். இப்போ நடந்து முடிஞ்ச சட்டமன்ற தேர்தல்ல தாரமங்கலம், எடப்பாடி, பவானிசாகர், சென்னைனு பல பகுதியில கலைஞர் வேஷம் போட்டு பிரசாரம் பண்ணினேன். உருவத்தில் மட்டுமில்லாது நிஜத்துலயும் நான் கலைஞரோட விசுவாசி.''



கலைஞரிடம் ஒருமுறையாவது ஆசிபெற்று, தமிழகம் முழுவதும் வலம்வர வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டிருக்கிறார் ரங்கநாதன்.

* இராம. கவிமணி

- ஆ.ப. செந்தில்



“வேண்டாம், நான் எங்காவது வெளிநாட்டுக்குப் போயிடறேன் சார். எனக்கு இந்தியா வேண்டாம். இந்தியா ஒரு வெளிநாடு மாதிரிதான். நான் இங்கே அந்நியன்தான்...”

இத்தனை கோபம் ஏன் இவருக்கு என்று முதலில் தோன்றினாலும் கணபதி ஸ்தபதி பேசப் பேச அவரது ஆதங்கத்துக்குப் பின்னாலிருந்த வலியைப் புரிந்து கொள்ள முடிந்தது.

சுனாமியை அசட்டை செய்துவிட்டு குமரிமுனையில் கம்பீரமாக நிற்கும் வள்ளுவர் சிலை, சென்னை வள்ளுவர் கோட்டம், ராஜா முத்தையா மன்றம், சென்னை, தஞ்சை பல்கலைக் கழகங்கள், தமிழ்த்தாய் சிலை, இப்படி கணபதி ஸ்தபதி பதித்த வரலாற்று முத்திரைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

“இதையெல்லாம் யார் இப்ப கவனிச்சுப் பேசறாங்க? இந்தத் தலைமுறைக்கு சிற்பக் கலையைத் தெரிஞ்சுக்கணும்னு துளி ஆர்வமாவது இருக்கா? விஞ்ஞானத்தைத் தாண்டிய விஞ்ஞானம் இது. ஒரு கடவுள் சிலையை வடிவமைக்கிறதுன்னா சும்மாவா? யார் பார்த்திருக்காங்க கடவுளை? அவர் எப்படி இருப்பார்னு யாருக்குத் தெரியும்? எங்களால மட்டும் எப்படி அத்தனை தத்ரூபமா ஒரு கல்லுல அவரைக் கொண்டு வர முடியுது? கோயிலுக்குப் போன உடனே அந்தச் சிலையைப் பார்த்து ஏன் அத்தனை பரவசப்படறீங்க?

“நீங்க அனுபவிக்கிற பரவசத்தை, பக்தியைக் கொண்டு வரணும்னா



“எனக்



கணபதி ஸ்தபதி

ஒரு கல்லு சிலையா மாறணும். அந்தக் கல்லுக்கு உயிர் வரணும். அப்பதான் கையைக் கூப்பி வணங்க முடியும். அந்த உயிரை யாரு கொடுக்கிறாங்க? நாங்கதானே? எங்ககிட்ட அப்படி என்னதான் வித்தை இருக்குன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?

"வாஸ்து ஒரு அறிவியல் கலைன்னு சொல்றோம். மயன் ஒரு சிற்ப ஆசான்னு சொல்றோம். ஒவ்வொரு சிற்பத்துக்குப் பின்னாலும், ஒவ்வொரு கட்டடத்துக்குப் பின்னாலயும் ஆச்சரியமான, அதிசயமான, அற்புதமான கணக்குகள் இருக்கு. ஸ்தபதிகளான எங்களுக்கு பல நூற்றாண்டு கால பாரம்பரியம் இருக்கு. ஆனால் இதையெல்லாம் தெரிஞ்சுக்க இன்னிக்கு யாராவது ஆர்வம் காட்டறாங்களா?"

இதுதான் கணபதி ஸ்தபதியின் கோபம், அரசாங்கம் பதவி தர வேண்டும், விழா எடுக்க வேண்டும், தன்னைப் போற்றி புகழ வேண்டும் என்பதல்ல இவருடைய ஆதங்கம். இன்னும் சொல்லப் போனால் இவை அத்தனையும் இவருக்கு ஏற்கெனவே கிடைத்துவிட்டன. பெயர், பணம், புகழ் அத்தனையும் இவரிடம் இருக்கிறது. இங்கு மட்டுமல்ல வெளிநாடுகளிலும், வாஷிங்டன், சிகாகோ, ஹாலந்து, சிங்கப்பூர் என்று உலகெங்கும் இவரது சாதனை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் இவர் யாரிடம் இந்தக் கேள்விகளைக் கேட்கிறார். அவரே சொல்கிறார். "அற்புதமா பல விஷயங்களைச் செய்ய வேண்டிய இளைய தலைமுறை சினிமா, பாட்டுன்னு நேரத்தை வீணடிக்கிறதைப் பார்த்தா, என்னால தாங்கிக்க முடியலை. நம்மோட கலாசாரத்தை, பெருமையை, பாரம்பரியத்தை உதாசீனப்படுத்தறது வேதனையா இருக்கு. சினிமா இவங்களைச் சீரழிக்குது. சந்தேகமே இல்லாம அது ஒரு மாயவலை."

ஒரு சந்தேகம். தற்போதைய நவீன இலக்கியம் சிற்பக் கலை பற்றியும் சிற்பிகளைப் பற்றியும் அவ்வப்போது உரையாடிக் கொண்டுதானே இருக்கிறது? ஓவியம், சிற்பம், சினிமா மூன்றையும் அரவணைத்துக் கொண்டுதானே இலக்கியம் இயங்கி வருகிறது? அப்படித்தானே இலக்கியவாதிகள் சொல்கிறார்கள்? நவீன பாணி ஓவியங்களும், நவீனபாணி சிற்பங்களும், நவீன பாணி சினிமாக்களும்கூட புழக்கத்தில் வந்துவிட்டனவே? - இதையே அவரிடம் கேட்டபோது

"யார் சொன்னது? இலக்கியம், சிற்பக் கலைக்காக எதுவும் செய்யலை. நவீனத்துவம், பின் நவீனத்துவம்னு நீங்க எத்தனையோ சொல்றீங்க. இதுவரைக்கும் அதால ஏதாவது சாதிக்க முடிஞ்சுதா? நம்மோட கலாசாரத்தைப் பிரதிபலிக்காத எந்த இஸங்களாலும் பலனில்லை. ஒரு சினிமா நடிகருக்கும், நடிகைக்கும் கொடுக்கிற முக்கியத்துவத்துல நூற்றில் ஒரு பங்குகூட இந்தக் கலையைப் புரிஞ்சுக்கிறதுக்குக் கொடுக்க மாட்டேங்கறாங்க."

ஜெர்மானியர்களும், அமெரிக்கர்களும், ஆஸ்திரேலியர்களும் கொஞ்சிக் கொஞ்சி மழலைத் தமிழ் பேசிக்கொண்டு இவரது வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள். "நான் சொல்லித் தர தயாராவே இருக்கேன். இந்தியர்கள் எங்கே சார்?" என்று கேட்கிறார் கணபதி ஸ்தபதி.

- மருதன்

இந்தியா வேண்டாம்!"

தெற்குத் தெரு



சின்னஞ்சிறிய ஊர் அது. கையில் பிடித்த கொழுக் கட்டை மாதிரி. மொத்தமே இரண்டு தெருதான். கிழக்கு மேற்காக நீண்டிருக்கும் அந்த இரண்டு தெருக்களில் ஒன்று ஆரோக்கியமானது. கட்டுஞ்செட்டுமாய் வீடுகள், ஜனங்கள், நடமாட்டம், தெரு முனையில் முத்தாய்ப்பாய் கோயில்.

தெற்குத் தெரு சவலையாக இருந்தது.

உதிர்த்து விட்ட சோற்றுப் பருக்கை போல் அங் கொன்றும் இங்கொன்றுமாக வீடுகள்.

ஒரு வருஷம் முன்பு பெரிய தெருவில் ஓலை வீட்டில் இருந்த ஒரு குடும்பம், அந்தத் தெற்குத் தெருவில் மனை வாங்கி பெரிதாக ஒரு வீடு கட்டிக்கொண்டு குடிவந்த போதுதான், அந்தத் தெருவுக்குக் கொஞ்சம் அந்தஸ்து வந்தது போலிருந்தது.

அந்தக் குடும்பத்தில் உருப்படிகள் அதிகம்.

அதனால் பேச்சுச் சத்தமும் பரபரப்பும் சதா இருந்து கொண்டிருக்கும். தெருவே அவர்களு டையது என்பதுபோல் புழங்குவார்கள்.

அந்த வீட்டின் தலைவி ஜெகதாவுக்கு குரல் பெருசு.

அதிகார மமதையுடன் கூடிய அந்தக் குரல் வீட்டுக்குள்ளிருந்தோ, தெருவிலோ, தோப்பிலோ, வயக்காட்டிலிருந்தோ ஓங்காரமிட்டுக் கொண்டி ருக்கும். கட்டளையும் உத்தரவும் பிறப்பித்த வண்ணமே இருக்கும்.

4

வாரத் தொடர்

கொஞ்ச நாளாக... அந்தக் குரலில் சுரத்துக் குறைந்து போயிருந்தது. கடந்த சில மாதங்களில் அந்தக் குடும் பத்தில் என்னவெல்லாமோ நடந்து விட்டது. குடும்பத்தில் கலகம் ஏற்பட்டு நோய் கண்ட முருங்கை மாதிரி உளுத்துக் கொண்டிருக்கிறது.

எண்பது வயசாகியும், 'கிண்'ணென்று இருந்த முத்தம்மா கிழவி, ஒரு காலை நேரத்தில் படுக்கையை விட்டு எழுந்துகொள்ள முடியாதவளாகி விட்டாள்.

வீட்டை அணைத்தாற்போலிருந்த தொழுவத்துக்கு இடம்மாற்றி விட்டார்கள், அவளை.

தன் தாய்க்கு ஏற்பட்ட கதியை எண்ணி, ஜெகதாவுக்கு கலக்கமாகி விட்டது. தன்னை ஒதுக்கி, உதைத்து உட்கார்த்தி வைத்தபோது உண்டான வேதனையைக் காட்டிலும், இது பெரிது.



■ படுதலம் சுகுமாரன் ■

"அடப்பாவிகளா.... இந்தக் குடும்பத்துக்காக எங்கம்மா பட்ட பாடெல்லாம் மறந்துட்டீங்களே... ஆசையாசையா வீட்டைக் கட்டி, உங்களை உக்கார வச்சு அழகு பார்த்த எங்க அம்மாவை இப்படிப் பண்ணிட்டீங்களே... கண்ணு மூடற வரைக்குமாவது அவளை அந்த வீட்டுல வைக்கக் கூடாதா... இந்தக் கதி உங்களுக்கும் ஒரு நாள் வராம போகுமா..."

என்று அரற்றிக்கொண்டு,

நைந்த கட்டிலில், செத்தும் சாகாமல் கிடக்கும் தாயின் தலைமாட்டிலேயே உட்கார்ந்திருக்கிறாள் அவள்.

ஊர்க்காரர்கள், ஒய்ந்தபோதெல்

லாம் அந்தத் தொழுவத்தின் பக்கமாக வந்து எட்டிப் பார்க்கிறார்கள்.

"இன்னும் பத்து வருஷம் இருந்திருக்கும்... ஒரு தலைவலி, ஜுரம்னு வந்து படுத்திருக்குமா, பார்த்திருக்கமா? காவல் தெய்வம் மாதிரி ஊரைச் சுத்திச் சுத்தி வந்துக்கிட்டிருக்கும். நல்லது கெட்டது எடுத்துச் சொல்லும். எத்தனையோ குடும்பச் சண்டைகளைப் பேசித் தீர்த்து வச்சிருக்குது. கடைசில சொந்தக் குடும்பத்துப் பிரச்னையில மனம் பாதிச்சுப் போச்சு..." என்று 'உச்' கொட்டுகிறார்கள்.

"என்னைக்கு ஜெகதாவை ஒதுக்கி ஓரமா உட்கார வச்சாங்களோ... அன்னைக்கு ஒடைஞ்சு போச்சு கிழவி..." என்று ஆளாளுக்கு நிஜமான வருத்தத்துடனோ, ஒப்புக்கோ பேசி கவலையை உண்டாக்குகிறார்கள்.

ஜெகதா மட்டும், தாயின் பக்கத்திலேயே இருந்துகொண்டு அடிக்கொரு தரம், தண்ணியும், பாலும் இலேசு இலேசாய்ப் புகட்டிக்கொண்டு, உதட்டில் மொய்க்கும் ஈக்களை விரட்டிக் கொண்டிருக்கிறாள்.

ஆடிப்பாடி, அதட்டிக்கொண்டு மகாராணி மாதிரி வீட்டைப் பரிபாலனம் பண்ணி வந்த தனக்கும், தாய்க்கும் இந்தக் கதி வந்ததே என்ற வேதனை அவளை வாட்டுகிறது.

என்னென்னமோ நினைவுகள்... மனபாரத்தை உண்டாக்குகின்றன.

திகிலூட்டும் எதிர்காலத்தினூடே, பசுமையான, பழைய ஞாபகங்களும் வராமலில்லை.

அது இருக்கும் நாற்பது வருஷத்துக்கும் மேலாக...

அப்பவும் அந்த ஊர் இப்ப உள்ளது போலச் சிறியதாகத்தான் இருந்தது... என்றாலும், பெருந் தலைகள் அதிகம். பணக்காரர்கள் இருந்தார்கள். எட்டு ஊருக்கும் சேர்த்து கணக்கு பார்க்கும் மணியக்காரர் இருந்தார். அந்த ஊர்க்காரர்கள்தான் டவுனில் ரைஸ் மில்லும், டூரிங் டாக்கீஸும் வைத்திருந்தார்கள். எந்த ராஜாவும் எந்த மந்திரியையும் கேட்க அவசியமில்லாமல் மும்மாரி பொழிந்து விவசாயம் - இயற்கை உரம் போட்டு தரமாக நடந்தது. தோப்பும் துரவுமாக மனிதர்கள் செழிப்பாக வாழ்ந்தார்கள்.

ஆடியிலும், சித்திரையிலும் திருவிழா நடந்தது.

பொங்கலும், நோன்பும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டன.

கணவனை இழந்த முத்தம்மா, கைக்குழந்தையோடு வந்து அந்த ஊரில் குடியேறினாள். கணவரின் பங்காக வந்த பணத்தில் ரெண்டு ஏக்கர் நிலம் வாங்கினாள்.

ஆம்பிளைக்குச் சமமாக விவசாயம் பார்த்தாள்.

ஒன்றுவிட்ட தம்பி பெருமாள் ஒத்தாசையாக இருந்தான்.

வேறு போக்கிடமில்லை பெருமாளுக்கு.

வேலை செய்வதிலும், சாப்பிடுவதிலும் வஞ்சனை இருக்காது. ஆள் பார்க்க விரிந்த மார்பும், திரண்ட தோள்களும், பருத்த தொடைகளுமாய் பீமனைப் போலத்தான் உடல்வாகு.

தெருக்கூத்து கட்டும்போது பீமன் வேஷமோ, அனுமார் வேஷமோதான் போடுவான். வேலை நேரம் போக, அக்கா மகள் ஜெகதாவைத் தோளில் போட்டுக்கொண்டு திரிவான்.

ஜெகதா, ஒரு குறையுமறியாமல் வளர்ந்தாள்.

சிவப்பு நிறம், களையான முகம், சிரிப்பு...

யார் பார்த்தாலும் எடுத்துக் கொஞ்சுவார்கள்.

தன் மகள் அதிரூப சுந்தரியாய் இருந்ததில் தாய் முத்தம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம். இம்மத்தம் இருந்தவள் அம்மத்தமாகி, நடைபழகி, பள்ளிக்கூடம் போனாள். 'ஒரு வாத்தியார்' பள்ளிக்கூடமொன்று ஊர்க் கிழக்கில் இருந்தது. அஞ்சாம் வகுப்பு வரைக்கும் அவர்தான்

"ஐந்துன்னு எழுதச் சொன்னா உங்க மகன் ஐந்துன்னு எழுதறான்."

"போனாப் போறான்... சின்னப் புள்ள தானே... பெரியவங்க நீங்க மாத்தி சரியா படிச்சிட்டுப் போங்களேன்!"

- பம்மல் நாகராஜன்

பாடம் எடுப்பார்.


அஞ்சாம் வகுப்பு போகும்போதே, ஜெகதா பெரியவளாகி விட்டாள்.

அதற்கு ரெண்டு வருஷம் முன்புதான், பெருமாளுக்கு வேறு பெண் பார்த்து கட்டி வைத்திருந்தாள் முத்தம்மா.

"இவ்வளவு சீக்கிரம், வயசுக்கு வருவான்னு எதிர்பார்க்கலை. இல்லன்னா கொஞ்சம் பொறுத்திருந்து இவளையே கட்டியிருப்பேன்..." என்று கேலியாக ஒருமுறை பெருமாள் சொன்னான்.

காதில் விழுந்து, முத்தம்மா விளக்குமாறை எடுத்துக்கொண்டு வந்து விட்டாள்.

"நீ கெட்டகேட்டுக்கு ரெண்டு பொண்டாட்டி வேணுமா. அட நாசமாப் போறவனே! அனாதைப் பயலே... பாவம் பார்த்து பொண்ணைத் தேடி கட்டி வச்சிருக்கேன். காலத்துக்கும் அவளை வச்சு



குடும்பம் நடத்துனா போதாதாடா...! அதுக்கு வழி தேடிக்கோ முதல்ல.. எம் பொண்ணு கேட்குதோ... உனக்கு..." என்று சீறி விழவும்,

"ஏதோ தமாஸுக்குப் பேசினதுக்கு கோவிச்சுக்கறியே அக்கா. நான் தோள்ல சுமந்த பொண்ணு...! நீயே குடுக்கறன்னாலும் நான் கட்டுவனா..." என்றான் பெருமாள்.

ஆனால்... அவன் கொடுக்க, இவன் கட்ட... என்றுதான் ஆனது.

ஜெகதாவுக்கு பதினாறு வயசு நடந்து கொண்டிருந்தது.

முழு நிலவாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தாள்.

அவளைக் கட்டுவதற்கு உள்ளூரில் நான், நீ என்று போட்டியிருந்தது.

வெளியூரில் இருந்தெல்லாம் கேட்டு வந்தார்கள்.

அடுத்த தைக்குள் கல்யாணத்தை முடிக்கும் உத்தேசத்தில் இருந்தாள் முத்தம்மா.

இவனைக் கட்டலாமா, அவனைக் கட்டலாமா என்று மனக்கணக்கு போட்டுக் கொண்டிருந்தாள் ஜெகதா.

அப்போது பார்த்துத்தான், பெருமாள் சம்சாரம் துணி துவைக்கப் போய் கிணற்றில் தவறி விழுந்து செத்துப் போனாள்.

பெருமாள், நாலு வயசுப் பெண் குழந்தையுடன் தனிமையில் நின்றான்.

ஊரே பரிதாபப்பட்டது.

முத்தம்மாளுக்கு இருக்காதா?

அவனுக்கு மறுகல்யாணம் பண்ணி வைக்க நினைத்தாள்.

யாரைப் போய்க் கேட்பது...

சொந்தப் பெண்ணிருக்க, இன்னொருவர் வீட்டில் போய் பெண் கேட்க முடியுமா...?

ஜெகதாவைத்தான் அவனுக்கு ரெண்டாந்தாரமாகக் கட்டிக் கொடுத்தாள்.

பெருமாளுக்குச் சம்மதமில்லைதான்.

"நான் இப்படியே இருந்துடறேன்... விட்ரு அக்கா. ஜெகதாவை நல்ல இடத்துல கட்டிக் கொடு..." என்றான்.

"உம் பொண்ணை வளர்க்கறது யாரு..."

"அதான் நீ இருக்கியே. என்னை வளர்த்து ஆதரிச்சது போல, இதையும் கரையேத்திற மாட்டியா..."

"அட என் பொறப்பே... என் ஆயுசு கெட்டியா இருந்தா, உன் மகளை வளர்க்கறது எனக்குப் பெரிய விஷயமே இல்ல. நாளைக்கு அவ இன்னொருத்தன் வீட்டுக்குப் போய்ட்டால்... உனக்கும் வயசாகி, எனக்கும் வயசாகிப் போனால், தண்ணி ஊத்த ஆளில்லாமப் போவுமேடா. ஜெகதாவ கட்டிக்கிட்டா எல்லோரும் ஒரு வூட்டோட இருந்துக்கலாம். ஒருத்தருக் கொருத்தர் ஒத்தாசையா இருக்கும். ஊரு பேச்சுக்கும் ஆளாகாம இருப்போம்..." என்று சொல்லி கட்டி வைத்தாள்.

(தொடரும்)

தி.மு.க. சார்பாக எம்.எல்.ஏ. பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்திருந்தாலும் சல்மா முகத்தில் துளியும் வருத்தமில்லை. ஆழமாகவே நம்மிடம் பேசினார்.

"நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் எனக்கு மிகவும் புதுமையான அனுபவம். வாழ்க்கைத் தரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களைப் பெருமளவில் கொண்ட பெரிய தொகுதி மருங்காபுரி. இங்கே கடந்த முப்பதாண்டுகளில் ஒரேயொரு தடவை மட்டும் தி.மு.க. வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து அ.தி.மு.க.வே வெற்றிபெற்று வரும் வேளையில், வளர்ச்சிப் பணிகள் என்று தொகுதிக்குள் ஏதும் செய்யவில்லை. குழிவிழுந்த சாலைகளும், அடிப்படை மருத்துவ வசதிகள் எதுவும் எட்டிப் பார்க்காத கிராமப்புறங்களுமே இதற்குச் சாட்சி.

தொடர்ந்து வெற்றிபெற்று வந்தபோதிலும், அ.தி.மு.கவினால் வஞ்சிக்கப்பட்ட தொகுதியாகவே திகழ்கிறது மருங்காபுரி இப்பகுதி மக்களை நேரில் சந்தித்தேன். அவர்கள் என்னிடம் பகிர்ந்துகொண்ட விவரங்களிலிருந்து, தொகுதி மக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய கடமைகள் சம்பந்தப்பட்டவர்களால் நிறைவேற்றப் படாமலே இருப்பதை உணர்ந்தேன்.

வாக்குகள் சேகரிக்க ஒவ்வொரு குக்கிராமத்துக்கும் சென்றபோது, அத்தியாவசியத் தேவைகளான சாலை மற்றும் மருத்துவ வசதிகளைப் பற்றி உணர்வுபூர்வமாக அவர்கள் மத்தியில் பேசினேன். நமது தேவைகளை நிறைவேற்ற ஒரு பெண் வந்து விட்டாள் என்று தொகுதிவாசிகள் என்னை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

இந்த வெற்றி என்னிடமிருந்து விளிம்பு நிலையிலேதான் தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது. காலங்காலமாக இது அ.தி.மு.கவின் கோட்டை என்றிருந்து வருவதை நிலை நிறுத்த வேண்டுமென்கிற நிர்ப்பந்தம் அ.தி.மு.க. தலைமைக்கு ஏற்பட்டிருந்தது. அதன் விளைவு வோட்டுப் பதிவின் கடைசி இரண்டு தினங்களில் விழிப்புணர்வற்ற வாக்காளர்களில் ஒரு பகுதியினர், அ.தி.மு.க.வினரின் பணப் புழக்கத்துக்கு விலைபோக நேர்ந்து விட்டது.

இன்னொரு விஷயம், இந்தத் தோல்வி எனக்குள் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை. என்னுடைய வாக்கு சேகரிக்கும் எளிய முறை, அவற்றுக்குத் தொகுதி மக்கள் தொடர்ந்து காட்டிய பேராதரவு இவையெல்லாவற்றையும் நேரில் பார்த்த பத்திரிகையாளர்கள் அவற்றைப் பற்றி பெரிதும் சிலாகித்து எழுதினார்கள். வாக்கு எண்ணிக்கைகளின் அடிப்படையில் நான் தோற்றுப் போனாலும், தமிழக அரசியல் பார்வையாளர்களின் எதிர்பார்ப்புகளை என் பக்கம் திருப்பிய வகையில் நான் வெற்றி

"தட்டிப் பறிக்கப்பட்ட வெற்றி!"

பெற்றதாகவே உணர்கிறேன்''என்றவர் சில நொடிகள் இடைவெளிவிட்டுத் தொடர்ந்தார்.

"இந்தத் தோல்வியால் நான் துவண்டு முடங்கி விடமாட்டேன். எழுத்து மற்றும் அரசியல் ஆகிய இரண்டு தளங்களிலும் தொடர்ந்து செயல்படத் திட்டமிட்டிருக்கிறேன். என்னுடைய மருங்காபுரி தொகுதி மக்கள் எனக்களித்த ஆதரவினை என்னால் என்றைக்கும் மறக்க இயலாது. பொதுமக்களின் தேவைகளையும் பிரச்னைகளையும் ஒரு எழுத்தாளராக என்னால் உணர முடிகிறது" என்ற சல்மாவிடம், 'உள்ளாட்சித் தேர்தல் - சட்டமன்ற தேர்தல் இரண்டுக்குமிடையே ஏதாவது வித்தியாசங்களை உணர்ந்தீர்களா?' எனக் கேட்டோம். புன்னகைத்தபடியே தொடர்ந்தார்-

"உள்ளாட்சி மன்றத் தேர்தலில் குறைந்த வாக்காளர்களையே சந்திக்க வேண்டியிருந்தது. அதனால் எதுவும் பாதிக்கவில்லை. ஆனால் சட்டமன்ற தேர்தலில் மிகவும் அடித்தட்டு மக்களைக் கூட சந்திக்க நேர்ந்தது. சுதந்திரம் பெற்றபின்பும் கூட மருங்காபுரி தொகுதிக்குள் அடிப்படை வசதிகள் கிடைக்காத குக்கிராமங்கள் பலவற்றைக் காண நேரிட்டது. அந்தப் பகுதி மக்களிடம் கலந்துரையாடியபோது ஓர் எழுத்தாளரின் மன நிலையில் நான் மிகவும் நொறுங்கிப்போயிருந்தேன். அனைத்துக் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை ஒரு வேட்பாளர் என்கிற நிலையில் வெற்றி பெற்று வந்து பூர்த்தி செய்ய



– சல்மா

வேண்டுமென நினைத்தேன். ஆனால், அதற்கான வாய்ப்புதான் கை நழுவிப் போனது!"

- ஸ்ரீரங்கம்
திருநாவுக்கரசு



பி.எஸ். ராகவன்

அதிகாரிகள் பந்தாட்டம் ஏன்?


ஒவ்வொரு முறை ஆட்சி மாற்றம் ஏற்படும்போதும் நூற்றுக்கணக்கில் அதிகாரிகள் மாற்றல் என்ற பெயரில் பந்தாடப்படுகிறார்கள் 'இவர் ஜெ.வுக்கு வேண்டியவர்', 'இவர் கருணாநிதிக்கு வேண்டியவர்' என்று ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள் மேல் முத்திரை குத்தப்பட்டு விட்டது. இந்த நிலைக்கு யார் காரணம்? சொல்கிறார் ஓய்வு பெற்ற தலைமைச் செயலாளரான பி.எஸ். ராகவன்.

"ஒரு காலத்தில் அதிகாரத்துக்கு வந்த அரசியல்வாதிகளுக்கு தன்னம்பிக்கை, தன்னிறைவான மனப்பான்மை, சேவை உணர்ச்சி இது மூன்றும் நிறைய அளவில் இருந்தன. ஆகையினால் பிரச்னைகளை பொதுமக்களின் நலத்தின் அடிப்படையில் பரந்த கண்ணோட்டத்தோடு ஆய்வு செய்வதற்குத் தயாராக இருந்தார்கள். அந்த முயற்சியில் அதிகாரவர்க்கத்தின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் விரும்பிக் கேட்டார்கள். நான் நேருவோடு நான்காண்டு காலம் பணிபுரிந்திருக்கிறேன். அப்போது எனக்கு 30, 35 வயதுதான் இருக்கும். அவர் ஒரு மகத்தான மனிதர். ஆனால் நாம் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, ஏற்றுக்கொள்வதற்கும், ஏற்றுக்கொள்ளாததற்கும் காரணங்களை விளக்குவார். அந்தக் கால அரசியல்வாதிகளுக்குச் செல்லும் கோப்புகளில் சுதந்திரமாக எழுதுவதற்கு அதிகாரிகள் தயங்க மாட்டார்கள். ஏனென்றால் கோப்புகளில் எழுதப்படும் குறிப்புகள், அரசியல்வாதிகளின் கண்ணோட்டத்தில் கருத்து வேறுபாடு இருக்குமேயானால் அமைச்சர்களுக்கு அதை மறுத்து வாதங்களைச் சொல்வதற்கான நுண்ணறிவும் தைரியமும் இருந்தன.

இப்போது இரண்டு விதங்களில் நிலைமை சீர்குலைந்து போய்க் கொண்டிருக்கிறது. அரசியலில் நாட்டு நலம், பொது நலம் என்ற இரண்டும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. ஆகையால் அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதிகள் தான் நினைக்கும் வழிமுறைகளுக்கு அனுசரணையாக அதிகாரவர்க்கம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதிகாரவர்க்கத்தில் இருப்பவர்களும் சொகுசு வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுப்போய் தமக்கும் தம் குடும்பத்துக்கும் சௌகரியங்களைத் தேடுவதில் மும்முரம் காட்டுகிறார்கள். ஆகையால் அரசியல்வாதிகளுக்கு ஒத்துப்போய் அதனால்

கிடைக்கும் பலவிதமான வசதிகளுக்கு மனதைப் பறிகொடுக்கிறார்கள். இந்த இரண்டும் சேர்ந்ததின் விளைவாக குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது அரசியல்வாதிகளுக்கு, இந்தந்த அதிகாரிகள் வேண்டியவர்களாகவோ அல்லது வேண்டாதவர்களாகவோ இருப்பார்கள் என்ற தோற்றம் உருவாகிவிட்டது. ஆகையால் .பதவியில் அமரும் அரசியல்வாதிகள் தமக்கு வேண்டியவர்களைக் கொண்டு வருவதற்கும், வேண்டாதவர்களைப் பந்தாடுவதிலும் முனைப்புக் காட்டத் துவங்கி விடுகிறார். இதற்கு ஒரு மாற்று என்னவென்றால் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள் நடுநிலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்களாகத் திகழ வேண்டும். ஏனென்றால் அவர்களைத்தான் நிர்வாக இயந்திரத்தில் இருக்கும் மற்ற பணியாளர்கள் முன் உதாரணங்களாக எடுத்துக் கொள்கிறார்கள். ஆகையால் என்னைக் கேட்டால் இப்போது இருக்கும் நிலைமையை மாற்றுவதில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளின் பொறுப்பு மிகவும் அதிகமானது என்று சொல்வேன். இந்தப் பொறுப்பை அவர்கள் சரிவர நிறைவேற்ற முடியாமல் போனால், ஒவ்வொரு ஆட்சி மாறும்போதும் அதிகாரிகள் பந்தாட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்."

- ஸ்ரீநி





சுஜாதா



கார்பன் நானோ ட்யூப் பற்றி இந்த வாரம் சற்று விரிவாகப் பார்க்கலாம்.


பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஜப்பானில் என்.ஈ.சி கம்பெனியின் ஆராய்ச்சிசாலையில், சுமியோ விஜிமா என்பவர் ஒரு எலக்ட்ரான் மைக்ராஸ்கோப் வழியாக கரியின் திற்றலைத் தற்செயலாக நுட்பமாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது, திரிதிரியாக உள்ள மாலிக்யூல் மூலக்கூறுகளின் அமைப்பைக் கவனித்தார். இந்தத் திரிகளுக்கு சில விசேஷ குணங்கள் இருந்தன. வலிமை, வளைந்து கொடுக்கும் தன்மை, இலேசான தன்மை என்று ஓர் ஆதர்சமான மூலப் பொருளுக்குத் தேவையான அத்தனை குணாதிசயங்களும் இந்தக் கரித் திரிகளுக்கு இருந்தன. எதிர்காலத்தில் இவை மூலம் கம்பத்தைத் தாங்கும் கட்டடங்கள், விபத்தில் நசுங்காத கார்கள் என்று உருவாக்க முடியும் என்று கண்டுபிடித்தார்கள். இவற்றின் முதல் பயனாக கார்களுக்கு பெயிண்ட் அடிக்கும்போது இந்த நானோ திரிகளை ப்ளாஸ்டிக்குடன் கலந்து அடித்தால் பெயிண்ட் மின்சக்தி பெற்று சட்டென்று ஒட்டிக் கொள்கின்றதைக் கண்டு, ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் இதைப் பயன்படுத்துகிறது. இதுதான் கார்பன் நானோ ட்யூப்களின் முதல் நடைமுறைப் பயன்பாடு.

நானோ ட்யூப்களை வைத்துச் செய்யப்படும் ஒளிவிளக்குகளும் இன்றைய நாட்களில் சந்தைக்கு வந்திருக்கின்றன. எதிர்காலத்தில் நானோ ட்யூப்கள், நான் முன்பு சொன்னதுபோல் சிலிக்கான் சில்லுகளைவிட அதிநுட்பமான இணைப்புகள் செய்யப் பயன்படும் என்கிறார்கள். சிலிக்கானின் எல்லை என்ன? சுமார் 200 நானோ மீட்டர். நானோ ட்யூப்களோ ஓரிரண்டு நானோ மீட்



• படம்: ஸ்ரீஹரி

சாகஸம் ஆயிரம் – 13



எதிர்கால அற்புதங்கள்!

டர் விட்டமுள்ள நீண்ட ஒல்லியான குழாய்களாலான விநோத அமைப்புகள். இந்த நானோ மீட்டர் அளவில் இயற்பியல் விதிகள் க்வாண்டம் விதிகளாகின்றன என்று சொன்னோம். எலக்ட்ரான்கள் ஒருசில நிலைகளில்தான் ஸ்திரமாகச் சுற்ற முடியும். மிகவும் ஒழுங்கான கிராஃபைட் போன்ற அமைப்பு இது. இதன் எதிர்கால சாத்தியங்கள் கணினிகளை அளவில் சிறியதாக்கி வேகத்திலும் நூறு மடங்கு துரிதப்படுத்தக் கூடியவை.

எதிர்காலத்தில் கம்ப்யூட்டர் மானிட்டர்கள் ஒரு காகிதம் போல இலேசாகிவிடும்.

எதிர்காலத்தில் கடுகளவுள்ள சங்கதிகளில் இன்றைய சூப்பர் கம்ப்யூட்டர் திறமைகளைப் பொதிந்திருக்கும் அவை, நம் உடலினுள் விதைக்கப்பட்டு ரோபாட்டுகளாக இயங்கி ரிப்பேர் செய்து வியாதிகளை நீக்கும்.

இன்றைய நாட்களில் நானோ ட்யூப் ஆராய்ச்சிகள் மாலிக்யூல் அளவில் ஸ்விட்ச், ரிலே, ட்ரான்சிஸ்டர், டையோடு போன்ற இணைப்புகளைச் செய்து காட்டுவதில்தான் முனைப்பாக இருக்கிறார்கள். இவையெல்லாம் சேர்த்து முழு கம்ப்யூட்டர் பண்ணும் நிலை இன்னும் வரவில்லை. நானோ ட்யூப்களை எப்படி விருப்பப்பட்ட இடத்தில் விருப்பப்பட்ட வடிவில் வளர்ப்பது என்பது பற்றி ஸ்டான்ஃபோர்டு, ஹார்வர்டு பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

நானோ ட்யூப்களைத் தயாரிப்பதில் மூன்று முறைகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். பழங்காலத்து சினிமா ப்ரொஜெக்டர்களில் போல, இரண்டு கார்பன் ராடுகளுக்கு இடையே ஸ்பார்க் எழுப்புவது ஒருமுறை. எரிவாயு அல்லது லேசர் மூலம் கரியை எரிக்கும்போது கணிசமான அளவு நானோ ட்யூப்கள் உண்டாகின்றன. இதில்



"ஹாலிவுட்ல நடிக்கணும்!"



'அர்னால்ட் ஸ்வாஸ்நெகரோட 'டெர்மினேட்டர் - ஜட்ஜ்மெண்ட் டே' படத்தைப் பார்த்துட்டு நானும் அதேபோல நடிக்கணும்னு சென்னைக்குக் கிளம்பி வந்தவன். இங்கே கம்பெனி கம்பெனியா ஏறியிறங்கி 'நல்லா நடிப்பேன், டான்ஸ் ஆடுவேன், காமெடி பண்ணுவேன்னு' என்னென்னவோ சொல்லிப் பார்த்தேன். யாரும் கண்டுக்கல" என்று ஆதங்கப் படுகிறார் ரோபோ கணேஷ்.

"ராஜ் டிவி புகழ் மிமிக்ரி செந்தில்தான் என் திறமையை அடையாளம் கண்டு ஊக்குவிச்சாரு. இப்போ நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து 'ஜாலி ஈவெண்ட்ஸ்'ங்கிற கம்பெனியை நடத்திட்டு வர்றோம்" எனச் சொல்லும் கணேஷ், டைனோசரஸ் வாக், அனிமேஷன், பேஷன் ஷோஸ், மாஸ்க் என்று பொழுதுபோக்கு அம்சங்களோடு உள்ளூரிலும், வெளிநாட்டிலும் நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறார். கணேஷின் தலைச்சன் கனவான சினிமாவில் நடிக்கும் ஆசையும் தற்போது நிறைவேறியிருக்கிறது. 'துள்ளல்', 'சொல்லி அடிப்பேன்' என இரண்டு படத்தில் நடித்திருக்கும் கணேஷுக்கு, 'ஒரேயொரு ஹாலிவுட் படத்திலாவது நடிக்க வேண்டு'மென்பதுதான் எதிர்கால லட்சியமாம்.

- சா. இலாகுபாரதி

படங்கள் : பொள்ளாச்சி சந்தரம்

வியப்பு என்னவென்றால் ஆதி மனிதன் குகைகளில் வெளிச்சத்துக்கு நெருப்பை எரிக்கும்போது ஒரு சில நானோ ட்யூப் கரித் திரிகளை உண்டாக்கியிருக்கலாம். அதே திரிகள் இன்று அதி நவீன நானோ டெக்னாலஜியில் முக்கியத்துவம் வகிக் கின்றன.

நானோ ட்யூப்களின் மற்ற பயன்பாடு கள் என்னென்ன? அவை எந்த அளவுக்கு முன்னேறியிருக்கின்றன என்பதை இப் போது பார்ப்போம். நானோ ட்யூப்களை வைத்துக்கொண்டு டெலிவிஷன், கம்ப்யூட்டர்களுக்கான மானிட்டர்கள் தற்போதுள்ள எல்.சி.டி கேதோடு ரே ட்யூப் வகையிலிருந்து மிகவும் மாறுபட்டு மிக இலேசான மிக பளிச்சென்ற மானிட் டர்கள் சாத்தியமாகியுள்ளன. எதிர் காலத்தில் கம்ப்யூட்டர் மானிட்டர்கள் ஒரு காகிதம்போல இலேசாகிவிடும் என்கிறார்கள்.

நானோ ட்யூப்கள் டி.என்.ஏ பரிசோத னையில் பயன்படுகின்றன என்பதைப் பற்றி முன்பு சொன்னோம். இந்தப் பயன் பாடு மெல்ல மெல்ல வியாபார சாத்தி யத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. நானோ ட்யூப்களை வைத்துக்கொண்டு அவற்றை அடர்த்தியான மெமொரி என்னும் ஞாபக அடுக்குகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இவற்றின் வேகம் மிகக் குறைவாக இருப்ப தால் தற்போது இதில் அதிகம் கவனம் இல்லை. இரண்டு நானோ ட்யூப்களைத் திறந்து மூடும் கிடுக்கி போலப் பயன் படுத்தி 500 நானோ மீட்டர் உள்ள சிறிய பொருள்களைப் பொறுக்கி நகர்த்த முடியும். நுட்பமான எறும்பு ரோபாட்டு கள் செய்ய இந்தக் கருவி பயன்படும். தற்போதைவிட பத்தாயிரம் மடங்கு பிர காசமான விளக்குகள், ஹைட்ரஜனை உள்வாங்கிக் கொண்டு வெளிப்படுத்தும் ஃப்யுல்செல் என்னும் எரிபொருள்கள், அதிக வலுவுள்ள இலேசான மூலப் பொருள்கள், டி.என்.ஏ ஆராய்ச்சி என்று நானோ ட்யூப்களின் பயன்பாடுகள் பல துறைகளில் விரிகின்றன.

எது எப்போது ஆராய்ச்சிசாலையை விட்டு வெளிப்பட்டு நடைமுறைக்கு வரும் என்பது அடுத்த பத்து ஆண்டு களில் தெளிவாகும்.

(முற்றும்)



குரு

குரு, ஆசார்யர், தேசிகர், உபாத்யாயர், அத்யக்ஷகர், புரோஹிதர் என்றிப்படி நமக்கு அறிவைத் தருகிறவருக்குப் பல பேர் சொல்கிறோம். வெறுமே அறிவைத் தராமல் நல்லறிவைத் தருகிறவராக அவர் இருக்க வேண்டும் என்பதே ஆதிகாலம் தொட்டு நம் மரபு வலியுறுத்தி வந்திருக்கிற விஷயம். அதாவது அறிவை வளர்த்துக் கொடுக்கும்போதே, கெட்டதற்கு அந்த அறிவு ப்ரயோஜனப்படாமல் தர்ம வழியிலேயே போய் நல்லதைச் செய்யும்படி ரூபம் பண்ணித் தருகிறவரே குரு. இன்னும் ஆசார்யர், அத்யக்ஷகர், உபாத்யாயர், புரோஹிதர், தேசிகர் இந்த எல்லாப் பெயர்களையும் நாம் ஒரே அர்த்தத்தில் உபயோகப்படுத்துகிறோம். ஆனால் இவற்றில் ஒன்றுக்கொன்று வித்யாஸம் சொல்லிப் பாகுபடுத்தியும் தனித்தனி லக்ஷணம், 'டெஃபனிஷன்' சொல்லியிருக்கிறது. அடிப்படையில் இந்த எல்லாருடைய கார்யமும் சிஷ்யரை நல்ல வழியில் போகச் செய்வதே என்றாலும் அதைச் செய்வதில் உள்ள வித்யாஸமான முறைகளை வைத்து வெவ்வேறாக டெஃபனிஷன் கொடுத்திருக்கிறது.

இன்னொரு தினுஸாகவும் சொல்லலாம். அதாவது நல்வழிப்படுத்துகிற அந்த ஒரே பெரியவரின் ஒவ்வொருவிதமான கார்யத்தை - ஒவ்வொரு 'ஆஸ்பெக்'டை - வைத்து ஒவ்வொரு பெயரைக் கொடுத்து அதற்கான டெஃபனிஷன்கள் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

அருள்வாக்கு





• குகை மா.புகழேந்தி

நவ்தீப் மற்றும் அபர்ணா நடித்த 'நெஞ்சில் ஜில் ஜில்' படத்தின் பாடல் காட்சி புகைப்படங்களை குகை மா. புகழேந்தியிடம் காட்டினோம். இவற்றுக்கு ஒரு திடீர் டூயட் எழுதச் சொல்லிக் கேட்டபோது, நல்லதொரு தத்தகாரத்துடன் பின்லேடனையும் அவர் துணைக்கழைப்பார் என்று நாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை! காதல் தீவிரவாதம் தூக்கலாகவே தென்படும் புகழேந்தியின் பாடல் இதோ:

பல்லவி

ஆண்: காதல் கொண்டு வந்தவள் - இரு
கண்ணில் என்னைத் தின்றவள்...
ஆசை தந்து நெஞ்சிலே - தினம்
ஆர்ப்பரித்து நின்றவள்...

மின்னல் தீ ரெண்டும் கொண்டு
பின்லேடன் போலே வந்து
கண்மூடும் நேரம் என்னைக்
கவிழ்த்தாளே...

என் கையில் ஏதுமில்லை
என் காற்றில் சுவாசமில்லை
என்னோடு நானுமில்லை
இவளாலே...

இனி வாழ்வேன்
இவள் நிழல் போலே... ஓஹோ
ஓஹோ ஹோ...
(காதல் கொண்டு....)

சரணம் - 1

ஆண்: ஜிவ்வென்று ரத்தம்
ஊறுதே...

ஜில்லென்று வெப்பம் மாறுதே...
சுள்ளென்று தூறல் தூறுதே...
உன்னாலே...

பெண்: உள்ளொன்று சொல்லத்
தோன்றுதே...
சொல்லொன்றைச் சொல்லிப்
போகுதே...
நில்லென்றால் நெஞ்சு ஓடுதே
தன்னாலே...

ஆண்: அஞ்சாத ஆசைகள் ஆவலில்
ஆளை மேயுதே...
பெண்: கண்ஜாடை பேசிடும்
பாஷைகள் பாலம் போடுதே...
ஆண்: ஹைய்யயோ காதல் கொண்ட
ஆணும் பெண்ணும் ஏதோ பண்ணுதே...
உள்ளே...
(காதல் கொண்டு....)

சரணம் - 2
ஆண்: வெட்கத்தை கட்டறுக்கவா...
அச்சத்தை அச்சுறுத்தவா...
மிச்சத்தை நச்சரிக்கவா... சொல்வாய்
நீ...

பெண்: நீ செல்லும் ஊரைச்
சொல்லவா...
நான் உந்தன் பாதை
அல்லவா...
நாம் என்னும் தேடல் கொண்டுவா...
வெல்வாய் நீ...
ஆண்: திக்கெட்டும் நான்கொண்ட
காதலை கூவிச் செல்லவா...
பெண்: தித்திக்கும் தீண்டலில் நீ
என்னை வாரிக்கொள்ள வா...
ஆண்: விண்ணெட்டும் வேளை அந்த
சூரியனின் கண்கள் கட்டவா...
அன்பே...
(காதல் கொண்டு....)

முடிவு பல்லவி
பெண்: காதல் கொண்டு வந்தவன் -
இரு
கண்ணில் என்னைத் தின்றவன்...
ஆசை தந்து நெஞ்சிலே - தினம்
ஆர்ப்பரித்து நின்றவன்...
ஆண்: மின்னல் தீ ரெண்டும்
கொண்டு
பின்லேடன் போலே வந்து
கண்மூடும் நேரம் என்னைக்
கவிழ்த்தாளே...
பெண்: என் கையில் ஏதுமில்லை
என் காற்றில் சுவாசமில்லை
என்னோடு நானுமில்லை இவனாலே...
இனி வாழ்வேன்
இவன் நிழல் போலே... ஓஹோ
ஓஹோஹோ...
(காதல் கொண்டு....)



அமரர் கல்கி

ஒரு சமயம் நான் ஸ்ரீமான் வி.ஜே. படேல் அவர்களுடன் கோயமுத்தூரில் ஒரே ஜாகையில் சுகவாசம் செய்யும்படி நேரிட்டது.

கோயமுத்தூரை ஏதோ மட்டமாக நினைக்க வேண்டாம், அந்நகரம் தேச பக்திக்கும், தேகாரோக்கியத்துக்கும், கோடை கால குளிர்ச்சிக்கும் பெயர் போனதாகும்.

தமிழ்நாட்டிலுள்ள மற்ற ஜில்லாக் காரர்களுக்கு, கோயமுத்தூர் சுகவாசத் துக்குரிய இடந்தான். நமது சென்னை சர்க்கார் கூட இதை ஒப்புக்கொண்டு முத்திரை வைத்திருக்கிறார்கள். முன் பொரு தடவை, டாக்டர் பெஸண்டம்மை, ஸ்ரீமான்கள் அருண்டேல், வாடியா இவர்களை அந்நகரில் சுகவாசம் செய்ய அனுப்பினார்கள். அப்புறம் சமீப காலத்தில் இந்திய சட்டசபையின் மாஜி அக்கிராசனர் ஸ்ரீமான் வி.ஜே. படேல், வட இந்தியாவின் வெய்யிலில் தமது ஆரோக்யம் கெட்டு வருகிறது என்று புகார் செய்ததன்மேல் அவரையும் கோயமுத்தூருக்கே அனுப்பி வைத்தார்கள்.

ஸ்ரீமான் வி.ஜே.படேல் சர்க்காரின் 'ஏ' வகுப்பு விருந்தினராய் இருந்தார். ஆகவே, அவர் ஒரு தனிப் பகுதியில் வைக்கப் பட்டிருந்தார். 'ஸி' வகுப்பு விருந்தாளிகள் அவரைக் கண்டு பேசுவதற்கு அவ்வளவு வசதி கிடையாது. ஆனால், ஜெயில் ஆபீஸுக்குப் போகும் பாதைக் கருகில் அவருடைய அறை இருந்தபடியால், அடிக்கடி ஏதாவது காரணம் கற்பித்துக் கொண்டு நாங்கள் ஜெயில் ஆபீஸுக்குப் போவோம். போகும்போது எங்கள் கண்கள் அவரிருந்த திக்கையே நோக்கும். சில சமயம் அவருடைய பூரண தரிசனம் கிடைக்கும்; சில சமயம் அவருடைய தாடி மட்டுந்தான் கண்ணில்படும். அவ்வளவு பெரிய தேச பக்தரை 'இன்ஸ்டால்மெண்டு' முறையில் தரிசனம் செய்து திருப்தியடையவும் நாங்கள் தயாராய்த் தானிருந்தோம்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் இடுக்கிடத்தக்க ஒரு செய்தி வந்தது. ஸ்ரீமான் படேலை வைத்திய பரிசோதனைக்காக ஆபரேஷன் மேஜை மேல் படுக்க வைத்தார்களென்றும், மேஜை சரியாய்ப் பொருத்தப்படாதபடியால் கீழே விழுந்து விட்டாரென்றும் ஒரு வாய்த் தந்தி - வதந்தி - சப்பட்டை கட்டிக்கொண்டு பறந்தது. சிலர் இதை நம்பினார்கள்; சிலர், 'எங்கேயாவது உண்டா? நம்ப முடியாது' என்றார்கள்.

இதன் உண்மையைக் கண்டுபிடிக்கும் ஆவலினால், ஜெயில் ஆபீஸுக்குப் போக ஒரு பொய்க் காரணத்தைக் கண்டுபிடித்துக்கொண்டு சிலர் கிளம்பினோம். வழியில் ஸ்ரீமான் படேல் இருந்த பகுதிக்குச்




ஜெயில் சுகம்!



சமீபம் சென்றதும் கிராதிக்கு அருகில் கும்பலாய் நின்றோம். ஸ்ரீமான் படேல் எங்களைக் கண்டதும், கட்டிலிலிருந்து எழுந்து, தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தார். "ஏதோ சம்பவம் நடந்ததாகக் கேள்விப்பட்டோமே? அது வாஸ்தவமா?" என்று எங்களில் ஒருவர் கேட்டார். "ஆம். வாஸ்தவந்தான். இந்திய சட்டசபையின் மாஜி அக்கிராசனர் இத்தனை நேரம் செத்துப் போயிருக்க வேண்டியது; பகவான் காப்பாற்றினார்" என்றார். உடனே திரும்பிச் சென்றார். அவர் கூறிய செய்தியைவிட, அந்தக் குரல் தான் எங்கள் இருதயத்தை அதிகமாக உருக்கியது.

"அடே! பெயர் பெற்ற பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தைக் கண்ணில் விரல் கொடுத்து ஆட்டிய இந்தத் தீர புருஷரை, காங்கிரஸ் மேடையில் போலவே இந்திய சட்டசபை அக்கிராசன பீடத்திலிருந்தும் தேசிய கர்ஜனை புரிந்த இந்த வீர சிம்மத்தை, இப்படிப்பட்ட நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டார்களே!" என்று எங்களுக்கு ஒரு பக்கம் ஆத்திரமும், ஒரு பக்கம் துக்கமும் பொங்கின. ஆனால் ஜெயிலுக்குள் ஆத்திரமும் துக்கமும் 'காண்ட்ர பாண்டு' சாமான்களாதலால் அவற்றை வெளிக் காட்டாமல் திரும்பினோம்.

இதிலிருந்து, ஜெயில் வாசத்தின் சுகத்தை நான் குறைத்துச் சொல்வதாக நினைக்கக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன். ஜெயில் என்னமோ சுகமாய்த் தானிருந்தது; ஆனால், அந்தத் தாடிக்காரர் பொல்லாத மனிதர் என்பது யாவரும் அறிந்ததே. அவர் வேண்டுமென்றே, ஜெயிலுக்குப் போவோம் என்பதை முன்னாடியே ஊகித்து, ஊரில் இல்லாத வியாதிகளையெல்லாம் வரவழைத்துக் கொண்டு வந்தால், யார் என்ன செய்யலாம்? அந்த விஷமக்கார மனிதர் ஜெயிலிலேயே பிராணனைக்கூட விட்டு, பிரிட்டிஷ் அரசாட்சிக்கு அபகீர்த்தி உண்டு பண்ணக்கூடிய பேர்வழியல்லவா? நல்ல வேளையில் அவரைச் சில நாளைக்கு முன்னதாகவே விடுதலை செய்தார்களோ, பிழைத்தார்களோ!



மற்றப்படி, 'ஸி' வகுப்புக் கைதிகளாகிய நாங்கள் எல்லாம் சுகமாய்த்தானிருந்தோம். உண்மையில் எங்கள் சுகவாசத்துக்கு மூன்றே மூன்று இடையூறுகள்தானிருந்தன. அவைதான் வார்டர்கள், ஜெயில் விஸிட்டர்கள், மூட்டைப் பூச்சிகள் என்பன.

- வானதி பதிப்பகத்தின் 'கல்கி களஞ்சியம்' நூலிலிருந்து...

■ விஜயா கிருஷ்ணமூர்த்தி ■

காலையில் எழுந்ததுமே மைதிலி தலைபாரமாக இருப்பதை உணர்ந்தாள். உடம்பும் இலேசாகச் சுடுகிறதே என்று எண்ணியவள் சுவர்க்கடிகாரத்தைப் பார்த்துப் பதறினாள். மணி ஆறு என்றது கடிகாரம். தனது மகன் கார்த்திக் காலேஜுக்குக் கிளம்புவதற்குள் எப்படி டிபன் செய்து முடிக்கப் போகிறோமோ என்ற கவலை அவளைப் பிடித்தது; தன் பலத்தை முழுவதும் திரட்டிக்கொண்டு எழுந்த மைதிலியை ஒன்றன்பின் ஒன்றாக வேலைகள் விரட்டின.

கணவர் சிவராமனோ, மகன் கார்த்திக்கோ சமையலறைப் பக்கமே வரவில்லை. கார்த்திக்குக்குச் செல்லில் வரும் அழைப்புகளுக்குப் பதில் பேசவே நேரம் போதவில்லை. சிவராமன் செய்தித்தாள், வாக்கிங் இவற்றிலே வழக்கம்போல் மூழ்கிவிட்டார்.

இட்லியை டைனிங்டேபிளுக்கு எடுத்து வந்தவளிடம், கார்த்திக் "என்னம்மா மிளகாய்ப் பொடி வைத்திருக்கிறாயே. சட்னி, சாம்பார் கிடையாதா?" என்றான்.

மைதிலி மிகப் பொறுமையுடன், "இல்லைடா கார்த்திக், எனக்குக் கொஞ்சம் உடம்பு முடியலை. ஜுரம் வர்றாப்ல இருக்கு" என்றாள்.

"ஓ.கே, நோ ப்ராப்ளம்" என்றவாறே அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு கிளம்பி விட்டான்.

அடுத்த நிமிடமே சிவராமன் குரல், "மைதிலி எத்தனை தடவை உன்னைக் கூப்பிடுவது? துண்டு எடுத்துக்கொடு."

மெதுவாகச் சென்று அவரது அலமாரியிலிருந்து துண்டை எடுத்துக் கொடுத்தவளை, கவனிக்காமலேயே கையை மட்டும் நீட்டி துண்டைப் பெற்றுக் கொண்டவர், "இப்படியா ஆடி அசைந்து வருவது, எவ்வளவு நேரம் இப்படியே ஈரத்தோட நிற்பது?" எனறு சிடுசிடுத்தார் சிவராமன்.

தயக்கத்துடன், "வந்து..." என்று ஆரம்பித்தவளை தலைகூட நிமிர்ந்து பாராது, அடுத்த அறையை நோக்கி நடந்தவாறே "மைதிலி, சாப்பிடுறதுக்கு எனக்கும் நாலு இட்லி கொடு..." அப்புறம், ஷார்ப்பா ஒன்பது மணிக்கு மிஸ்டர். குப்தா அலுவலகத்துக்கு வரச் சொல்லியிருக்கார். இன்று இரவு அவருக்கும் அவர் வைப்புக்கும் டின்னர்



நம் வீட்டில்தான்" என்றவர், மனைவியிடமிருந்து எந்தப் பதிலும் வரக் காணாததால், "என்ன மைதிலி பதிலையே காணோம்" என்றார்.

"இல்லை, கார்த்தாலேயிருந்து

எனக்கு உடம்பு முடியாமல் இருக்கு. ஜுரமடிக்கிறது'' என்றாள் ஈனஸ்வரத்தில்.

''இவ்வளவுதானே! நான் என்னவோ ஏதோன்னு பயந்திட்டேன். ஒரு க்ரோஸின் போட்டுக்கோ. எல்லாம் சரியாயிடும்'' என்று காஷுவலாகச்



சொன்னார். ''குப்தாவும் அவரோட மனைவியும் எட்டு மணிக்கு வந்திடுவாங்க! மெதுவடையும், வெங்காய சாம்பாரும் ரொம்பப் பிடிக்கும் அவங்களுக்கு. அதைக் கட்டாயம் தயார் செய்திடு'' என்று சொன்னவாறே மடமடவென்று சாப்பிட்டுவிட்டு, அவள் இருந்த பக்கம் பார்க்காமலேயே அலுவலகம் புறப்பட்டார்.

திகைத்துத்தான் போனாள் மைதிலி. சரி, ஒரு க்ரோஸின் போட்டுக்கொண்டு தலையைச் சாய்ப்போம் என்று எண்ணியவள் சிறிது நேரத்தில் தூங்கியும் போனாள்.

திடீரென்று கண் விழித்து மணியைப் பார்த்தாள். திடுக்கிட்டாள். செய்ய வேண்டிய வேலை நிறைய இருக்கிறதே என்று தட்டுத்தடுமாறி,

முதலில் பருப்பை குக்கரில் போட்டவனை வாசல் அழைப்பு மணி அழைத்தது.

மெதுவாகச் சென்று கதவைத் திறந்தாள். அங்கு அவள் நெருங்கிய தோழி வசந்தா புன்னகைத்தவண்ணம் நின்றிருந்தாள்.

"வா, வசந்தா" என்றவளைப் பார்த்த வசந்தா, பதறியபடி "என்னடி? கண்ணெல்லாம் சிவந்து முகம் ஜிவுஜிவுன்னு இருக்கு. உடம்பு சரியில்லையா?" நெருங்கி தொட்டுப் பார்த்துவிட்டு, "அடடா உடம்பு அனலா கொதிக்குதே? அது என்ன? கிச்சனிலிருந்து விசில் சத்தம். இந்த உடம்போடு என்ன செய்றே?" என்று அதட்டலாகக் கேட்டாள். அவளிடம் ஈனஸ்வரத்தில் சுருக்கமாக விஷயத்தைக் கூறினாள் மைதிலி.

"உன் ஹஸ்பெண்டிடம் உனக்கு ஜுரம்னு சொல்லலையா? படிக்கிற நான்லயே எல்லாத்தையும் மென்னு முழுங்குவே. பளிச்சினு மனசில இருக்கிறதைச் சொல்லமாட்ட. இப்படி இருந்தா உனக்கு பாராட்டு பத்திரமா கொடுக்கப் போறாங்க?" என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"கொஞ்சம் இரு மைதிலி' என்றவாறு சமையலறைக்குள் நுழைந்து மடமடவென்று மைதிலிக்குக் கஷாயம் போட்டுக் கொடுத்த வசந்தா,

"நீ ஹாலிலேயே ஓய்வு எடுத்துக்கோ. நான் எல்லாம் பார்த்துக்கிறேன்" என்று கூறிவிட்டு, பம்பரமாகச் சுழன்று, சமையலைச் செய்து காஸரோலில் போட்டு ஒவ்வொன்றாக டைனிங்டேபிளில் வைத்தாள். மைதிலியோ தெய்வமே வசந்தாவின் உருவில் வந்து தனக்கு உதவியதாக எண்ணி அவள் கையைப் பற்றிக்கொண்டு கண்கலங்கினாள்.

"மைதிலி நாளைக்கு முதல் வேலையாய் டாக்டரைப் போய்ப் பார். நான் அப்புறம் போன்ல உங்கிட்டே பேசறேன்" என்று செல்லமாக மிரட்டி விட்டுச் சென்றாள்.

சுமார் ஏழரை மணிக்கு வீட்டுக்குள் நுழைந்த சிவராமனின் கண்கள் டைனிங்டேபிளைத்தான் முதலில் பார்த்தன. திருப்தி அடைந்தவராக விருந்தினரை வரவேற்க தன்னைத் தயார் படுத்திக்கொள்ள குளியலறையை நோக்கிச் சென்றார். திரும்பி வந்தவர், "மைதிலி, அவங்க வர்ற நேரமாயிடுச்சு" என்றவாறு சோபாவில் அமர்ந்து கொண்டார்.

மணி எட்டே கால் ஆனது. எழுந்து வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்த வரை தொலைபேசி அழைத்தது. மறுமுனையிலிருந்து குப்தா பேசினார்.



"ட்ரீட்மெண்ட் எதுவும் வேணாம். கொஞ்ச நாளைக்கு செல்போனை இடக் காதில் வெச்சுப் பேசுங்க... சரியாயிடும்!"

- ஞா. ஞானமுத்து

"வெரி சாரி, மிஸ்டர் சிவராமன். உங்கள் வீட்டு டின்னருக்கு வர முடியவில்லை. என் மனைவிக்கு இலேசாகத் தலைவலிக்குதாம். சாயங்காலம் வரை ஷாப்பிங் செஞ்சிருக்கா... பசித் தலைவலியாகக் கூட இருக்கலாம். இந்த நேரத்துல சென்னை ட்ராபிக்கில் உங்கள் வீட்டுக்கு வர, எப்படியும் முக்கால் மணி நேரமாயிடும். அவளுக்கு ஓய்வுதான் தேவைன்னு நினைக்கிறேன். லெட் ஹர் டேக் ரெஸ்ட். டின்னரை ஹோட்டல்லயே ஆர்டர் செஞ்சிட்டேன். அதுதான் கொஞ்சம் நேரமாயிடுச்சு. வெரி ஸாரி! குட் நைட்" என்று கூறி போனை வைத்தார்.

அன்று மைதிலியைப் பார்க்கவே கொஞ்சம் வெட்கப்பட்டுப் போனார் சிவராமன். ○



ஒரு பக்கம்

நான் ராஜினாமா செய்கிறேன்!

ஃபிடல் காஸ்ட்ரோ உலக பணக்காரத் தலைவர்கள் வரிசையில் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளார். இவரது சொத்து மதிப்பு 900 மில்லியன் டாலர்கள். அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ஃபோர்ப்ஸ் (Forbes) எனும் பத்திரிகை இந்த ஈடு இணையற்ற அற்புத கண்டுபிடிப்பை வெளியிட்டு பரவசமடைந்துள்ளது.

ஃபிடல் காஸ்ட்ரோவைச் சீண்டாவிட்டால் அமெரிக்காவுக்குப் பொழுதுபோகாது. 'அவர் இப்போது இறந்து கொண்டிருக்கிறார்', 'மூந்தா நாளே இறந்துவிட்டார்', 'இல்லை இல்லை நாளை மறுநாள் கட்டாயம் இறந்துவிடுவார்'என்கிற ரீதியில் நாவலாசிரியர்களை மிஞ்சிவிடும் அளவுக்குச் செய்திகளை உருவாக்குவது அமெரிக்காவின் ஹாபி. 'நான் இன்னமும் இறக்கவில்லை. உயிரோடுதான் இருக்கிறேன்' என்று காஸ்ட்ரோ பல முறை அறிவித்த பிறகும் கூட, அமெரிக்கா அவரை நம்ப மறுக்கிறது. ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் அவரைக் கொன்று கொண்டிருக்கிறது.

இதே வரிசையில்தான் இந்த 900 மில்லியன் டாலர் கண்டுபிடிப்பையும் நிகழ்த்தியிருக்கிறார்கள். பிரிட்டன் மகாராணி எலிஸபெத்தின் சொத்து மதிப்பைவிட (500 மில்லியன் டாலர்) காஸ்ட்ரோவின் சொத்து மதிப்பு அதிகமாம். கொட்டை எழுத்தில் இந்த தலைப்புச் செய்தியை வெளியிடும்போது கொஞ்சம் கூட கூசவில்லை ஃபோர்ப்ஸுக்கு.

'900 மில்லியன் டாலர் வேண்டாம் 90 மில்லியன் போதும். அவ்வளவு ஏன், 9 மில்லியன் டாலரே போதும். அது கூட வேண்டாம் ஒரே ஒரு டாலர் என் வங்கிக் கணக்கில் ஏதாவது ஒரு வெளிநாட்டில் இருப்பதாக நிரூபியுங்கள், நான் ராஜினாமா செய்து விடுகிறேன்'என்று முகத்தில் அறைவதைப் போல அறிவித்திருக்கிறார் காஸ்ட்ரோ.

அதுசரி, காஸ்ட்ரோவின் அசல் சொத்து மதிப்பு என்ன? நம்புவதற்குக் கடினமாக இருந்தாலும் நிஜம் இதுதான். சல்லிக்காக கூட கிடையாது. அவரது மாதாந்திரச் சம்பளம் 900 க்யூப பெஸோ. (அமெரிக்காவுக்கு அவ்வளவாகக் கணக்குப் போடத் தெரியாது என்பதால் அமெரிக்க டாலரிலேயே சொல்லிவிடுவது உத்தமம். அதாவது 40 அமெரிக்கா டாலர்). இதுதான், இது மட்டும்தான். இதை வைத்துக் கொண்டு மில்லியன்களில் சொத்து சேர்க்க முடியாது. வேண்டுமானால் மக்களின் நம்பிக்கையைச் சேர்க்கலாம். அதைப் போதுமான அளவுக்கு ஏற்கெனவே சேர்த்துவிட்டார்.

- மருதன்

GOKULAM GREETS SACHIN!



- An Exciting Encounter



NILAKANTA

- Mythology



THE MIRACLE BEAN!

- All about Soya

FOOTBALL FEVER!

- Your chance to win a Football!

&

Your favourites :

Spiderman, Viewpoint, Grandmaworm, Hello Doctor, Jokes, Puzzles, Srippets & More...

JUNE 2006 Rs.8/-

GOKULAM

THE Magazine for Children

நடக்குமென்பார்; நடக்கும்!

4.6.2006 முதல்
10.6.2006 வரை



படம்: ஸ்ரீஹரி

தஞ்சை பரத்வாஜ்





மேஷம்: எண்ணங்கள் யாவும் ஈடேறும். பணக் கஷ்டம் இருக்காது. வாக்குவன்மை மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வீடு/மனை வாங்க நல்ல நேரம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். நீண்ட தூரப் பிரயாணங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் இடமாற்றம், பதவி உயர்வு ஏற்படும். திருமணம் கைகூடும். மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படும். குழந்தை பாக்கியம் கிட்டும். மாணவ மாணவியர் கல்வியில் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். குழந்தைகள் வழியில் மன சந்தோஷம் உண்டாகும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலனைத் தரும்.

ரிஷபம்: எதிரிகள் சரண் அடைவார்கள். பூர்வீகச் சொத்து கைவிட்டுப் போகும். நெருங்கிய கூட்டாளிகள் / உறவினர்கள் விலகிக் கொள்வார்கள். மனத்தில் தைரியமும் துணிவும் ஏற்படும். குழந்தைகள் வழியில் சுபச்செலவுகள் வரும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். உத்தியோகத்தில் மாறுதல் ஏற்படும். புதிய வேலை வாய்ப்புக் கிட்டும். பொருளாதாரச் சிரமங்கள் இருக்காது. உடல்நிலையில் கவனம் தேவை. வேலைப்பளு அதிகரிக்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

மிதுனம்: வழக்கு வெற்றி பெறும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புத்திரபாக்கியம் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். தாயின் உடல்நிலை சற்று பாதிக்கும். குழந்தைகள் பற்றிய மனக்கவலை தீரும். உடல் நிலை பாதிக்காது. நண்பர் / உறவினர்களால் ஆதாயம்



பரத்வாஜ் பதில்கள்

எனது மகளின் திருமணம் எப்போது நடக்கும்?

- லட்சுமணன், கல்யாணம்பை

உங்கள் மகளின் திருமணம் 29வது வயதில் நடக்கும்.

எனது கணவருக்கு எப்போது சென்னைக்கு ட்ரான்ஸ்பர் கிடைக்கும்?

- என் கிருஷ்ணவேணி, சென்னை - 91

உங்களது மகளின் ஜாதகப்படி, 30.9.2006க்குப் பிறகு இடமாற்றம் ஏற்பட்டு சென்னைக்குத் திரும்பு வார்.

ஏற்படும். வீடு / மனை வாங்க நல்ல காலம். எதிர்ப்பு, தொல்லை விலகும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக் கும். உத்தியோகத்தில் நல்ல முன் னேற்றம் ஏற்படும். சிலருக்கு அயல் நாட்டு முயற்சி, கூட்டுத் தொழில் நற்பலனை அளிக்கும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

கடகம்: குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். புண்ணிய ஸ்தலங்கள் செல்வீர் கள். மகான் சந்திப்பு கிட்டும். வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் மாற்றம் வரும். ஆரோக்கியம் பாதிக்காது. கொடுக்கல் வாங்கல் நற்பலனைத் தரும். வராத பாக்கி வரும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற் றம் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போகவும். குரு / சனி வழிபாடு நன்மை தரும்.

சிம்மம்: பிரயாணம், வைத்தியம் செய்து செலவு பண்ணும் வாரம். உடல் நிலையில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை அவசியம். வண்டி வாகனங்களில் போகும்போது கவன முடன் செல்லவும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். நெருங்கிய உறவினர்/நண் பர்களிடம் மனக்கசப்பு வரலாம். திருமணத் தடை விலகும். வேலைப்பளு அதிகரிக்கும். தொழிலில் மந்தகதி ஏற் படும்.

கன்னி: வேலையில் இருந்துவந்த டென்ஷன் விலகும். பணக்கஷ்டம் இராது. உடல்நிலை பாதிக்காது. கணவன் / மனைவி விட்டுக் கொடுத்துப் போகவும். உடன்பிறப்பால் நன்மை ஏற்படும். வெளியூர்ப் பிரயாணம் செல்ல நேரிடும். வீடு/வாசல் வாங்க நல்ல காலம். புதிய தொழில் கை கொடுக்கும். உத்தியோ கத்தில் உயர்வு/இடமாற்றம் வரலாம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற் படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். மாணவ / மாணவியர் நல்ல மதிப் பெண்கள் பெற்று விரும்பிய கல்வியில் சேர்வார்கள். வாக்குவாதம் தவிர்க்கவும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

துலாம்: கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி கிட்டும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் சுபச் செலவு நடைபெறும். வழக்கு வெற்றி அளிக்கும். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் ஏற்படும். பணக்கஷ்டம் தீரும். தொழில்துறையில் வருமானம் வரும். உத்தியோகத்தில் பதவி மற்றும் வேறு வேலை கிடைத்தல், பதவி உயர்வு போன்ற நிகழ்வுகள் நடக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். மன உளைச்சல் தீரும். தொலை தூரப் பிரயா ணம் செல்ல நேரிடும். வீடு/மனை வாங்க நல்ல நேரம். குரு / சனி வழிபாடு நற்பல னைத் தரும்.

விருச்சிகம்: மன சந்தோஷம் ஏற்படும். வாக்கு, தனம் மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும். சுப காரியம் நடக்கும். பூர்வீகச் சொத்து கைவிட்டுப் போகும். நெருங்கிய கூட் டாளிகள் விலகிப் போவார்கள். கூட்டுத்

எனது மகளுக்கு எப்போது குழந்தைப்பேறு கிடைக்கும்?

- பெயர் வெளியிட விரும்பாத வடபழனி வாசகி

உங்கள் பெண் ஜாதகப்படி ராகு தசை, ராகுபுக்தி நடக்கிறது. 2006-ல் குழந்தைப்பேறு ஏற்படும். கவலைப்படத் தேவையில்லை.

என் மகனுக்கு நிரந்தர வேலை அமையுமா? திருமண பாக்கியம் உண்டா?

- கே.எஸ். மூர்த்தி, சென்னை

உங்கள் மகனுக்கு 49 வயது வரை சனி தசை நடக்கும். அடிமைப்பணி நிரந்தரமாக அமையாது. சுயதொழில் செய்தால் முன்னேற்றம் காணலாம். திருமணம் நடக்கும். கவலைப்படத் தேவையில்லை.

தொழில் செய்பவர்கள் நற்பலனை அடைவார்கள். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இடமாற்றம் ரெடி. உடல் ஆரோக்கியம் பாதிக்காது. பொருளாதாரச் சிரமம் இருக்காது. நீண்ட தூரப் பிரயாணம் செல்ல நேரிடும்.

தனுசு: தொழில்துறையில் இடமாற்றம் செய்ய நேரிடும். உடல்நிலையில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். பணக் கஷ்டம் இருக்காது. நண்பர்/உறவினர்களால் மனக்கஷ்டம் வரலாம். யாருக்கும் ஜாமீன் போடக்கூடாது. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் சற்று மந்த சூழ்நிலை ஏற்படும். புதிய வீடு/மனை வாங்கலாம். சத்ரு தொல்லை மறைமுகமாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வரவும்.

மகரம்: பொருளாதார மேன்மை உண்டாகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கணவன் - மனைவி வாக்குவாதம் தவிர்க்கவும். தெய்வ பலம் ஏற்படும். மகான்களின் சந்திப்பு கிட்டும். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி நடக்கும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். சத்ரு தொல்லை விலகும். ஆரோக்கியம் பாதிக்காது. திருமணம் கைகூடும். மனசலனம் தீரும். வீடு மாற்றம் ஏற்படும். நீண்ட தூரப் பிரயாணம் செல்ல நேரிடும். மாணவ - மாணவியர் கல்வியில் அதிக மதிப்பெண் பெற்று விரும்பிய கல்வியில் சேருவார்கள். பணக்கஷ்டம் வராது.

கும்பம்: எடுத்த காரியம் வெற்றி அளிக்கும். பதவி உயர்வு, பணி உயர்வு, இடமாற்றம் ரெடி. பணக்கஷ்டம் இராது. உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். குடும்ப வாழ்வில் அனுசரித்து நடந்து கொள்வது நற்பலனை அளிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும்போது உஷார். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. நெருங்கிய நண்பர்/உறவினர்கள் பிரிந்து செல்ல நேரிடும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். வயிற்றுக் கோளாறு வர ஆரம்பிக்கும். புதிய தொழில் துவங்க நல்ல காலம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். கல்வியில் மேன்மை அடைவீர்கள். ராகு / கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

மீனம்: தனம், வாக்கு, கல்வி மேலோங்கும். பணக்கஷ்டம் வராது. மனக் குழப்பம் தீரும். கணவன்/ மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நற்பலனைத் தரும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நீண்ட தூரப் பிரயாணம் செல்ல நேரிடும். செலவுகள் சுபமானதாக இருக்கும். நண்பர்/ உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

"கமர்ஷியல் படம் ரொம்ப கஷ்டம்!"

-சவால் விடும் தரணி



ஆந்திராவில் தரணி இயக்கிய தெலுங்குப் படமான 'பங்காரம்' தோல்வியைத் தொட்டுவிட்டு, வெற்றித் திசை நோக்கி நகர்ந் திருக்கிறது. இதற்காகக் கோயில் குளம் ஏறி கடவுளுக்கு நன்றி சொல்லி யிருக்கிறார் தரணி. எல்லாம் முடிந்து ஆசுவாசமானபின் நமக்குப் பேட்டி யளித்தார்.

என்னதான் ஆச்சு 'பங்காரம்' படத் துக்கு?

படத்தின் முதல்நாள் கிடைச்ச ரிசல்ட் அவ்வளவு திருப்திகரமாக இல்லைதான். படத்தின் நீளம் ரசிகர்களுக்குப் பெரிய குறையா தெரிஞ்சுது. ஊரெல்லாம் படம் ஃப்ளாப்ங்கிற செய்தி பரவிடுச்சு. நாம படம் எடுக்கிறதே ரசிகர்கள் சந்தோஷத் துக்குத்தானே. உடனடியா பல காட்சி களை வெட்டினோம். இப்போ 150 திரை யரங்குகளில் ஜெகஜோதியா 'பங்காரம்' ஓடிட்டு இருக்கு. ரசிகர் முதற்கொண்டு எல்லோரும் சந்தோஷமாயிருக்காங்க. தெலுங்கு ரசிகர்கள் சினிமாவைக் கொண் டாடக்கூடியவங்க. அவங்க அழுறதுக்காக தியேட்டருக்கு வர்றதில்லை. 'சகலகலா வல்லவன்' படம் வந்தபோது எப்படி தமிழ் மக்கள் ஊர்கூடி தியேட்டருக்குப் போய் படத்தை ரசிச்சாங்களோ, அதே நிலைமை இன்னும் அங்கே இருக்கு.

ரிலீஸுக்குப் பிறகு காட்சிகளை வெட்டுவது தர்மசங்கடமாக இல் லையா?

அட, நான் என்ன காவியமா படைச் சிருக்கேன். பங்காரம் படத்தில் காதல் காட்சிகள் கிடையாது. இதை ஆந்திர ரசிகர்களால ஜீரணம் பண்ண முடியலை. அவங்களுக்குப் பிடிக்காத காட்சிகள் எதுக்குப் படத்துல வீணா இருக்கணும்? நமக்கு ஜனங்கதான் நீதிபதி. தயாரிப் பாளரும் போட்ட காசைத் திரும்ப எடுக்க வேணாமா? இந்தப் படத்துல லாபம் வந்தாத்தானே அவர் அடுத்தபடம் எடுப் பார். நாலு புதுமுகங்களுக்கு வாய்ப்புக் கொடுப்பார்? ஏற்கனவே 'குஷி' படத்துக் காக இதுபோலொரு குற்றச்சாட்டு வந்தபோதும் எஸ்.ஜே. சூர்யா முன் வந்து பல காட்சிகளை நீக்கினாரே! திரையுலகில் இது ஒண்ணும் புது சில்லை.

தொடர்ந்து நாலு பெரிய வெற்றிகள். மக்களோட ரசனை அத்துபடியா யிடுச்சா?

ஜெயிக்க ஜெயிக்க இப்போ வெற்றி ரொம்ப கடினமாயிடுச்சு. ஏன்னா எதிர் பார்ப்புகளோட சுமை கூடுதில்லையா. ஆனா இந்த உயரம் அடைய நான் இரு பது வருஷங்கள் சினிமாவுல போராட வேண்டியிருந்தது. இங்கே ஒரு இயக்கு நருக்கு எல்லாமும் தெரிஞ்சிருக்கணும். ஹீரோ கேள்வி கேட்டா சரியா பதில் சொல்லணும். இல்லாட்டி ஹீரோவும் தயாரிப்பாளரும் இயக்குநரை ஓவர்டேக் பண்ண ஆரம்பிச்சிடுவாங்க. இப்போ உள்ள இளைஞர்கள் உழைக்கத் தயங்கறது எனக்கு வேதனையா இருக்கு. சினிமா வுக்கு வர ஆசைப்படறவங்க தொழிலைக்



கத்துக்கிட்டு வரணும். பிரிட்டிஷ் லைப்ரரி, அமெரிக்கன் கவுன்சில்னு படையெடுக்கணும். கதையெழுதப் பழகணும். இண்டர்நெட்ல உலகத்தோட சிறந்த இயக்குநர்களோட சாட் பண்ண வசதியிருக்கு. முயற்சிக்கணும். நெருப்பில குளிச்சாத்தான் தங்கமா மாற முடியும்.

மசாலாப் படங்கள் மீதான விமர்சனங்களுக்கு உங்க பதில்?

கமர்ஷியல் படம் பண்றது ரொம்ப கஷ்டம். என்னை விமர்சிக்கறவங்க ஒரு கமர்ஷியல் படம் ஹிட் கொடுத்துட்டு வாய்கிழியப் பேசட்டும். நான் சல்யூட் அடிக்கிறேன். என் ஆசைக்கு இங்கே படம் எடுக்க முடியாது. மசாலாப் படமாயிருந்தாலும் என் படத்தில் தவறான கருத்துகளைப் போதிப்பது கிடையாது. என் ஹீரோக்கள் எந்த ஹீரோயின் பின்னாடியும் பூவை வைச்சுக்கிட்டு லோலோன்னு அலையமாட்டார்கள். அதுக்காக நான் காதலைத் தப்புன்னு சொல்லலை. ஆனா காதல் படங்களைத் தப்புன்னு சொல்றேன். காதலுக்காகத் தற்கொலை செய்துக்கறது, அடுத்தவனைக் கொலை செய்றது எல்லாம் தமிழ்சினிமாவின் அபத்தங்கள். என் ஹீரோக்கள், வாழ்க்கையில் அடிமட்டத்திலிருந்து போராடி முன்னுக்கு வர்றவங்களாத்தான் இருப்பாங்க. 'தில்'லுல ஒரு குறிக்கோள் உள்ளவன் போராடி ஜெயிப்பதைக் காட்டினேன் 'தூள்'ல நம்ம ஊர்ல இருக்கிற தண்ணீர்ப் பிரச்னையை கண்முன்னே காட்டியிருப்பேன். 'கில்லி'யில நம்ம பாரம்பரிய விளையாட்டான கபடியோட முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருப்பேன்.

விஜய் உங்க 'பங்காரம்' படத்தைத் தமிழ்ல ரீமேக் பண்ண மறுத்தது பற்றி?

நான் அதுக்குக் காரணமில்லை. ஒரு படத்தை இயக்கி முடிச்சதோட என் வேலை முடிஞ்சது. அதுக்கப்புறம் படத்தை மற்ற மொழிக்கு விற்பது தயாரிப்பாளரோட வேலை. விஜய் ஒரு படத்தை நிராகரிக்கிறது அவரோட உரிமை. நான் எதிலேயும் தலையிட முடியாது.

- ச.ந.கண்ணன்

ராஜப்பா வாழைப்பழத் தார்களை சைக்கிளில் ஏற்றித் தள்ளிக் கொண்டிருந்தான். எதிரில் அவன் கடைசியாகப் படித்த பத்தாம் வகுப்பாசிரியர் போலீஸ்காரருடன் பேசியவாறு நடந்து வர, அவனுக்குத் திக்கென்றது. கரையேறிய பழைய சட்டையும் கைலியுமாக தாடியுடன் இருந்த அவன், அந்தச் சூழ்நிலையில் அவரைச் சந்திப்பதைத் தவிர்க்க எண்ணினான்.

ஆசிரியர் அருகில் வர, அவன் பார்க்காதவன் போலச் சென்றான். ஆனால் அவர் அவனைக் கவனித்து விட்டார். சிறிது தூரம் கடந்ததும் ராஜப்பா தவிர்க்க முடியாமல் திரும்பிப் பார்க்க, அச்சமயம் அவரும் திரும்ப, முகத்தை வேகமாகத் திருப்பிக் கொண்டான்.

கரைபடிந்த அழுக்குச் சட்டை, நைந்து போன கைலி, ச்சே... என அலுத்துக் கொண்டபடி ஒரு கடை முன்னால் வண்டியை நிறுத்தினான். வாழைப்பழத் தாரை தோளில் சுமந்துபோய் கடை முன்னால் தொங்கிய கயிற்றில் மாட்டி விட்டான்.

"என்ன தம்பி! புது வேலை எப்படியிருக்கு?''. கடைக்காரர் பரிவுடன் விசாரித்தார்.

"பிடிக்கலண்ணே'' என்று சலிப்புக் காட்டினான்.

"ஆரம்பத்துல கஷ்டமாத்தான் இருக்கும். போகப் போகச் சரியாயிடும்."

"கடைக்குள்ளே ராசா மாதிரி உட்கார்ந்துக்கிட்டு ஏன் பேச மாட்டீங்க... வெயில்ல சுத்தி அலைஞ்சா தெரியும்!"

ராஜப்பா கோபத்தில் கொந்தளித்தான்.

"செய்யும் தொழிலே தெய்வம்னு சொல்லுவாங்க. நீ கேவலமா நினைக்குறே..."

"சரிண்ணே! விடுங்க. தார் எழுபத்தி அஞ்சு ரூபா, சாயங்காலமா வரேன்..."

பல கடைகளுக்குச் சென்று பழத்தாரை போட்டுவிட்டு, களைத்துப் போய் பழமண்டிக்குத் திரும்பினான். வகுப்பு ஆசிரியர் அவனுக்காக அங்கு காத்திருந்தார்! வண்டியை வேகமாய் மிதித்து அவரை நெருங்கினான். பயம் கலந்த மரியாதையுடன் வணக்கம் தெரிவித்தான். அதற்கு அவர் தலையை ஆட்டியவாறு எழுந்து நின்று, "எம்பேரு பால்ராஜ்! உங்களுக்கு ஞாபகமிருக்கா?" என பவ்யமாகக் கேட்க,

"சார்!" என்று அவன் பதற்றமானான்.

"ரொம்ப நாள் கழிச்சு பார்க்கிறோம். ஒருவேளை மறந்திட்டியோன்னு நினைச்


வாரியார் அமுதம்!

அழுகையில் தமிழ் அழுகை, இந்தி அழுகை, ஆங்கில அழுகை, தெலுங்கு அழுகை என்று மொழிப் பிரச்னை கிடையாது. சிலர் கண்ணீர் விட்டும், சிலர் தேம்பியும் அழுகின்றனர்.

குழந்தை பிறந்ததும் பாலுக்கு அழுகிறது. தாய் பால் கொடுக்கிறாள். ஐந்து வயதுக் குழந்தை மிட்டாய், புத்தகம் விளையாட்டுப் பொருள் கேட்டு அழுகிறது. பெற்றோர் குழந்தையின் ஆவலைப் பூர்த்தி செய்கின்றனர். இதேபோல் பலர் அழுகையின் மூலம் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றனர்.

அப்படியிருக்க, ஆண்டவனிடம் அழுது மனம் உருகி அவனிடம் வயப்பட்டால் நாம் விரும்புவதை அவன் கொடுக்காமல் போவானா?





அழைப்பு

பாலகுஞ்சரம்

சேன்."

"இல்ல சார்! இந்த நிலைமையில, உங்களைப் பார்க்க சங்கடமா இருந்துச்சு... அதான்..."என இழுத்தான்.

"இதுல சங்கடப்படுறதுக்கு என்ன இருக்கு? உத்தியோகத்துக்கு ஏத்த மாதிரி நீ இருக்க. அது பிடிக்கலைன்னா வேலையை மாத்த முயற்சி செய். அதை விட்டுட்டு உனக்கு நீயே வேலி போட்டு காயப்படுத்திக்காதே..."

"சரிங்க சார்."

உடனே ஆசிரியர் புன்னகைத்தபடி சொன்னார்: "எம்பொண்ணுக்குக் கல்யாணம் வச்சிருக்கேன், நீ வரணும்."

தனது கைப்பையில் இருந்து திருமண அழைப்பிதழ் ஒன்றை எடுத்தார். கவர் மேல் திரு ராஜப்பா அவர்கள், 'வருங்கால தொழிலதிபர்' என எழுதி அவனிடம் நீட்டினார்.

பத்திரிகையைப் பார்த்ததும் அவனுக்கு ஒரே அதிர்ச்சி. பிறகு அதைச் சமாளித்தவனாய்...

"என்ன சார், பெரிய வார்த்தை எல்லாம் போட்டு எழுதியிருக்கீங்க" என்றான்.

"தோணுச்சு எழுதினேன். உன்னால முடியும்னு நான் நம்பறேன்ப்பா..." என உறுதிபட அழுத்தமாய்க் கூறினார்.

அவன் குழப்பத்தோடு தரையை வெறித்துப் பார்த்தான். சில நொடிகள் கழிந்தன. மெல்ல தெளிவு ஏற்பட்டு அவன் முகத்தில் உறுதி தெரிந்தது.

படிப்படியாய்க் கிளம்பிய பிரச்னை!

படியில் அமர்ந்து செய்யக்கூடாத விஷயங்கள் என்னென்ன என்பதை இந்த வாரம் பார்ப்போம்:

படிகளில் செய்யக்கூடாதவை

அசுத்தமாக வைத்திருக்கக் கூடாது; படிகளில் அமர்ந்து தலைவாருவது, பேன் பார்ப்பதுகூடாது; படிகளின் குறுக்கே படுக்கக்கூடாது; கால்படும் இடத்தில் கோல ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது.

எனக்குத் தெரிந்த ஒருவர் தன் வீட்டு வாசலில் ஏழு படிகள் வைத்து வீடு கட்டியிருந்தார். அவர்கள் வீட்டில் எல்லாமே சுமுகமாகத்தான் நடந்து கொண்டிருந்தது. சில ஆண்டுகள் கழித்து அவர் வீட்டில் படிப்படியாய்ப் பிரச்னைகள் ஏற்பட ஆரம்பித்தன. விஷயத்தை என்னிடம் வந்துசொல்ல, பிரச்னைக்கு என்ன காரணம் என்று ஆராய்வதற்காக நான் சென்று அவர் வீட்டைப் பார்த்தேன்.

வீட்டுக்குள் சின்னச் சின்ன குறைபாடுகள் இருந்தன. ஆனால் வீட்டில் வரும் பிரச்னைகளுக்கும் இந்தக் குறைகளுக்கும் தொடர்பில்லை என்று புரிந்தது. ஆக, இதையும் தாண்டி வேறொரு பிரச்னை இருக்கிறது என்பதை உணர்ந்தேன். வெளியே வரும்போது கண்ணில் பட்டன வாசல்படிகள். படிகளை எண்ணிப் பார்த்தபோது ஆறு படிகள் இருந்தன. அடுத்த நொடி தவறு எங்கு நடந்துள்ளது என்பது புரிந்துவிட்டது. அவரிடம் விஷயத்தைச் சொன்னேன்.

உடனே அவர், "இல்லையில்லை. நான் ஏழு படிகள் வைத்துத்தான் கட்டியிருந்தேன். ஆனால் ஆறு மாதங்களுக்கு முன்பு தெருவில் தார்ச்சாலை போட்டார்கள். அப்போது ஒரு படி தரைக்கு அடியில் சென்றுவிட்டது" என்றார்.

ஆகவே படிகளின் எண்ணிக்கையை மீண்டும் ஏழாக மாற்றிக் கட்டச் சொன்னேன். அதன்பிறகு அவரது வீட்டில் நிலவிய பிரச்னைகள் தீர்ந்துவிட்டதாக நண்பர் வந்து என்னிடம் சொன்னார்.

சரி, அடுத்ததற்கு வருவோம். அடுத்து நிலைவாசல், வீட்டுக்கு மிகவும் முக்கியமானது. இதனை சிலர் தலைவாசல் என்றும் சொல்வார்கள். இதன் வழியாகத்தான் நாம் வீட்டுக்குள் நுழைய வேண்டும். அந்தத் தலைவாசல் நூறு சதவிகிதம் வாஸ்து பிரகாரம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரச்னைகள் சற்று வீரியத்துடனேயே இருக்கும்.

தலைவாசல் என்பது கண்டிப்பாக மரத்தில்தான் இருக்க வேண்டும். அதுவும் நல்ல உயர்ந்த ஜாதி மரத்தில், மேடு, பள்ளங்கள் இல்லாமல், நான்கு பக்கமும் சமகனத்தில் இருக்குமாறு தயார் செய்ய வேண்டும். தலைவாசலில் எந்தவிதமான ஒட்டும் இருக்கக்கூடாது. அந்தத் தலைவாசலை வைப்பதற்கு நல்ல நாள், நேரம் பார்த்து வைக்க வேண்டும். வீட்டு கிருஹப்பிரவேசத்துக்கு முன்பு வீட்டுக்குச் செய்யும் மிக முக்கியமான விழா தலைவாசல் அமைப்பதுதான். அந்த அளவுக்கு முக்கியமானது தலைவாசல்.

சிலர், கீழ் தலைவாசலுக்கு அடியில் நவரத்தினக் கற்களைப் புதைத்து அதன் மேல் தலைவாசலை வைப்பது வழக்கம். அதற்கும் சில வழிமுறைகள் வாஸ்துவில் உள்ளன. மஞ்சள் தூளைக் கொஞ்சம் எடுத்து அதன்மீது தண்ணீர் விட்டுக் குழைத்து நவரத்தினக் கற்களை அதனுள் வைத்து, தலை

வளம் தரும் வாஸ்து-8



எங்கள் வீட்டில் பல வருடங்களாகத் தொட்டி வைத்து, அதில் நிறைய மீன்கள் வளர்க்கிறோம். இதை முறைப்படி எந்த இடத்தில் வைக்க வேண்டும்?

– சந்துரு, அரவக்குறிச்சி

மீன் தொட்டியை ஹாலில் மட்டுமே வைக்க வேண்டும். அக்னி மற்றும் ஈசான்ய மூலைகளைத் தவிர (தென்கிழக்கு, வடகிழக்கு) எங்கு வேண்டுமானாலும் வைக்கலாம்.

எங்கள் வீட்டில் நாய் வளர்க்கிறோம். அதற்கென்று தனியே ஒரு அறை கட்ட உள்ளோம். எந்த இடத்தில் அறை கட்டினால் நல்லது?

– அமிர்தா, திண்டுக்கல்

வாஸ்துபடி மிருகங்களுக்கு ஏற்ற இடம் வடமேற்குப் பகுதிதான். ஆகவே அந்த இடத்தில் அறை அமைப்பது நல்லது.

வாசலின் வலதுபுறத்தின் அடியில் வைக்க வேண்டும். இதுதான் முறைப்படியான அணுகுமுறை.

அடுத்து நிலைவாசலில் கதவு வைப்பது முக்கியமானது. அந்தக் கதவு எப்படி இருக்க வேண்டும்...?

(பேசலாம்)

படம்: ஸ்ரீஹரி



தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ம.தி.மு.க. எப்படிப்பட்ட மனநிலையில் உள்ளது என்பதை அறிய நாஞ்சில் சம்பத்தைச் சந்தித்தோம்.



அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைய முக்கிய காரணகர்த்தா நீங்கள். உங்கள் கூட்டணி தோல்வியடைந்திருக்கும் நிலையில் உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென நினைக்கிறீர்களா?

"மிகப்பெரிய கூட்டணியை எதிர்த்து, அசுரபலம் கொண்ட சன் டீ.வியை எதிர்த்து, நிராயுதபாணியாகக் களத்தில் நின்று நாங்கள் இந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளோம். ஆனால் இன்றைக்கு தி.மு.க. கூட்டணியினர் 'தப்பித்தோம்... பிழைத்தோம்' என்ற நிலைமையில்தான் தட்டுத்தடுமாறி ஆட்சிக்கு வந்துள்ளனர். ஆகவே இதைத் தோல்வி என்றே நாங்கள் கருதவில்லை. கூட்டணி உருவானபோது இருந்த அதே மனநிலையில்தான் நாங்கள் இன்றும் இருக்கிறோம். இந்தக் கூட்டணி தொடர வேண்டும் என்றுதான் உளமார நினைக்கிறோம். ஆகவே, மறுபரிசீலனை என்பதெல்லாம் தேவையில்லாத ஒன்று."

வைகோவின் பிரசாரம் அ.தி.மு.க. தலைமை எதிர்பார்த்த அளவுக்கு எடுபடவில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறதே...?

"தேர்தல் களத்தில் வைகோவுக்கு ஈடுகொடுத்துப் பிரசாரம் செய்யும் அளவுக்கு எதிர்முகாமில் ஆளில்லை. தமிழக சரித்திரத்திலேயே இல்லாத அளவுக்கு வலிமையான எதிர்கட்சியாக அ.தி.மு.க. வந்துள்ளதற்கு வைகோவின் பிரசாரம் முக்கியமான காரணம். வைகோவின் பிரசாரம் எடுபடவில்லை என்பது கண்மூடித்தனமான கற்பனைக் குற்றச்சாட்டு."

தி.மு.க கூட்டணி, மூன்றில் இரண்டு பங்கு இடங்களைக் கைப்பற்றிய பிறகு, கூட்டணி விஷயத்தில் தவறு செய்து விட்டோமோ என்று வருத் தப்பட்டீர்களா?

"ஒருவேளை அந்தக் கூட்டணியில் இருந்திருந்தால் எங்களை அரவணைப்பது போல அழித்து இருப்பார்கள். திட்டமிட்டுத் தோற்கடித்திருப்பார்கள். ஆகவே, இது போன்ற எண்ணம் எங்கள் யாருக்குமே வரவில்லை."

பா.ஜ.க, தே.மு.தி.க போன்ற கட்சிகள் கூட தனித்து நின்றுதான் தங்கள் முதல் பிரதிநிதியைச் சட்டமன்றத்துக்கு அனுப்பின. ஆனால் ம.தி.மு.கவுக்கு எம்.பிக்களும் சரி, எம்.எல்.ஏக்களும் சரி, அ.தி.மு.க. தயவுடன்தான் கிடைத்துள்ளனர். இது உங்களுக்குப் பலவீனமான விஷயமில்லையா?

"இன்றைய அரசியல் சூழலில் எந்த ஒரு கட்சியும் தனித்து நின்று மிகப்பெரிய வெற்றிகளை எல்லாம் பெறவே முடியாது. அ.தி.மு.கவுடன் இணைந்து சட்டமன்றத்துக்கு ம.தி.மு.க. பிரதிநிதிகளை அனுப்பியதில் எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான். அதேசமயம் எங்கள் இலக்கு இப்போது உள்ள ஆறை நூறாக்குவதுதான்."

விஜயகாந்த் கட்சி பெற்ற வாக்கு சதவிகிதம் ம.தி.மு.க., பா.ம.க போன்ற கட்சிகளின்...

"(வார்த்தைகளில் கோபம் கொப்பளிக்கிறது) எங்களுடைய இயக்கம் கொள்கை சார்ந்தது. இலட்சியம் சார்ந்த இளைஞர்களின் பாசறை. ஆனால் விஜயகாந்துக்கு விழுந்த வாக்குகள் சினிமா கவர்ச்சியில் விழுந்த வாக்குகள்."

தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்க உங்கள் கூட்டணி சதி செய்வதாகக் கலைஞர் குற்றம் சாட்டுகிறாரே...?

"ஒவ்வொரு நாளும் அச்சத்தோடும் பீதியோடும் ஆட்சியை நடத்த வேண்டியிருப்பதால் தமிழக மக்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. ஆகவே இந்த ஆட்சிக்கு ஆயுள் குறைவுதான். ஆட்சி நிர்வாகத்தின் ஆணிவேர் வரை ஊடுருவிச் செல்லக் கூடிய உள்ளாட்சித்துறையை ஸ்டாலினிடம் கொடுத்து, ஆயிரம் பிறை கண்ட தலைவர்களையெல்லாம் ஸ்டாலினுக்கு அடுத்த

இடத்துக்குத் தள்ளியிருப்பது தி.மு.கவுள்ளேயே புகைச்சலைக் கிளப்பியுள்ளது. ஆனாலும் அதை மறைக்க, அமைச்சரவையில் மேலும் நான்கு வாரிசுகளுக்கு இடமளித்து தமது செயலை நியாயப்படுத்தகாய் நகர்த்தி இருக்கிறார் கலைஞர். ஆகவே சதி செய்து ஆட்சியைக் கவிழ்க்க வேண்டிய அவசியமில்லை. அது தானாகவே கவிழும்."

மேலவை கொண்டு வருவதில் ம.தி.மு.கவின் நிலைப் பாடு என்ன?

''கற்றறிந்தவர்களுக்காக உருவாக்கப்படுவதுதான் இந்த மேலவை. ஆனால் இதை தி.மு.க. கொண்டு வருவதற்குக் காரணம் தேர்தலில் தோற்றவர்களையும், கட்சிக்குள் அதிருப்தியில் உள்ளவர்களையும் கொல்லைப்புற வழியாக அதிகாரத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக. ஆகவே இது கற்றோர் அவையாக இருக்காது. கலைஞர் அவையாகத்தான் இருக்கும்."

வைகோவுக்குக் கொலை மிரட்டல்கள் வருகின்றன என்று புகார் சொல்லியுள்ளீர்களே?

"வைகோவின் வீட்டுக்குத் தொடர்ந்து கொலை மிரட்டல்கள் வருகின்றன. தொலைபேசியில் நாராச நடையில் பேசுகிறார்கள். அறிவாலயத்து ஆதிக்க சக்திகளின் இது போன்ற அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் யாரும் அஞ்சப் போவதில்லை."

ஜெயா டி.வியில் ''கண்ணம்மா'' படம் தொடர்பாக ஒளிபரப்பான 'கலைஞரின் கைமாறு' பற்றி விடுதலைப் புலிகளின் நலன் விரும்பி என்ற முறையில் ம.தி.மு.கவின் கருத்து என்ன?

''(நீண்ட யோசனைக்குப் பிறகு, தயங்கியபடியே)... இதில் கருத்துக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. காரணம், நான் ஜெயா டி.வியில் அந்த நிகழ்ச்சியையே பார்க்கவில்லை."

• ஆர்.முத்துக்குமார்



• நாஞ்சில் சம்பத்

''வைகோவால் அ.தி.மு.க. வலிமை பெற்றது!''

– நாஞ்சில் சம்பத்

பக்தபரா: என்று பக்தர்களைச் சொல்வதுண்டு. இந்தச் சொல்லுக்கு இரண்டு அர்த்தம். பகவானிடத்திலே பக்தி உடையவர் என்று ஓர் அர்த்தம்; பிரசாத பக்தர் என்று இன்னொரு அர்த்தம்! பிரசாதத்துக்காக நித்யம் கோயிலுக்குப் போகிறவர்.

நல்ல இனிப்பான சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் தருகிறார்கள் கோயிலில். அதை வாங்கிக் கொண்டவர், உருட்டி உருட்டி வாயிலே போட்டுக் கொண்டார். கையைச் சுற்றி மொய்த்த ஈக்களை விரட்ட கையைத் தட்டினார். அப்போது தான் உள்ளே தாயார் சன்னிதியிலே கற்பூர ஹாரத்தி நடக்கிறது.

தாயார் பார்த்தாள். 'ஒரு நாளும் இவன் நம்மைப் பார்த்துக் கை கூப்பியதில்லையே... இன்றைக்குக் கூப்பிவிட்டானே' என்று, 'இவனுக்கு ஐச்வர்யம், ஆயுள், சக்தி' எதைக் கொடுக்கலாம் என்று யோசிக்கிறாளாம் மஹாலக்ஷ்மி.

ஈயை ஓட்டக் கையைச் சேர்த்தால் அதை அஞ்சலியாக - அஞ்சலி ஹஸ்தமாக எடுத்துக்கொண்டு அந்த ஆதி தம்பதி அனுக்கிரஹம் பண்ணுகிறார்கள்.

ஒருவர் இந்தப் பக்கமாக சைக்கிளில் போகிறார். அவருக்கு இங்கே உள்ளே வந்து பகவத் விஷயத்தை அனுபவிக்க அவகாசம் இல்லை. உள்ளுக்குள்ளே இத்தனை பாகவதோத்தமர்கள் உட்கார்ந்திருக்கிறார்களே, விசேஷமாக பகவத் சரித்திரம் நடக்கிறதே என்று ஒரு கணம் சைக்கிள் ஹேண்டில் பாரை விட்டுவிட்டு

யாராய் இருந்தாலும் எப்போது அஞ்சலி பண்ணினாலும் அதற்கும் பலன் ஏற்பட்டு விடுகிறது.

பகவான் இப்படியெல்லாம் நமக்குப் புண்ணியத்தைச் சேர்த்தால்தான் உண்டு! எப்படியெல்லாம் முடிகிறதோ அப்படியெல்லாம் அவனே முன்வந்து நமக்கு அனுக்கிரஹம் பண்ணுகிறான்.

வேறு காரணத்துக்காக வெறுமே கைகூப்பினாலே அனுக்கிரஹம் பண்ணுகிறான் என்றால், உண்மையான முறையிலே அவன் திருவடியிலே ஆச்ரயிக்கக் கூடியவர்களுக்குக் கட்டாயம் பலன் உண்டு - இதிலே என்ன சந்தேகம் இருக்க முடியும்!



அனுக்கிரஹம் பண்ணுகிறபோது பரமாத்மா 'வாயளவும்' போதும் என்கிறான். நிக்ரஹம் பண்ணுகிறபோதுதான் ஹ்ருதயத்தையும் தொட்டுப் பார்க்கிறான். பகவானுடைய நிலை அப்படி. மஹாலக்ஷ்மியும் அப்படித்தான்.

ராவணனைப் பார்த்து. "அந்த ராமனிடத்தி


குறையொன்

கையை எடுத்துக் கும்பிடுகிறார் அவர். அவருக்குப் பலன் உண்டா என்றால், கட்டாயம் உண்டு. திக்கை நோக்கி அவர் கை கூப்பினாரல்லவா?... அதற்கு நிச்சயமாய்ப் பயன் உண்டு.

ஆளவந்தார் தோத்திரத்திலே சொல்லுகிறார்: "உன்னுடைய திருவடியை உத்தேசித்து எவனோ ஒருவன், எப்படியோ அப்படி, எப்போதோ அப்போது"... என்கிறார். எதையும் நிர்ணயமாகச் சொல்லவில்லை, இங்கே... ஆகையினால்,

விருந்து ஆக்ஞை இல்லை. அப்படி இருந்ததானால், இங்கேயே இப்போதே, இந்த இடத்திலேயே உன்னை பஸ்மமாக்க முடியும் என்னால்" என்றாள் சீதா பிராட்டி.

அடிக்க வேண்டும் (நிக்ரஹம்) என்கிறபோது ராமனுடைய ஆக்ஞையை எதிர்பார்க்கிறாள். ஆனால், ஒருத்தருக்கு அனுக்கிரஹம் பண்ணவேண்டுமென்றால், அவள் ஆக்ஞையை அவள் எதிர்பார்ப்பதில்லை. நிக்ரஹத்துக்கு மட்டும்தான்!



...று மில்லை

எட்டாம் பாகம் 22

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ஆகையினாலேதான் மஹாலக்ஷ்மிக்கு எல்லாம் தெரியும்; நிக்ரஹம் மாத்திரம் தெரியாது என்றார்.

அதே மாதிரி பகவானும், இவ்வளவு கோபமாக, உக்கிர கேஸரியாக அவதரித்தாலும் அந்த ஹிரண்ய கசிபுவின் ஹ்ருதயம் தொட்டுப் பார்க்கிறான்.

இந்த அவதாரத்துக்குத்தான் எவ்வளவு தயை! ஆகையினாலே, நரசிம்ஹ அவதாரம் மிகுந்த தயையுடைய அவதாரம் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

பிரஹலாதனுடைய வார்த்தையைக் காப்பதற்காக பகவான் நரசிம்ஹனாக அவதரித்தான்.

சாமான்யமாக உலகத்திலே 'நரசிம்ஹ அவதாரம் எதற்கு?' என்று கேள்வி கேட்டால், பிரஹலாதனை ரக்ஷிப்பதற்காக என்று பதில் கிடைக்கும். ஆனால், அதுவல்ல பதில்.

பகவான் பிரஹலாதனை ரக்ஷித்தவண்ணம் தானே இருந்தான். ஹிரண்யன் ஸர்ப்பத்தைவிட்டு பிரஹலாதனைக் கடிக்கச் சொன்னபோது, பகவான் அவனை ரக்ஷிக்கவில்லையா? பர்வதத்திலேயிருந்து அவனை உருட்டிவிட்டபோது பகவான் அவனை ரக்ஷிக்கவில்லையா? மலை மேலேயிருந்து உருட்டி விட்டபோது, அந்த தைத்ய புத்ரனை, 'நாராயணா' என்று சொன்னதற்காகவே பகவான் வந்து ரக்ஷித்தானே!

சமுத்திரத்திலே தூக்கிப் போட்டபோது அவனை ரக்ஷிக்கவில்லையா? உஷ்ணமான வாயுவை பிரஹலாதன் மீது பிரயோகம் பண்ணியபோது ரக்ஷிக்கவில்லையா? பகவான், பிரஹலாதனை ரக்ஷிப்பதற்காக இந்த நரசிம்ஹ அவதாரத்தை எடுக்கவில்லை... பிரஹலாதனுடைய

வார்த்தையை ரக்ஷிப்பதற்காக எடுத்த அவதாரம் அது.

வார்த்தை என்ன...? 'எங்கும் உளன் கண்ணன்!' 'எங்கும் நிறைந்திருக்கிறான் பரமாத்மா; அவன் இல்லாத இடம் இல்லை' என்கிறான் பிரஹ்லாதன். அந்த வார்த்தையை ரக்ஷிப்பதற்காக, அவன் சொல்லிக் காண்பித்த இடத்திலிருந்து பகவான் தோன்றவில்லை என்றால் பகவானுடைய விபூதிக்கு இழுக்கு அல்லவா அது! ஆகவே பிரஹ்லாதன் வார்த்தையைக் காப்பதற்காக அவன் அவதரித்தான்.

"பிரும்மா சொன்ன வார்த்தையை ரக்ஷிப்பதற்காக அவன் நரசிம்ஹாவதாரம் எடுத்தான்.

பிரும்மா ஏகப்பட்ட வாக்கு கொடுத்துவிட்டார் அந்த ஹிரண்ய கசிபுவுக்கு.

பகவான் பிரும்மாவின் வாக்கை ஒதுக்கிவிட்டு, எப்படி வேண்டுமானாலும் ஹிரண்ய கசிபுவைக் கொன்றிருக்கலாம். 'நீ ஏன் அவ்வாறு கொன்றாய்?' என்று யாரேனும் அவனிடம் கேட்க முடியுமா? ஸர்வ ஸ்வதந்த்ரன் அல்லவா அவன்! எப்படி வேண்டுமானாலும் கொல்லலாம். அப்படிப் பண்ணாமல், பிரும்மா கொடுத்த வரத்துக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல், அதைக் கடந்து, அகடிதகடனா சாமர்த்தியத்துடன் ஆவிர்பவித்து, பகவான் அந்த ஹிரண்ய கசிபுவை நிக்ரஹம் பண்ணினான்."



நன்றாகக் கவனிக்க வேண்டும்... 'பிரும்மா வரம் கொடுத்தால் செல்லாது' என்று உலகிலே வழக்கு ஏற்பட்டுப் போனால், அப்புறம் பிரும்மாவை யாராவது வணங்குவார்களா? அவரைப் பற்றிப் பேசுவார்களா...?! ஏற்கெனவே உலகத்திலே பிரும்மாவைக் குறித்து அதிகமாக பூஜைகள் கிடையாது. அதிகமாக பிரார்த்தனைகளெல்லாம் கிடையாது. மீதி தேவதைகளுக்கெல்லாம் உள்ளது மாதிரி பிரும்மாவுக்கு இல்லை. யக்ஞாதிகளில் கூட, பிரும்மா வருகிறபோது, பிரஜாபதி மந்திரத்தை மனத்திலே நினைத்துக் கொண்டு, மனத்தினாலேயே ஹவிஸை ஸமர்ப்பிக்க வேண்டும். வாக்தேவதையினுடைய சாபம் இப்படி இருக்கிறது. இன்னும் 'பிரும்மா வரங்கொடுத்தால் செல்லாது' என்று சொல்லிவிட்டால், உலகத்திலே இப்போது அவருக்கு இருக்கிற மதிப்பு இருக்குமா? அதுவுமல்லவா போய் விடும்.

ஆகையால் பகவான் ரொம்ப ஜாக்கிரதையாக, தான் போட்ட சட்டத்தை மீறாமல், அந்த பிரும்மாவுக்கும் எந்த இழுக்கும் இல்லாமல் செயல்பட்டான்.

ஒருத்தர் நாற்பத்தெட்டு நாள் ராமாயணம் கதை பண்ணினார்; ஓரிடத்திலே பூரணமாகச் சொல்லி முடித்துவிட்டு, இவர் ஊருக்குக் கிளம்புகிறார். அப்போது அங்கே வந்தார் அந்தக் கதையை ஏற்பாடு பண்ணியவர். "சுவாமி! ரொம்ப நாட்களாக எனக்கொரு சந்தேகம்" என்றார்.

நாற்பத்தெட்டு நாள் கதை கேட்டதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டுப் போயிருந்தது அவருக்கு! "நித்தியம் உம்மிடம் கேட்க வேண்டும், கேட்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு அவகாசமே கிடைக்கவில்லை; இப்போது கேட்கலாம் அல்லவா?'' என்று பௌராணிகர் ஊருக்குக் கிளம்புகிற சமயத்தில் கேட்கிறார்.

"கேளும்!" என்றார் அவர்.

''நெடுநாட்களாக ஒரு சந்தேகம் உண்டு... பிரும்மாவுக்கு ஏன் கோயிலோ பூஜையோ இல்லை என்பதுதான் அந்த சந்தேகம். இப்போது உங்கள் உபன்யாஸம் கேட்டு இன்னொரு சந்தேகமும் ஏற்பட்டுள்ளது... இந்த நாற்பத்தெட்டு நாளில் ராமன் ராமன் என்று நிறைய சொன்னீர். ராவணன், ராவணன் என்று நிறைய சொன்னீர். இடையிடையே ராக்ஷஸன் ராக்ஷஸன் என்றும் நிறைய வந்தது. இதிலே ராமன் ராக்ஷஸனா? ராவணன் ராக்ஷஸனா?" என்கிறார் அவர்!

(வளரும்)









வேதாளபுரி நூலகம்!

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்ரமாதித்யன், வேதாளத்தை குண்டுக் கட்டாகத் தூக்கி முதுகில் சுமந்த படி நடக்கத் தொடங்கினான். வேதாளம் கதை சொல்லத் தொடங்கியது.

"இப்போ தமிழ் சினிமா கையில் மாட்டிக்கிட்டு முழி பிதுங்குகிற சாதாரண ஹீரோ, ஹீரோயின் கதைதான். ஆனா அதே கதையை ஷேக்ஸ்பியர் எவ்ளோ பிரமாதமா எழுதியிருக்கிறார் தெரியுமா? மொத்த சம்பவமும் நாலே நாள்ல நடக்கிறதுதான். என்ன விக்ரமாதித்யா, யாரை யாவது லவ் பண்ணியிருக்கியா?" என்ற வேதாளம் தொடர்ந்தது.

"கவிஞர் புவியரசு மொழிபெயர்த்திருக்கிற ரோமியோ ஜூலியட்டைப் படிச்சா இந்தக் கணமே யாரையாவது காதலிக்கணும் போல இருக்கு. ரொம்ப அழகா எனக்கே புரியற மாதிரி மொழி பெயர்த்திருக்காரு. பிரமாதம். அடுத்து கே.ஜீவபாரதி எழுதின மறக்கப்பட்ட மங்கையர் திலகங்கள் படிச்சேன். ஒரே ஆச்சரியமாப் போச்சு. ரங்கூன்ல இருந்து காந்தி தாத்தாவைப் பார்க்க லட்சுமி அம்மாள்னு ஒருத்தர் ஓடோடி வந்திருக்காங்க. ரொம்ப சிரமப்பட்டு அவரைச் சந்திச்சு 15 ரூபாய் நிதியா குடுத்திருக்காங்க. அதைப் பார்த்துட்டு மகாத்மா 'இவ்ளோ கஞ்சத்தனமா இருக்கீங்களே. தேச சேவைக்காக உங்களோட மகனைத் தர முடியுமா'ன்னு கேட்டிருக்காரு. லட்சுமி அம்மாள் ஒரு வார்த்தையும் பேசாம தன்னோட மகனை காந்திக்குத் தாரை வார்த்துக் கொடுத்துட்டாங்க. இவங்களை மாதிரியே நாம மறந்துட்ட, ஆனா மறக்கக்கூடாத பல அதிசய பெண் மணிகளை ஜீவபாரதி அறிமுகப்படுத்தியிருக்காரு. அதே மாதிரி நம்ம நாட்டுல பால் வளத்தைப் பெருக்கிய வெண்மைப் புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியனைப் பத்தி ஒரு குட்டி புக்கும் படிச்சேன். புக் அநியாயத்துக்குக் குட்டி. ஆனால் நல்ல அறிமுகம். சரி இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு. ஷேக்ஸ்பியரோட மனைவி பேரு என்ன?" என்றது வேதாளம்.

சற்றும் தாமதிக்காமல் பதிலளித்தான் விக்ரமாதித்யன். "ஆன் ஹாத்தவே."

விக்ரமாதித்யனின் சரியான பதிலால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

ரோமியோ + ஜூலியட், கவிஞர் புவியரசு, கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017, பக்கம் 158, விலை ரூ. 75/-

மறக்கப்பட்ட மங்கையர் திலகங்கள், கே. ஜீவபாரதி, குமரன் பதிப்பகம், 3, முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார், சென்னை - 600 017. பக்கம் 120, விலை ரூ.30/-

வர்கீஸ் குரியனின் வெண்மைப் புரட்சி, நரேந்திரன், கலைஞன் பதிப்பகம், 110, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017. பக்கம் 48, விலை ரூ. 15/-

சேனல்



"வம்புக்கு இழுக்காதீங்க!"

வானிலை அறிக்கை தொகுப்பாளினி மோனிகா நம்மிடம் சாரலாய்ப் பொழிந்தவை.

அதிரடி மாப்பிள்ளை தேடுதல் வேட்டையில் இறங்கிவிட்டார்களாம் வீட்டில். வருங்கால கணவரைப் பற்றிய கனவோடு இருந்தவரிடம் எப்படிப்பட்ட கணவரை எதிர்பார்க்கறீங்க என்றால், "கொஞ்சம் அழகா இருக்கணும். என்னோட ஃபீல்டுல இல்லாதவரா இருக்கணும். அப்புறம் நல்ல பிஸினஸ்மேனா இருக்கணும். என்னோட கலை சுதந்திரத்துக்குக் குறுக்க வந்தா அவ்வளவுதான்!" என்கிறார் அம்மணி. "இது தவிர 'இன் ஃபிலிம் ஆட்ஸ்' பண்ணிக்கிட்டிருக்கேன். எனக்கு லைஃப் பார்ட்னரா வர்றவரு இந்த பிஸினஸ் பார்ட்னராகவும் இருந்தா கோடி புண்ணியமாயிருக்கும்."

● "நான் படிச்சது சோஷியாலஜி. ஆனா விமான பணிப்பெண் ஆகணும்னு ஆசைப்பட்டேன். அதுக்கான டெஸ்ட்டெல்லாம் எழுதி பாஸ் பண்ணினேன். அதுக்குள்ள சன் டீ.வியில வாய்ப்புக் கிடைச்சது. இப்ப அதைவிட இதுவே பெட்டர்னு தோணுது. இந்த லைஃப் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. இதுல நிறைய விஷயங்கள் கத்துக்கிட்டேன், கத்துக்கிட்டிருக்கேன்!

● ஆமாங்க சத்தியமா எனக்கு பதினாறு வயசுதான். நம்புங்க... ப்ளீஸ்!

● சினிமாவுல நடிக்கணும்னு எனக்குக் கனவெல்லாம் இல்லீங்க! ஒருவேளை நல்ல வாய்ப்பா வந்தா நடிப்பேன். 'மாயாவி' படத்தில் கூட நடிச்சிருக்கேன். அப்புறம் 'சிவனாண்டி ஐ.பி.எஸ்' படத்துல அமைச்சரோட பெண்ணா நடிச்சிருக்கேன்.

● சீரியல் நடிகைகள்லாம் அடிக்கடி தற்கொலை பண்ணிக்கறாங்களே என்ன காரணம் தெரியுமா?

"ஆளை விடுங்க சாமி, என்னை வம்புல இழுத்துவுடாதீங்க!" என்று மழுப்பிய படியே முடித்துக் கொண்டார் மோனிகா.

- ம. மனோன் மனோ

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**

கிடுக்கிப்பிடியில் கோ.சி.மணி!



கடந்த மாதம் 28-ம் தேதியன்று தமது தொகுதியான கும்பகோணத்துக்கு வந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் கோ.சி.மணி, சங்கரமடத்துக்கு விசிட் செய்யப் போகிறார் என்பது உள்ளூர் உடன் பிறப்புகளுக்கு ஒரு ஆச்சர்யமான செய்தி. கும்பகோணம் பகுதி தி.மு.க. பிரமுகர்களுடன் சங்கர மடத்துக்குச் சென்ற அமைச்சர், அங்கு நடந்து கொண்டிருந்த மகா பெரியவரின் பாதுகா பட்டாபிஷேக ஹோமத்தில் சிறிது நேரம் கலந்து கொண்டபின் ஜெயேந்திரரையும் தனியாகச் சந்தித்து சால்வை போர்த்தியிருக்கிறார். ஜெயேந்திரரும் அமைச்சருக்குச் சால்வை போட, இருவரும் தனி அறையில் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். இந்தச் செய்தி உள்ளூர் தி.மு.கவினருக்குக் கொடுத்த ஆச்சர்யத்தைப் போல முதல்வருக்கும் ஆச்சர்யத்தை அளித்ததில் வியப்பில்லை. கூடவே கோ.சி.மணி மீது கோபத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது. ''இது தொடர்பாக விளக்கம் கேட்கப்படும்'' என்றார் முதல்வர்.

'இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர், ஜெயேந்திரரை ஏன் சந்திக்க வேண்டும்' என்று தி.மு.க. வட்டாரம் கிசுகிசுக்கிறது. வழக்கு நடந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இதுபோன்ற சந்திப்பு, கூட்டணிக் கட்சிகளுக்கு குறிப்பாக, தற்போது தோழமையுடன் உள்ள திராவிட கழகம், பா.ம.க. தலைவர்களுக்கு ஒரு தவறான சிக்னலைக் கொடுக்குமே என்று கவலைப்படுகிறார்கள் தி.மு.க. பிரமுகர்கள்.

காஞ்சிமடத்தோடு ஒரு உரசல் மனப்பான்மையே தி.மு.கவில் நிலவி வரும் சமயத்தில் கோ.சி. மணியின் சந்திப்பு சர்ச்சையை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

• கோ.சி.மணி



ஆனால் அமைச்சர் வட்டாரம் "இந்தச் சந்திப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை" என்று சொல்கிறது. கடந்த தேர்தலில் கோ.சி.மணியை எதிர்த்துப் போட்டியிட்டவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ராமனாதன். பிராமணர் இனத்தைச் சேர்ந்த இவருக்கு கும்பகோணத்தில் செல்வாக்கு உண்டு. எனவே, அமைச்சருக்கு பிராமணர் வோட்டுக்களைப் பெற வேண்டிய அவசியம் இருந்தது. அதற்காக உள்ளூர் பிராமணர் சங்கத் தலைவர்களிடம் அவர் ஆதரவு கோரியிருக்கிறார். ஆகவே, வெற்றி பெற்றபின் அதற்கு நன்றி தெரிவிக்கும்விதமாகத்தான், பிராமணர் சங்கத்தின் விருப்பத்தின் காரணமாக, ஜெயேந்திரரைச் சந்தித்தார் என்பது அமைச்சர் வட்டாரம் சொல்லும் தகவல்.

தற்போதைய சூழலில், தி.மு.கவில் லட்சக்கணக்கில் ஆத்திக அன்பர்கள் இருக்கிறார்கள். ஸ்டாலின் கூட தேர்தல் பிரசாரத்தின்போது கோயில் மரியாதையை



கொஞ்சம் அச்சம் காட்டவே செய்வார்கள். கடலூர் எம்.பியாக இருந்த ஆதிசங்கர், நெற்றியில் பெரிய குங்குமம் வைத்திருந்ததைப் பார்த்த கலைஞர் அவரைச் சங்கடப்படுத்தும் விதத்தில் கமெண்ட் அடித்தார் என்பது கடந்த கால வரலாறு. ஜெயேந்திரரை ஜாமீனில் விடும்போது அவருக்குப் பிணைப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டவர் தி.மு.க.வைச் சேர்ந்த கோட்டூர் ராஜசேகரன். இதனால் கோபமடைந்த கலைஞர் அவரிடமிருந்த விவசாய அணி இணைச் செயலாளர் பதவியைப் பிடுங்கி விட்டார்.

“சங்கரமடம் என்பது லட்சக்கணக்கான மக்கள் பக்தியும், மதிப்பும் வைத்திருக்கும் ஒரு கேந்திரம். அதேபோல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர் பொறுப்புக்கு வந்திருப்பவர் கோ.சி. மணி.

கும்பகோணம் அமைச்சரின் தொகுதி. அரசும், அமைச்சர்களும் விருப்பு, ஏற்றுக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் சமய அடையாளங்களோடு உடன்பிறப்புகள் கலைஞரைச் சந்திக்க



சிந்துச் சமவெளி நாகரிகத்தை இவர் நேரில் பார்த்திருப்பாரோ என்ற சந்தேகம், செழியனின் ஓவியக் கண்காட்சியைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும். நமக்கு மிகவும் பரிச்சயமான சின்னங்கள். அதே எருது, அதே ஒல்லிப் பெண், செங்கல் செங்கலாய் விரியும் ஆழமான, அகலமான குளியலறை.

சிந்துவெளி எருதை வாஞ்சையுடன் கட்டித் தழுவும் அந்தப் பெண்ணின் ஓவியம் பழைமையை, வரலாற்றை உயிர்ப்புடன் நேசிக்கச் சொல்லித் தருகிறது. யாழ், ஆதிரை, தொல்காப்பியா என்று அழகிய தமிழ்ப் பெயர்களை பண்டைய எழுத்துகளைப் போல் மாற்றியமைத்து ஒவ்வொரு சித்திரத்திலும் பதித்திருக்கிறார். ஏன் சிந்துவெளி? ஏன் தமிழ்? ஏன் எருது? ஒல்லிப் பெண்? ‘ஏனென்றால் தமிழ், வரலாறு இரண்டையும் நான் சமமாகக் காதலிக்கிறேன்’ என்கிறார் செழியன்.



மும்பை, சென்னை என்று பல நகரங்களில் இவரது கண்காட்சி வெற்றிகரமாக அரங்கேறியிருக்கிறது.

- மருதன்

வெறுப்பின்றிச் செயல்பட வேண்டும். அமைச்சர் தமது தொகுதியில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்று ஜெயேந்திரரை மரியாதை நிமித்தமாகச் சந்தித்ததில் ஒரு தவறும் இல்லை. பல குற்றச் சாட்டு களுக்கு ஆளான மற்ற மதத் தலைவர் களை, அரசியல்வாதிகள் சந்தித்தால் அது மதச்சார்பற்ற நிலை போலவும், இந்துமதத் தலைவர்களைச் சந்தித்தால் மட்டும் மதவாதத்தைப் பிரதிபலிப்பது போலவும் ஒரு மோசமான தோற்றம் இங்கே உருவாக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. ஜெயேந்திரர் மீது ஒரு பழி போடப் பட்டிருக்கிறது. விசாரணை நடந்து வருகிறது. அவ்வளவுதான். தனிப்பட்ட முறையில் பார்த்தாலும் உள்ளூர் முக்கியப் பிரமுகர் என்ற முறையில், கோ.சி.மணி ஜெயேந்திரரைச் சந்திக்க உரிமை உண்டு. இந்தச் சந்திப்பின் மூலம் கோ.சி.மணி பக்தராகிவிடப் போவதும் இல்லை; அவரது கொள்கை நீட்டுப் பட்டுவிடப் போவதும் இல்லை'' என்கிறார் பா.ஜ.க. பொதுச் செயலாள ரான இல. கணேசன்.

முதல்வரிடம், சந்திப்புக்கு விளக்கம் சொல்லி வருத்தம் தெரிவித்திருக்கிறார் கோ.சி.மணி. ''உண்மையில் பெரியார் கடவுள் மறுப்பு கொள்கையில் ஆழ்ந்த பிடிப்புள்ளவர் கோ.சி.மணி. எனவே இந்த விவகாரம் சர்ச்சையாக உருவாக வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர் இந்தச் சந்திப்பைத் தவிர்த்திருக்க வேண்டும்'' என்று நம்மிடம் சொன்னார் ஒரு முக்கிய தி.மு.க. பிரமுகர். ''ஐந்தாவது முறையாக முதல்வர் பொறுப்பேற்றி ருக்கும் கலைஞர் தமிழகத்தின் உயர்ந்த அரசியல் தலைவராக உருவாகியிருக் கிறார். இதுபோன்ற விஷயங்களைப் பெரிதுபடுத்தாமல் இருந்தால் அவரது கௌரவமும், பெருமையும் மேலும் உயரும் என்பதில் சந்தேகமில்லை'' என்கிறார் இல. கணேசன். தனிப்பட்ட ரீதியில் மூத்த பிரமுகரான கோ.சி.மணி மீது கலைஞருக்கு பாசமும், நம்பிக்கையும் இருந்தாலும் இந்த விவகாரம் கிளப்பும் அரசியல் சர்ச்சைகள் கலைஞரைக் கவலைப்பட வைக்கும்.

- தில்லப்பா

• விஜய் சி.போஸ்



வாக்கிங் போகும் போது முழங்கால் மூட்டு வலிக்கிறது அல்லது வீக்கம் என்பது முதல் கட்டம். கடைக்குச் செல்வது போன்ற தினசரி வேலைகளில் ஈடுபடும்போதே அந்த மூட்டில் வலி என்பது இரண்டாம் கட்டம்.

முதுமையில் படுத்தும் மூட்டுவலி!


காலை எடுத்து வைத்தாலே மேற்படி மூட்டில் வலிக்கிறது என்பது மூன்றாவது.

இதற்கும் மேல் ஒரு கட்டம் உண்டா? இருக்கிறதே. அந்த நான்காவது கட்டத்தில் ஓய்வாக இருக்கும்போதே மூட்டில் (உடலில் எவ்வளவோ மூட்டுக்கள் உண்டு. என்றாலும் ஒரு வசதிக்காக இந்தக் கட்டுரையில் முழங்கால் மூட்டை மட்டுமே மூட்டு என்று குறிப்பிடுகிறோம்) வலி அதுபாட்டுக்கு இருந்து கொண்டிருக்கும்.

இப்படிப் பட்டியலிட்ட எலும்பு சிகிச்சை மருத்துவர் டாக்டர் விஜய் ஸி.போஸிடம், சீனியர் சிடிஸன்களிடையே பரவலான தாக்கத்தை ஏற்படுத்திவரும் மூட்டுத் தேய்மானம் குறித்து சில சந்தேகங்களைக் கேட்டோம்.

''ஒவ்வொரு வீட்டிலும் மூட்டுத் தேய்மானத்தினால் ஏற்படும் ஒருவரது வலிக்குரலாவது ஒலிக்காமல் இருப்பதில்லை. இதை ஒரு வியாதி என்பதைவிட சமூகப் பிரச்னை என்றே கூறவேண்டும். காடராக்ட், காசநோய் போலவே மூட்டுவலியும் பரவலாக இருக்கிறது என்றாலும் வயதானவர்களுக்கு மட்டுமே இது ஏற்படுகிறது என்பதாலோ என்னவோ இதற்குப் போதிய கவனம் கிடைப்பதில்லை. பொதுவாக அறுபது வயதைத் தாண்டுபவர்களுக்கு ஏற்படும் சிக்கல் இது. ஆண்களைவிட பெண்களைச் சற்று அதிகமாகவே பாதிக்கிறது'' என்றார்.

அறுபது வயதில் என்பது பொதுவாகத்தான். சிலருக்கு ஐம்பதில். வேறு சிலருக்கு எழுபதில். அதாவது ஆயுள் நீண்டு கொண்டிருந்தால் எல்லோருமே ஏதோ ஒரு கட்டத்தில் மூட்டுவலியை அனுபவித்தே ஆகவேண்டும்!



ஆனால் பலரும் நினைப்பதுபோல மூட்டு எலும்புகள் தேய்வதன் காரணமாகத்தான் மூட்டுவலி தொடங்குகிறது என்பது சரியில்லை என்கிறார் டாக்டர். ''தொடை எலும்பும் முழங்கால் எலும்பும் சந்திக்கும் இடம்தான் முழங்கால் மூட்டு. இந்த இரண்டு எலும்புகளுக்கு நடுவே ஒரு குஷன் இருக்கிறது. அந்த இரு எலும்புகளும் சந்திக்கும் முனைகளிலுள்ள அரை திட வடிவில் உள்ள கார்டிலேஜ் எனப்படும் குருத்தெலும்பு

தான் அது. நடக்கும்போதும் குனிந்து நிமிரும்போதும் உண்டாகும் அதிர்வுகளை இந்த குஷன் ஏற்றுக் கொண்டுவிடுவதால் மூட்டு வலிப்பதில்லை. ஆனால் மூட்டுவலியின் முதல் கட்டமென்றால் பாதிப்பு குருத் தெலும்புக்கு உண்டாகியிருக்கிறது என்றுதான் அர்த் தம். இந்த குஷன் மேலும் மேலும் தேயும்போது எலும்புகள் ஒன்றோடொன்று உரசி உறவாடத் தொடங்க, வலி உண்டாகிறது. அதிகமாக உரசி அந்தப் பகுதியே வளைந்து உருமாறலாம். அப்போது அறுவை சிகிச்சைதான் ஒரே வழி. மிகவும் அதிக மான தேய்மானம் என்றால் செயற்கை மூட்டு பொருத்தவேண்டி வரும்."

ஒருவேளை உடல் பருமனாக இருப்பதுதான் மூட்டுத் தேய்மானத்திற்குப் பிள்ளையார் சுழியாக அமைந்து விடுகிறதா? "இப்படிக் கூற எந்த ஆதாரமும் இல்லை"என்கிறார் டாக்டர் போஸ். ஆனால் மூட்டுத் தேய்மானம் தொடங்கிய பிறகு 'கன'வான் களுக்கு அந்த வலியின் தீவிரம் சீக்கிரமே அதிகரிக் கிறது." அப்படியானால் எதுதான் மூட்டுவலியின் மூலகர்த்தா? "மூட்டுத் தேய்மானம் எவ்வளவு சீக்கிரம் தொடங்குகிறது என்பதில் மரபணுவுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. பொதுவாக வயதாகும் போதுதான் மூட்டுத் தேய்மானம் உண்டாகிறது. ஆனால் மூட்டில் அடிபடுவது, காச நோய், ருமடாய்ட் சிக்கல் ஆகியவை ஏற்படும்போது, மூட்டு வலி எவ்வயதினருக்கும் வர வாய்ப்பு உண்டு!"

என்ன செய்தால் மூட்டுத் தேய்மானம் உண்டா காமல் தடுக்க முடியும்? 'தவிர்க்க முடியாது. ஆனால் முதல் இரண்டு கட்டங்களிலேயே மாத்திரை ஊசி மருந்து ஆகியவற்றின்மூலம் அடுத்த கட்டங்களை சுமார் நான்கு வருடங்களுக்குத் தள்ளிப் போட முடியும். அதற்கு அடுத்த கட்டங்கள் வரும்போது அறுவை சிகிச்சை, செயற்கை மூட்டு பொருத்துதல் ஆகியவைதான் தீர்வுகள்.

எழுபது வயது ஆகிவிட்டால் ரத்தக்கொதிப்பு, பக்கவாதம், நீரிழிவுநோய் போன்றவை தோன்றக் கூடும். அதற்குப் பிறகு மூட்டுவலியைக் குணப் படுத்தினாலும் அதன் பயனை அனுபவிக்க முடி வதில்லை. எனவே மூட்டுத் தேய்மானத்தை உண ரும்போது சிகிச்சையைத் தள்ளிப் போடக் கூடாது. தவிர இப்போதெல்லாம் செயற்கை மூட்டு பொருத்தும் அறுவைசிகிச்சையில் மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது. காரணம் மிஸ்டர் கணினிதான்" என்ற டாக் டரிடம் அது குறித்து மேலும் விளக்கக் கோரி னோம்.

"கணினியின் உதவியுடன் அறுவை சிகிச்சை (கம்ப்யூட்டர் அஸிஸ்டட் சர்ஜரி) நடைபெறுவது இப்படித்தான். முழங்கால் மூட்டில் சந்திக்கும் இரு எலும்புகளின் மேலும் சில கருவிகள் (இவை 'மினிமல் இன்வேஸிவ் ரிஃப்ளெக்டிவ் அரேஸ்' எனப்படுகின்றன) நிலை நிறுத்தப்படுகின்றன. அடுத்ததாக கணினியின் கேமரா மூலம் செலுத்தப் படும் அகச் சிவப்புக் கதிர்கள் மேற்படிக் கருவி களில் பிரதிபலிக்கப்பட்டு கணினியில் முப்பரிமா ணப் படங்களைப் பதிவு செய்கிறது. இதன்மூலம் மூட்டின் இயல்பான வடிவமைப்பு நுணுக்க மாகத் தெரியவருகிறது. அகற்றப் படவேண்டிய மூட்டுப் பகுதியைத் துல்லிய மாகக் கணிக்க முடிவதால், செயற்கை மூட்டையும் (உலோகம் மற்றும் ப்ளாஸ்டிக்கினால் ஆனது) கச்சிதமாக உருவாக்க முடி கிறது. தவிர மூட்டு சரியாக இயங்க எலும்புகளோடு, அவற்றைச் சுற்றி உள்ள தசை கள், தசை நார்கள் ஆகிய வையும் போதிய இழுப்புசக்தி கொண்டிருக்க வேண்டும். இது போன்ற முக்கிய விவரங் களையும் கணினி தெரியப் படுத்துவது கூடுதல் சாத கம்" என்றார் டாக் டர் விஜய் வி. போஸ்.

- ஜி.எஸ்.எஸ்



கட்டணக் குறைப்பு ஏமாற்று வேலை!

போக்குவரத்துத் துறை

தமிழக அரசின் முக்கியமான துறைகளில் ஒன்று போக்குவரத்துத் துறை. ஜெயலலிதா ஆட்சியில் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர் நத்தம் விஸ்வநாதன். அம்மா ஆட்சியில் போக்குவரத்துச் சக்கரம் எப்படிச் சுழன்றது, புதிய அமைச்சருக்கு என்ன சவால்கள் காத்திருக்கின்றன? சொல்கிறார் நத்தம் விஸ்வநாதன்.



• நத்தம் விஸ்வநாதன்

"அம்மா ஆட்சி செய்த காலம் போக்குவரத்துத் துறைக்கு ஒரு பொற்காலம். 1996 - 2001-ல் தி.மு.க ஆட்சி செய்த ஐந்து வருடங்களில் போக்குவரத்துத் துறையில் நஷ்டம் 1500 கோடி ரூபாய். அவர்கள் ஆட்சி செய்தபோது ஒவ்வொரு வருடமும் சுமார் 300 கோடி நஷ்டம் ஏற்பட்டது. அம்மா பதவி ஏற்ற முதல் வருடத்திலேயே நஷ்டம் 100 கோடி அளவுக்குக் குறைக்கப்பட்டது. பின்னர் அடுத்த மூன்று வருடங்களும் லாபம் தான். ஆனால் கடைசி வருடத்தில் நஷ்டத்தைத் தவிர்க்க முடியவில்லை. இதற்குக் காரணம் 2004-க்குப் பிறகு ஐந்து முறை டீசல் விலையை மத்திய அரசு ஏற்றியதுதான். இதுதவிர போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குப் புதிய ஊதிய ஒப்பந்தம் போடப்பட்டு 20 சதம் போனஸ் வழங்கப்பட்டது. 5000 புதிய பேருந்துகள் வாங்கினோம். கிராமப்புற மக்கள் பயனடையும் வகையில் புதிய பேருந்துகள் விடப்பட்டன.

அடுத்து மினி பஸ்கள். அம்மா ஆட்சியில் மினி பஸ்கள் நிறுத்தப்பட்டது போலவும், 'நாங்கள் வந்தால் மீண்டும் மினி பஸ்களை இயக்குவோம்' என்றும் தி.மு.க சொல்லியிருக்கிறது. இது தவறான தகவல். சி.ஐ.டி.யு மற்றும் தி.மு.க தொழிற்சங்கங்கள், 'மினி பஸ் ஓடினால் அரசுப் பேருந்துகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படும்' என்று நிறுத்தச் சொன்னார்கள். ஆனால், நாங்கள் மினி பஸ்களுக்கு வரிகளைக் குறைத்தோம். இது தவிர பயணப் பாதையில் சலுகைகள் தரப்பட்டன. குறிப்பாக நகரப் பகுதிகளில் நான்கு கி.மீ தூரம்தான் மினி பஸ் ஓட வேண்டும் என்றிருந்ததை எட்டு கி.மீ என்று மாற்றினோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் 250 வழித்தடங்கள் மினி பஸ்களுக்கு ஒதுக்கப்பட்டன. ஆனால் துரதிருஷ்டவசமாக யாரும் ஆர்வம் காட்டவில்லை. 'இப்போது தி.மு.க தேர்தல் அறிக்கையில் ரயில் கட்டணங்களுக்கு இணையாக பஸ் கட்டணத்தைக் கொண்டு வருவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டமடைந்து வரும் இந்தக் கால

சவாலே சமாளி!

கட்டத்தில் - அதுவும் டீசல் விலை ஏகமாக உயரப் போகும் நிலையில் தி.மு.க அரசு, ரயில் கட்டணங்களுக்கு இணையாக பஸ் கட்டணத்தைக் கொண்டு வருவோம் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லியிருப்பது ஏமாற்று வேலை'' என்கிறார் நத்தம் விஸ்வநாதன்.

தி.மு.க அமைச்சர்களில் சுறுசுறுப்புக்கும், யதார்த்தமாகச் செயல்படுவதற்கும் உதாரணமாக, போக்குவரத்துத் துறை அமைச்சர் நேருவைச் சொல்லலாம். ''தேர்தல் அறிக்கையில் சொன்னதை கலைஞர் நிறைவேற்றுவார்'' என்கிறார் நேரு.

''ஜெயலலிதா ஆட்சியில் போக்குவரத்துத் துறைக்குப் பொற்காலம் அல்ல. அது 'போதாத காலம்'. 2001-ல் அவர் ஆட்சிக்கு வந்தவுடன் பஸ் கட்டணங்களை ஏகமாக ஏற்றிவிட்டார். ரயில் கட்டணங்களைவிட பஸ் கட்டணம் அதிகமாகி விட்டது. மேலும், போக்குவரத்துத் தொழிலாளர்களின் போனஸை 8.33 சதமாகக் குறைத்து அவர்கள் வயிற்றில் அடித்தார். அவர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த சலுகைகள் பறிக்கப்பட்டன. ஜனநாயக ரீதியில் போராட்டங்களை நடத்திய தொழிலாளர்களைச் சிறையில் அடைத்தார். குண்டர்கள் மூலம் வன்முறை ஏவி விடப்பட்டது. 2004 பாராளுமன்ற தேர்தல் தோல்விக்குப் பிறகே ஊழியர்களின் கோரிக்கைகளை அவர் பரிசீலிக்கத் துவங்கினார்.

கலைஞர் ஆட்சியில் உள்ளடங்கிய கிராமங்களுக்கும் மினி பேருந்துகள் விடப்பட்டன. ஆனால் கலைஞர் அரசால் கொண்டு வரப்பட்ட மற்ற நலத்திட்டங்களான சமத்துவபுரம், உழவர் சந்தை ஆகிய திட்டங்களை, ஜெயலலிதா எப்படி முடக்கினாரோ அது போலத்தான் மினி பஸ்களையும் முடக்கினார். மினி பஸ்களை இயக்குபவர்கள் எல்லாம் தி.மு.க அனுதாபிகள் என்று நினைத்தார் அவர். அவர்கள் மீது பல கெடுபிடிகள் கொண்டுவரப்பட்டன. இதன் காரணமாக வழித்தடங்கள் இயக்கப்படாமல் போனதால், கிராம மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். பாராளுமன்ற தோல்விக்குப் பிறகே வரிக் குறைப்பு என்றெல்லாம் அறிவித்தார். இருந்தும் தமிழகம் முழுதும் இயக்கப்பட்ட மினி பஸ்கள் பாதிக்கு மேற்பட்ட இடங்களில் இயங்கவில்லை. எனவேதான், 'மீண்டும் கிராம மக்களின் வசதிக்காக மினி பஸ்களை இயக்குவோம்' என்று கலைஞர் அறிவித்தார். நின்றுபோன வழித்தடங்களில் மீண்டும் மினி பஸ்களை இயக்க வேகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் ஊழியர்களின் கோரிக்கைகள் கருணையுடன் கவனிக்கப்படும். அவர்களின் ஒத்துழைப்புடன் நிர்வாகத்தைச் சீராக, சிறப்பாக நடத்துவோம்.

கலைஞர் மிக விரைவில் ரயில் கட்டணங்களுக்கு இணையாகப் பேருந்து கட்டணங்களையும் குறைத்து மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். டீசல் விலையேற்றம் இதற்குத் தடையாக இருக்காது'' என்றார் நேரு.

- கௌசி

படங்கள்: **ராஜன்**

• கே.என்.நேரு



"நான் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு அடுத்த அடி எதுன்னு தடுமாறிட்டு இருந்த காலகட்டம். 'அனுமார் பலம் அனுமாருக்குத் தெரியாது. அதுமாதிரி தான் உன்னோட திறமையும்' என்று, நான் குடியிருந்த வீட்டுக்காரம்மா கொடுத்த அறிவுரையும் ஊக்கமும்தான் எனக்குள்ளே புதுரத்தம் பாய்ச்சியது. எந்த லக்ஷ்மியை வேண்டுமானாலும் விட்டுட எல்லோரும் என்னை உதாசீனப்படுத்தினாங்க. என் கடமை ஒவ்வொரு கடையாக ஏறி இறங்குவது. முடிவுல நல்ல பலன் கிடைச்சது. இந்தத் தொழில்ல 1973-ல் எனக்குத் தினமும் நூற்றி ஐம்பது ரூபாய்க்கு வியாபாரம் நடந்தது. ஆனாலும் பெருசா முன்னேற முடியலையேன்னு கும்பகோணத்துக்குக் கிளம்பி வந்து அங்கே டிரைவிங் கத்துக்கிட்டேன். அப்போ சென்னை சிவானந்தா குருகுலத்துல கார் டிரைவரா வேலை கிடைச்சது. ஆனா ஒரு சைக்கிள் காணாமப் போனதுக்கான பழி என் மேலே விழ, கோபத்துல அங்கிருந்து விலகினேன். ஒரு கதவை மூடின கடவுள், அடுத்த ரெண்டு கதவுகளைத் திறந்து வைச்சிருந்தாரு. ஒரே நாள்ல பல்லவன் போக்குவரத்துக் கழகத்துலேயும், மத்திய தொழில் பாதுகாப்பு படையிலேயும் எனக்கு வேலை கிடைச்சது. டிரைவரா



திருப்பதியில் வந்த திருப்பம்!

லாம். ஆனா நான் தைரியலக்ஷ்மியை மட்டும் என்னைக்கும் விட்டதில்லை. ரொம்பத் துணிச்சலா புதுத் தொழில்ல இறங்கினேன். நின்னு காட்டினேன்" என்று புன்முறுவல் பூக்கச் சொல்கிறார் 'ஜெய்மாஹி மேரேஜ் சர்வீஸ்' நிறுவனரான ஜெயராமன். இங்கே தமது வாழ்க்கை அனுபவத்தை ருசிகரமாக விவரிக்கிறார்.

"கும்பகோணத்தைச் சேர்ந்தவனான நான் 1970-ல் சென்னையிலுள்ள அண்ணனோட வீட்டில் தங்கிப் படிச்சேன். குடும்பத்தில் வறுமை. பள்ளிக்கூடம் விட்டவுடனே, மொத்த விலையில பிரவுன் கவரை வாங்கி சென்னை முழுக்கவுள்ள ஸ்டேஷனரி கடையில விற்பேன். ஆரம்பத்துல ரொம்ப நாள் இருந்தது போதும்னு நான் மிலிட்டரி வேலையைத் தேர்ந்தெடுத்தேன். ஆனாலும் இந்த வேலையை நான் கட்டிக்கப்போற பொண்ணு விரும்பலை. எனக்கும் ஏதாவது வியாபாரம் செய்யலாம்னு ரொம்ப நாளா ஆசையா இருந்தது. நான் ஆறாவது படிக்கும்போதே வீட்டுத் திண்ணையில் மிட்டாய், பல்பம் எல்லாம் வித்தவன்தான். 1989-ல் நண்பர்களோட சேர்ந்து ஜெய்மாஹி மார்க்கெட்டிங்ன்னு தேங்காய் மண்டி ஆரம்பிச்சேன். ஆனா ஒன்றரை வருஷம் கழிச்சுப் பார்க்கும்போது அதுல நஷ்டம்தான் மிஞ்சியது.

உடனே நண்பர்களிடமிருந்து கடையை வாங்கி நானே நடத்த ஆரம்

பிச்சேன். அப்போதான் திருப்பதியில நடக்குற ஒரு கல்யாணத்துல சமையல் வேலை காண்ட்ராக்டுக்கு வாய்ப்புக் கிடைச்சது. என் அப்பா கேட்டரிங் பிஸினஸ் பண்ணியிருந்தாலும் எனக்கு இந்தத் தொழில் புதுசு. ஆனாலும் என் அப்பாகிட்ட வேலை செஞ்ச ஆட்களை வைச்சு தைரியமா திருப்பதி போனேன். ஒரு மனிதன் எப்போ திருப்பதி போனாலும் திருப்பம்தான்னு சொல்வாங்க. எனக்கும்தான். கல்யாணச் சாப்பாடு சாப்பிட்ட மக்கள் குளிர்ந்து போனாங்க. அந்த இடத்திலேயே ரெண்டு ஆர்டர்கள் கிடைச்சது. இப்படி பெருமாள் மலையில் தொடங்கியதுதான் ஜெய் மாஹி மேரேஜ் சர்வீஸோட வெற்றிப் பயணம்'' என்றவர், தமது தொழில் வளர்ச்சி, நுணுக்கங்கள் பற்றி மேலும் சொல்கிறார்.

"ஆரம்பிச்ச வேகத்துல சட்டுன்னு தொய்வு ஏற்பட்டுடுச்சு. தளராம ஒவ்வொரு கல்யாண மண்டபமா போய் பார்ட்டிகளோட போன் நம்பர்களை வாங்கினேன். சில பேர் நம்பிக்கையோட பொறுப்பைக் கொடுத்தாங்க. பிஸினஸ் மறுபடியும் துளிர் விட்டுச்சு. கல்யாண வீட்டுல சாப்பிடுற மக்கள்தான் எப்போதும் எங்களோட விளம்பரதாரர்கள்.

சக்சஸ் ஸ்டோரி



ஒரு சமயம் எங்க நளபாகத் திறமையை நேரில் கண்ட அனுராதா ரமணன், பிறகு அவங்க வீட்டு விசேஷங்களுக்கு எங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாங்க. அதுக்கப்புறம் நடிகர் ஜெயராம், அமரர் சாவி, சுபான்னு பல வி.ஐ.பி வீட்டுக் கல்யாணங்களை நாங்க நடத்தினோம்.

இந்தத் தொழில்ல ஊழியர்களைக் கையாள்றது ஒரு டெக்னிக். யாருக்குப் பணிஞ்சு போகணுமோ அவங்க கிட்டே பணிஞ்சுதான் போகணும். நாம ஜாங்கிரின்னு சொன்னாலும் சுத்தறது அவங்கதானே. சமையல் கலையில் இதுதான் முறைன்னு எதுவும் கிடையாது. கண் பார்த்து கை போடறது தான் அளவு. குறைகள் வரும். நூறு சதவிகிதம் சரியா பண்ணவே முடியாத தொழில் இது. இன்றைக்கு எங்களுக்கு சென்னையிலுள்ள மெயின் அலுவலகத்தோடு புதுச்சேரி, கும்பகோணத்தில் கிளைகள் உண்டு. சென்னை என்றால் ஒரு நாளைக்கு மூன்று ஆர்டர்கள் ஏற்றுக் கொள்வோம். வெளியூர் என்றால் ஒன்று. பணியைச் சரிவரச் செய்ய ஆறு மேலாளர்கள், ஏழு சூப்பர்வைஸர்கள் உண்டு.

என் குரு, என் குடும்பத்தினர், ஊழியர்கள் என பலரும் ஏணிப்படிகளாக இருந்துதான் என்னை ஏற்றி விட்டுள்ளனர். குரு பக்தி, தாய் - தகப்பன் பக்தி, தெய்வ பக்தி இருந்தால் ஒருவன் ஐந்தே வருடங்களில் விறுவிறுவென முன்னேறிவிடலாம். அதற்கு நானே முன்னுதாரணம்."

- செந்தில்



'கட்டாயம் தமிழ் படிங்க!'

ப்ளஸ் டு தேர்வில் ஆயிரத்து நூற்றி எண்பது மதிப்பெண்கள் எடுத்து நங்கநல்லூர் பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் பெருமையை ஊரறியச் செய்திருக்கிறார் 'முதல்வன்' பரத்ராம். இந்த இளம் சாதனையாளரிடம் ஒரு மினி பேட்டி.

ரிசல்ட் வந்த பிறகு யாருக்கு நன்றி சொன்னீங்க?

"கடவுளுக்குத்தான். உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகிலுள்ள பரிக்கல் லக்ஷ்மி நாராயணன் கோயிலுக்குப் போய் சாஷ்டாங்கமா வணங்கி கடவுளுக்கு நன்றி சொன்னேன்."

ஸ்கூல்ல நூற்றுக்கு நூறு வாங்கினது உண்டா?

"ம்ஹூம். எங்க ஸ்கூல்ல இன்னும் நல்லா படிக்கட்டும்னு தேர்வுகள்ல நூறு மார்க்குகள் போடவே மாட்டாங்க. நான் முதன்முதலா சென்டம் வாங்கினது பப்ளிக் எக்ஸாம்லதான்."

பத்தாவதுல எவ்வளவு மதிப்பெண்கள் வாங்கினீங்க?

"1028. இன்னும் நிறைய எதிர்பார்த்தேன். தமிழ் - ஆங்கிலம் இரண்டுலேயும் மார்க்குகள் குறைஞ்சிடுச்சு. ஆனாலும் ஸ்கூல் ஃபர்ஸ்ட்.

தமிழ்ல நூறு மார்க்குகள் போடாதது பற்றி?

"வேண்டவே வேண்டாம் தமிழ் தேர்வோட அழகே அதுதானே. நான் கட்டாயம் தமிழ் படிச்சாகணும்னு படிச்சவன். என்னை மாதிரி எல்லோரும் தமிழைக் கட்டாயம் ஸ்கூல்ல படிக்கணும்ங்கிறது என் வேண்டுகோள்."

டீ.வி பார்த்ததேயில்லையா?

"டீவியை அதிகமா ஆஃப் பண்ணித்தான் பார்த்திருக்கேன். சில சமயம் தாத்தா வீட்டுல 'மெட்டி ஒலி' பார்க்க வாய்ப்புக் கிடைக்கும்."



"தேர்வு எழுதும்போது ஏதாவது சென்டிமெண்ட்?

"ம்ஹூம். எல்லா தேர்வுகளும் இங்க் பேனாவுலதான் எழுதினேன். இது எங்க ஸ்கூல் கட்டுப்பாடு. இங்க் பேனாவுல கையெழுத்து முத்து முத்தா வரும்."

பொழுதுபோக்கு

கர்நாடக இசை கேட்பது. குறிப்பா எம்.எஸ். பாடல்கள்.

- ச.ந.கண்ணன்

ராயல் சல்யூட்!



வட்டமேஜை

ஆங்கிலப் படம்தானே என்று ஆஹோ, ஓஹோவெனப் பாராட்டாமல் 'பொசைடன்' படத்தின் நிறைகுறைகளை சரியாகக் கூறியிருப்பது 'கல்கி'க்கே உரிய தனி பாணி!

கோவை, கா.ராமு அர்விந்த்

மாணவ சமுதாயம் படித்துப் பயன் பெற வேண்டிய ஓர் அற்புதமான அறிவியல் தொடராக 'சாகஸம் ஆயிரம்' திகழ்கிறது!

கும்பகோணம், கே.என்.பாலகிருஷ்ணன்

பாதிக்கப்பட்டவர்கள் யாரானாலும் கொதித்து எழுவது சகஜம். இசையமைப்பாளர் பரத்வாஜின் கோபம் நியாயமானதே!

மேலகிருஷ்ணன்புதூர், ஆர்.கே.லிங்கேசன்

அட்டைப்பட அனிஷாவின் காந்தக் கண்கள், எங்களைச் சட்டென சுண்டி இழுத்தன.

மதுரை, ஆர்.லட்சுமி

புதிதாகப் பொறுப்புக்கு வந்துள்ள அமைச்சர்கள் சந்திக்க வேண்டிய சவால்களை, துறையின் முன்னாள் அமைச்சர்களிடம் கேட்டு விளக்கமளிக்கும் 'சவாலே சமாளி' பகுதி ஆரோக்கியமான அலசல்!

ஈரோடு, ரேவதிப்ரியன்

மனித நேயம் மரித்துப்போன இவ்வுலகில் பெரியசாமி போன்றவர்களைப் பார்ப்பது கடினம். அவருக்கு ஒரு ராயல் சல்யூட்!

திருவாரூர், எஸ்.பாலசந்தர்

விஜயகாந்தின் பதில்களில் ஆவேசமில்லாத, அரசியல் பக்குவம் மிளிர்கிறது!

இனாம்மணியாச்சி, ச.ஆ.கேசவன்

ஸ்பீடு போஸ்ட்

- கடவுளே இல்லையெனக் கூறும் பெரியார், இல்லாத கடவுளை ஆராதிக்க எல்லா சாதியினருக்கும் உரிமை வேண்டும் எனக் கேட்டிருப்பாரா?

பொன்மலை, ஆர்.பிரகாஷ்

- யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தின் சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்த கட்டுரை கலக்கல்!

திருப்பரங்குன்றம், டி.கே.சுப்பிரமணியன்

- அர்ச்சகர் விஷயத்தில் தகுதிப் பயிற்சி என்பது வேறு. இட ஒதுக்கீடு என்பது வேறு. பக்தி என்பது பிறஜாதியினருக்கு இல்லையா? அல்லது வைதிக விஷயங்களை எல்லாரும் அறிவது பாபமா என்ன?

அரங்கநாதபுரம், எஸ்.ஜி.ராஜன்

இந்த இதழின் பக்கம் 26, 27-ல் வெளியாகியுள்ள கணபதி ஸ்தபதியின் படங்கள்: புதூர் சரவணன்

மந்திரம் ஒரு மண்டலம்

கிருஷ்ணா

"போச்சு, மானம், மரியாதை எல்லாம் போச்சு" என்று புலம்பியபடி உள்ளே வந்த மனைவியைக் கண்டு திடுக்கிட்டான் ராகவன்.

முந்தின நாள் அலுவலகத்துக்கு மதியம் அரைநாள் லீவு போட்டுவிட்டு, நண்பர்களுடன் தண்ணியடித்தது கீதாவுக்குத் தெரிந்து விட்டதோ என்று பயந்தான். இத்தனைக்கும் ரகசியமாய், பிரம்மச்சாரி நண்பனின் அறையில் அல்லவா 'பார்ட்டி' நடந்தது.

"ஏய், சனியனே" என்று கீதா அலறியதும், நிஜமாகவே அரண்டு போனான்.

"எந்தச் சனியனைக் கூப்பிடறே?" என்று கேட்டபடி வந்தார், ராகவனின் அப்பா.

"எல்லாம் நம்ம வீட்டு சின்னதைத்தான். மானமே போச்சு. பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டு வரேன். மார்க்கா வாங்கியிருக்கான்? வகுப்பிலே கூரையையே பார்த்துண்டு உட்கார்ந்திருக்கானாம். கவனமே இல்லையாம். ஏதாவது தியான வகுப்புக்குக் கூட்டிட்டுப் போகச் சொல்றார் வாத்தியார்."

ராகவனுக்கு நிம்மதியாகிப் போனது. எட்டாவது படிக்கும் தன் மகன் கிரியின் பக்கம் அம்பு பாய்ந்துவிட்டாலும், அவன் படிப்பைப் பற்றிய கவலை மனத்தை அலைக்கழித்தது.

அங்கங்கு தேடியதில், யாரோ குவி எனும் மையத்தைக் கைகாட்டினர்.

"மனத்தைக் குவிய வைத்து, புத்தியைத் தீட்டுவதால்தான் எங்கள் மையத்தின் பெயர் 'குவி' என்றார் அந்த நிலையத்தின் தலைவர்.

ஆயிரம் ரூபாய் செலவு செய்து மகனை 'குவி'யில் சேர்த்தார்கள். அங்கு சென்று வந்த சில நாட்கள், இரவு சீக்கிரம் தூங்காமல் அடம்பிடித்தான். பன்னிரண்டு மணிக்கு மேல்தான், தூங்கப் போனான். பரவாயில்லை சுறுசுறுப்பாய் இருக்கிறானே என்று சந்தோஷப்பட்டார்கள்.

யதேச்சையாய் ஒரு நாள் 'குவி'க்குப் போனபோதுதான் விஷயம் விளங்கியது.

கண்மூடி தியானம் செய்கிறேன் பேர்வழி என்று குறட்டை விட்டுக் கொண்டிருந்தான் கிரி.

"தூக்கமும், ஒரு வகை தியானம்தான்" என்ற வெண்தாடி வேந்தரை முறைத்து விட்டு, மகன் கிரியை எழுப்பி வீட்டுக்குக் கூட்டி வந்தான் ராகவன்.

அவன் மனைவி கீதாவும், தன் பங்குக்கு 'அதிர்வுகள்' என்ற வகுப்பில் சேர்த்து விட்டாள். இசை மூலம் மனத்தை அதிரச் செய்து, மூளையைத் தூண்டி விடுவார்கள் என்று சொன்னாள்.

எம்டிவி கணக்காய் பாட்டுப் பாடி, நடனம் ஆடி, வீட்டைத் துவம்சம் செய்தானே ஒழிய, படிப்பில் எந்த முன்னேற்றமுமில்லை. செலவுக் கணக்குத்தான் ஏறியதே ஒழிய, கிரியின் மதிப்பெண்கள் அதே அதல பாதாளத்திலேயே தொங்கின.

"டேய் ராகவா, கீதா இப்படி வாங்க. நம்ம கிரி நல்ல மதிப்பெண் பெற ஒரு மந்திரம் இருக்கு" என்றார் ராகவனின் அப்பா.

ராகவனும் கீதாவும் பரபரப்புடன் அவரை நோக்கினர்.

"என் நண்பர் ஒருத்தர் ஜோசியம் பார்க்கறவர். முருகன் உபாச



கரும் கூட நம்ம கிரி பற்றிச் சொன்னேன். ஏதோ தோஷம் இருக்காம் நம்ம வீட்டுல! ஒரு ரகசிய மந்திரம் சொல்லித் தந்திருக்காரு. ஒரு மண்டலம் சொல்லணுமாம்."

"மண்டலமா?"

"போடா அசட்டு ராகவா! ஒரு மண்டலம்னா, நாற்பத்தெட்டு நாள்னு கணக்கு."

"அப்ப உடனே மந்திரம் சொல்ல ஆரம்பிங்கப்பா" என்று ராகவனும் கீதாவும் குதித்தனர்.

"அதுக்கென்ன இன்னிக்கே ஆரம்பிச்சுடலாம். ஆனால், சில நிபந்தனைகள் சொல்லியிருக்காரே ஜோசியர்."

"அது என்னப்பா, தினசரி வடையும், பாயசமும் பண்ணி சாமிக்கு நைவேத்யம் செய்யணுமா?

"போடா, சாப்பாட்டு ராமா" என்று ராகவனின் அப்பா சிரித்தார்.

"நிபந்தனை என்னவாம்?" என்று கீதா விஷயத்திலேயே கண்ணாய் இருந்தாள்.

"இந்த வீட்டிலே ஹாலில் அமர்ந்து மந்திரம் ஜபிக்கணுமாம். அப்பத்தான் வீடு முழுக்க சக்தி பரவுமாம்."

"அதுக்கென்னப்பா, தாராளமாய் ஜபம் பண்ணுங்க."

"இந்த நிமிஷத்திலேயிருந்து, ஹாலில் உள்ள எந்தப் பொருளையும் நகர்த்தக் கூடாது. அதே மாதிரி மின்சாரத்தை ஹாலில் உபயோகிக்கக் கூடாது."

"அப்ப இருட்டாயிருக்குமே."

"அகல் விளக்குகளை ஏற்றி வைக்கணுமாம். அகல் விளக்கில் நல்லெண்ணெய் ஊற்றி எரிய வைத்தால், ஹால் தெய்வீக ஒளியால் நிரம்பிவிடுமாம். தினசரி காலையும், மாலையும் நான் மந்திரம் ஜபிக்கப் போறேன், ஹாலில் உட்கார்ந்து."

"பண்ணுங்க! நம்ம கிரி படிச்சு உருப்பட்டால் சரி" என்றனர் ராகவனும் கீதாவும் கோரசாய்.

ஒரு மண்டலம் முடிவதற்குள் வீட்டில் பல மாற்றங்கள் நடந்தன. அந்த மாதம் நடந்த தேர்வில், கிரியின் மதிப்பெண்கள் எல்லாப் பாடங்களிலும் கணிசமாய் உயர்ந்தன.

ராகவனுக்கும், கீதாவுக்கும் இடையே சண்டைகள் குறைந்தன. வீட்டில் ஒருவரோடு ஒருவர் நன்கு சிரித்துப் பேசி, புரிதலுடன் கூடிய நேசம் வளர்ந்திருந்தது.

ஒரு மண்டலம் முடிந்தவுடன் கீதா பாயசம் செய்து, மந்திரம் ஜபித்ததை நிறைவு செய்தாள்.

"நிஜமாகவே உங்க ஜோசியர், பெரிய ஆள்தான் அப்பா. மந்திரத்தோட சக்தியாலே கிரியும் நல்லாப் படிக்கிறான், நம்ம வீட்டிலும் சந்தோஷம் நிறைஞ்சிருக்கு" என்றான் ராகவன்.

ராகவனின் அப்பா புன்னகைத்தார்.

"அப்பா, ஏதோ தோஷம் இருக்குன்னு சொன்னீங்களே. அது நிவர்த்தியாயிடுச்சான்னு உங்க ஜோசியரிடம் கேளுங்க."


"அவரை என்ன கேட்கறது. நானே சொல்றேன்! தோஷம் ஓடியே போச்சு! அது என்ன தோஷம் தெரியுமா?"

அனைவரும் ஆவலாய்ப் பார்த்தனர்.

" டீவி தோஷம்!" என்றார்.

"என்னப்பா சொல்றீங்க?"

"ஆமாண்டா! நம்ம கிரியோட கவனச்சிதறலுக்குக் காரணமே, அதிக நேரம் நம்ம வீட்டுல டீவி ஓடினதுதான். டீவி ஒரு பொழுதுபோக்குச் சாதனம்! ஊறுகாய் மாதிரி தொட்டுக்கணுமே ஒழிய, முழுநேரமும் அதே கதின்னு கிடக்கக் கூடாது. நேரிடையாய் இதை நான் சொன்னால், கேட்க மாட்டீங்க. அதனாலேதான் ஹால், மந்திரம், அகல் விளக்கு, மின்சாரமே கூடாது எல்லாம்..." என்று சொல்லிச் சிரித்தார், ராகவனின் அப்பா. ○



"சாயந்தரம் ஏழு மணியானா தானா கண்ணீர் வந்துடுது டாக்டர்!"

"இதுக்கு 'மெகா சீரியலோ போபியா'ன்னு பேரு. டீவியை வித்துட்டீங்கன்னா சரியாயிடும்!"

- கொங்கணாபுரம் வே. செந்தில்



மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும்!

"நான் பாட்னா பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது இரவு எதிர்பாராத விதமாய் வீடு திரும்ப வெகு நேரமாகிவிட்டது. என் சைக்கிளில் விளக்கு இல்லாததால் போலீஸ் பிடித்துக் கொண்டது. 'சம்மன் வரும்; ஐந்து ரூபாய் அபராதம் கட்டவேண்டும்' என்றார்கள். ஆனால் சம்மன் ஏதும் வரவில்லை. நானும் அதை அப்படியே மறந்து விட்டேன். இரண்டு வருடம் கழித்து, கோர்ட்டிலிருந்து பிடிவாரண்ட் வந்தது. குடும்பத்தில் அனைவரும் அதிர்ந்து போனோம். எனக்கு சம்மன் ஏதும் வராத நிலையில், சம்மன் அனுப்பி அதை நான் ஏற்க மறுத்ததால் பிடி வாரண்ட் என்று கோர்ட்டில் சொன்னார்கள். சிறு விஷயத்தில் கூட போலீஸ் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்கிறார்களே என்று எனக்கு வருத்தமாக இருந்தது. எனவே நான் ஐ.பி.எஸ். அதிகாரியான போது, சாமானிய மக்களை அலட்சியத்துடன் துன்புறுத்தக் கூடாது; மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்பதை எனது கொள்கையாக வைத்துக்கொண்டேன்" என்கிறார் டி. முகர்ஜி.

தமிழ்நாட்டின் புதிய காவல்துறை தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் டி.முகர்ஜியின் பூர்வீகம் மே.வங்காளம் என்றாலும், பிறந்து, வளர்ந்தது எல்லாம் இன்றைய ஜார்கண்ட் மாநிலத்தில். அப்பாவுக்கு பீகார் அரசின் பொதுப் பணித்துறையில் வேலை. அம்மா ஜமீன் பரம்பரையில் வந்தவர்.

"எனக்கு விஞ்ஞானியாக வேண்டும் என்ற ஆவல் இளம் வயதிலிருந்தே இருந்தது. ஆனால் என் அம்மாவுக்கு நான் போலீஸ் அதிகாரி ஆகவேண்டும் என்று ஆசை. அதனால்தான் நான் டிராம்பேயில் உள்ள பாபா அணுசக்தி மையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், அந்த வேலையை ஏற்றுக்கொள்ளாமல், அம்மா ஆசைப்பட்டபடி, சிவில் சர்வீஸ் தேர்வு எழுதினேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ் என்று நான் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம் என்ற சூழ்நிலையில் காக்கிச் சீருடையைத் தேர்ந்தெடுத்ததில் என் அம்மாவுக்கு மிகவும் சந்தோஷம்" என்று கூறுகிறார் முகர்ஜி.

சிறந்த சேவை செய்ததற்காக ஜனாதிபதி பதக்கம் உட்பட பல விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றிருக்கும் முகர்ஜி, தம் அனுபவங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகச் சொல்லியது இதுதான்:

"எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது, விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் அந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, நான் ராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி. மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு, ஒரு புல்லட்டைக்கூட பயன்படுத்தாமல், விடுதலைப்புலிகள் வசமிருந்த அத்தனை ஆயுதங்களையும் பறிமுதல் செய்தேன். ராமநாதபுரம் பகுதியில்தான் மிக அதிமாக ஐந்து டிரக் அளவுக்கு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன."

சந்திப்பு, படம்: **எஸ். சந்திரமௌலி**

புதிர்!



இதில் எந்த மூங்கில்
புல்லாங்குழல் ஆகுமோ
எது அடுப்பெரிக்க உதவுமோ
கூடை முடைந்து ஆடுகள் அடைக்க
தட்டிவைத்து ரகசியங்கள் காக்க
அநேகரின் சிம்மாசனமாக
உரிப்பவனுக்கு உணவாக
இறுதியில் ஊர்வலம் போக
எந்த மூங்கில் எதுவாகுமோ
எல்லாம் ஒற்றுமையாய் நிற்கின்றன
வர்ணம் தீட்டப்படாமல்

ஒண்டிப்புதூர் தேவமணி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.



உலகின் முதல் 50,000 கலர்களை பட்டில் அறிமுகப்படுத்திய ஆரெம்கேவியின் கைதேர்ந்த நெசவாளர்களால் வடிவமைக்கப்பட்டு நுட்பமாய் நெய்யப்பட்ட இந்த நலங்கு பட்டு ஒவ்வொன்றும் ஒரு கலைப் பெட்டகம்.

இதுவரை பார்த்திராத அபூர்வ கலர் பட்டில் ஜொலித்திட -ஆரெம்கேவியின் இந்த கலர் பிராமிஸ்.

RmKV
Indha colour Promise
எல்லா கலர் பட்டும் ஆரெம்கேவியில் மட்டும்

பனகல் பார்க், சென்னை. Ph: 044-281 44445 | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி. Ph: 0462-2333105 | www.rmkv.com

mudra 7393